பக்கங்கள் - 40
விலை - 40 ரூபா

# உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 213 ஆனி 15 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 30 ஜீன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

மகாராஜா பொதிகள் சேவை
லண்டன் 600/-
பிரான்ஸ் 800/-
ஜேர்மனி 650/-
11 kg க்கு மேல் 1kg க்கான கட்டணம்
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 4925024/021 2224338

# தேர்தலில் போர்க்குற்றவாளிகள் களமிறங்கினால் தோல்வி உறுதி

## அவர்களை எவரும் விரும்பவே மாட்டார்கள்; தலைமை அமைச்சர் ரணில் அதிரடிக் கருத்து



கொழும்பு, ஜீன் 30

'அனைத்துலக ரீதியில் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியவர்களும், நாட்டை நாசமாக்கியவர்களும் அரச தலைவர் தேர்தலில் களமிறங்கினால் படுதோல்வியடைந்தே தீருவார்கள். அவர்களை நாட்டு மக்களும் விரும்பமாட்டார்கள்; பன்னாட்டு சமூகத்தினரும் விரும்பமாட்டார்கள்.' இவ்வாறு தலைமை அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 02

## தமிழ் அரசுவின் தலைவராக மீண்டும் தெரிவானார் மாவை

யாழ்ப்பாணம், ஜீன் 30

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக மீண்டும் மாவைசேனாதிராசா தெரிவு செய்யப்பட்டார். பொதுச் செயலராக மீண்டும் துரைராஜசிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

தமிழ் அரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாட்டின் பின்னர் செயற்பட வேண்டிய செயற்குழு மற்றும் மத்தியகுழு உறுப்பினர்கள் நேற்றையதினம் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம் பெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். இதன்போதே குறித்த தெரிவும் இடம்பெற்றது.

துணைத் தலைவர்களாக பொ.செல்வ 02

## தேர்தலில் ஐ.தே.கவே படுதோல்வியடையும்

### அடித்துக் கூறுகின்றார் மகிந்த

கொழும்பு, ஜீன் 30

'ஊழல், மோசடியால் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்த ஐக்கிய தேசியக் கட்சியினரை நாட்டு மக்கள் மறக்கவேமாட்டார்கள். எனவே, விரைவில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் ஐக்கிய தேசியக் கட்சி தான் படுதோல்வியடையும். நாம் வென்றே தீருவோம்.'

இவ்வாறு முன்னாள் அரச தலை 02



## வடமராட்சியில் நேற்று 193கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஜீன் 30

வடமராட்சி நெல்லியடி தில்லையம்பலம் பகுதியில் நேற்று 193.5 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது.

அரச புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுக் காலை 11 மணியளவில் பற்றைக்காடு ஒன்றில் இருந்த ஆறு உரைப்பை 02

## சுன்னாகத்தில் குழுமோதல் 9 பேர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜீன் 30

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாம் பகுதியில் இரு குழுக்களின் இடையே ஏற்பட்ட மோதலால் வெட்டுக் காயங்கள் மற்றும் அடி காயங்களுடன் 9 பேர் மருத்துவமனையில் சேர்க்கப் 02

## ஐ.தே.க. எழுச்சிப் பயணம் நாளை முதல் ஆரம்பமாம்

கொழும்பு, ஜீன் 30

ஐக்கிய தேசியக் கட்சியின் எழுச்சிப் பயணம் ஜீலை மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகும் என்று தெரிவித்தார் அமைச்சர் ரவி கருணாநாயக்க.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளக மட்டத்தில் 02

## தயாசிறிக்கு மீண்டும் அழைப்பு

கொழும்பு, ஜீன் 30

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டிருந்த போதும், தயாசிறி ஜயசேகர முன்னி 02

## வவுனியாவில் நேற்று வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா, ஜீன் 30

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளமருதங்குளம் காட்டுப் பகுதியில் மரமென்றின் அடியில் பிளாஸ்ரிக் பையில் சுற்றப்பட்ட நிலையில் வெடிபொருள்கள்நேற்று மீட்கப்பட்டன.

ஓமந்தை பொலிஸா 02



## வன்செயல் தூண்டும் பேச்சுகள் இலங்கையில் அதிகரித்துள்ளன

### ஹனா சிங்கர் கவலை

கொழும்பு, ஜீன் 30

வன்செயல்களைத் தூண்டி விடக்கூடியதான வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் இலங்கையில் அதிகரித்துள்ளன என்று கவலை வெளியிட்டார் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்.

வெறுப்புப்பேச்சின் தன்மை குறித்தும், வன்செயல்களைத் தூண்டி விடுவதில் 02

## சாவுத் தண்டனை விதிக்கப்படுவோரின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது

கொழும்பு, ஜீன் 30

போதைப்பொருள் வழக்கில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்படவுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை சட்டமா அதிபர் திணைக்களம் அரச தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளது. 02

## மெய்வன்மை விழா

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாணம் சரஸ்வதி முன்பள்ளியின் 34 ஆவது மெய்வன்மை விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் கிழக்கு பொற்பதி அறிவாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
பொற்பதி அறிவாலயம் மற்றும் சரஸ்வதி அறிவாலயம் ஆகியவற்றின் தலைவர் சன.வாமதேவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய முன்பள்ளிக்கல்வி உதவிப் பணிப்பாளர் சி.கனேசலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

## ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 30
சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு தலைவர் சனுஜா இராசேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
ஆசியுரையை பன்னாட்டு இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர் து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆற்றவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

அளவெட்டி, ஜூன் 30
அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை முதன்மை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் லங்காபிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் ஈஸ்வரநாத பிள்ளை குமரன், சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
ஆசியுரையை அளவெட்டிகும் பழவளைப் பிள்ளையார் ஆலய முதன்மைக்குரு சு.குமாரதாசக் குருக்கள், அமெரிக்க மிசன் திருச்சபை அளவெட்டி அருட்தந்தை வி.ராஜ்குமார் ஆகியோர் வழங்கவுள்ளனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-36)

## தேர்தலில்...

பன்னாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் இலங்கை அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும். நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற தேர்தலாகும்.
எனவே, இந்தத் தேர்தலை ஐக்கிய தேசியக் கட்சி தனித்து நின்றே எதிர்கொள்ளும். கடந்த இரு தடவைகள் நடைபெற்ற அரச தலைவர் தேர்தல்களில் பொது வேட்பாளர்களையே ஐக்கிய தேசியக் கட்சி ஆதரித்தது. ஆனால், இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேட்பாளர் களமிறங்குவார். வேட்பாளர் தெரிவில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பம் என்று ஊடகங்கள் வெளியிடும் செய்திகள் பொய்யானவை தவறானவை. அரச தலைவர் தேர்தல் அறிவிப்பு வெளியானதும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரின் பெயரை கட்சியின் உயர்பீடம் அறிவிக்கும்.
எதிரணியில்தான் வேட்பாளர் தெரிவு தொடர்பில் சர்ச்சைகள் நிலவுகின்றன. மீண்டும் குடும்ப ஆட்சிக்காகச் சிலர் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றனர். ஒன்றை மட்டும் நாம் சொல்லிவைக்க விரும்புகின்றோம். அதாவது, அனைத்துலக ரீதியில் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியவர்களும், நாட்டை நாசமாக்கியவர்களும் அரச தலைவர் தேர்தலில் களமிறங்கினால் படுதோல்வியடைந்தே தீருவார்கள். அவர்களை நாட்டு மக்களும் விரும்பமாட்டார்கள்; அனைத்துலக சமூகத்தினரும் விரும்பமாட்டார்கள். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.
ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எதுவுமில்லை. கொடூர சர்வாதிகார ஆட்சியிலிருந்து இந்த நாட்டை நாம் மீட்டெடுத்தோம். பாரிய அபிவிருத்திப் பணிகளை வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நாம் முன்னெடுத்து வருகின்றோம்' என்றார். (22)

## தேர்தலில் ஐ.தே...

வரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
பன்னாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'அரசதலைவர் தேர்தலில் போட்டியிட ஐக்கிய தேசியக் கடசிக்குள் தகுதியானவர்கள் எவருமே இல்லை. ஆனால், எமது அணிக்குள் பல பேர் தகுதியானவர்களாக இருக்கின்றார்கள். அதனால்தான் எமது அணிக்குள் வேட்பாளர் தெரிவில் சர்ச்சை நீடிக்கின்றது என வெளியில் இருப்பவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.
அரசதலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் எமது அணி தனித்துப் போட்டியிடும் அல்லது கூட்டணியாகப் போட்டியிடும். இது தொடர்பில் எமது ஆதரவுக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.
எனினும், தேர்தல்களில் நாம் பலம் பொருந்திய வெற்றியீட்டக்கூடிய வேட்பாளர்களையே களமிறக்குவோம். ஊழல், மோசடியால் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்த ஐக்கிய தேசியக் கட்சியினரை நாட்டு மக்கள் மறக்கவேமாட்டார்கள். எனவே, விரைவில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் ஐக்கிய தேசியக் கட்சிதான் படுதோல்வியடையும். நாம் வென்றே தீருவோம். இது உறுதி.
**நாம் ஆட்சிக்கு வந்ததும் அந்நிய சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்போம்.** தீவிரவாதத்தைக் கூண்டோடு இல்லாதொழிப்போம். பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வோம். ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். ஊழல், மோசடிக் குற்றவாளிகளைச் சிறைக்குள் தள்ளுவோம்' - என்றார். (ம-22)

## சாவுத்...

அந்த வகையில் சாவுத் தண்டனை பெற்றுள்ளோரில் 8 முஸ்லிம்கள் 8 தமிழர்கள் நான்கு சிங்களவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன் முதற்கட்டமாக சிங்களவர்கள் இருவர் தமிழர் மற்றும் முஸ்லிம் ஒருவர் உட்பட 4 பேர் சாவுத் தண்டனைக்கு உட்புடுத்தப்படவுள்ளனர்.
இந்த நிலையில் சாவுத் தண்டனைக்கு உட்படுத்த 20 பேர் கொண்ட பட்டியலை சட்ட மா அதிபர் திணைக்களம் அரச தலைவருக்கு அனுப்பி வைத்தது. அதன்படி குறித்த 20 பேரின் பெயர்கள் பின்வருமாறு, எம்.கே. பியதிலக்க, எம்.தர்மகரன், எம்.எஸ்.எம்.மஸ்தார், ஜே.ஏ.பூட், பி.ஜே. போல்சிம், எஸ்.புண்ணியமூர்த்தி, கே.எம்.சமிந்த, எஸ்.கணேசன், டபிள்யு.விநாயகமூர்த்தி, எஸ்.ஏ.சுரேஷ்குமார், எம்.குமார், எஸ்.மசார், டபிள்யு.ரங்க சம்பத் பொன்சேகா, எஸ்.முஹம்மது ஜான், பெருமாள் கணேசன், ஆர்.பி.சுனில் கருணாரத்ன, சையித் முகமது உவைஸ், எம்.எஸ்.எம்.மிஸ்வர், பி.கமிலஸ் பிள்ளை, ஷா{ஹல் ஹமீத் ஹஜ்முல். இவர்களில் நால்வரே முதற்கட்டமாக சாவுத் தண்டனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ம)

## வவுனியாவில்...

ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து நேற்றுக் காலை 10 மணிக்கு ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் சில்வா தலைமையிலான குழுவினர் குறித்த காட்டுப் பகுதிக்குச் சென்று மரமொன்றின் அடியின்கீழ் பிளாஸ்டிக் பையொன்றில் சுற்றப்பட்ட நிலையில் சுமார் 25க்கும் மேற்பட்ட நிலக் கண்ணிவெடிகளையும், ஆ.பீ.ஜீ. ரக வெடி குண்டு ஒன்றையும் மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம)

## ஐ.தே.க....

அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் அறிந்தே வைத்துள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியின் உள் மட்டத்திலுள்ளவர்கள் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதை அறிந்தே வைத்துள்ளனர். இருப்பினும், வெளியிலுள்ளவர்கள் வெளியிடும் கருத்துக்களில் உண்மையில்லை. கட்சி என்றவகையில் இன்னும் இரண்டு மூன்று மாதத்துக்குள் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது குறித்து மக்களுக்கு அறிவிக்கவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## சுன்னாகத்தில்...

பட்டனர். குறித்த முகாமில் வசிப்பவர்களிடையே நேற்றையதினம் நிலவிய மோதல் காரணமாகவே குறித்த வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குறித்த பகுதியில் வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ளனர். வெட்டுக் காயங்களுக்கு இலக்கானவர்கள் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 7 ஆண்களும் 2 பெண்களும் அடங்குகின்றனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-105)

## தயாசிறிக்கு...

லையாகி யிருக்கவில்லை. இதையடுத்து, அவரை பிறிதொரு தினத்தில் முன்னிலையாகும்படி தெரிவுக்குழு அறிவித்தது.
கடந்த ஜூன் 18ஆம் திகதி உரையாற்றிய தயாசிறி எம்.பி., தாஜ் சமுத்திரா விடுதியில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படவிருந்தபோதும், விடுதியில் தங்கியிருந்த பிரமுகர் ஒருவரைக் கருத்தில்கொண்டே தாக்குதல் தவிர்க்கப்பட்டது எனத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக விசாரணை நடத்தவே தெரிவுக்குழுவில் முன்னிலையாக அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன்பாக சாட்சியமளிக்கப் போவதில்லையென தயாசிறி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## வடமராட்சியில்...

களில் இருந்து மேற்படி கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ம-26,173)

## வன்செயல்...

அதற்கிருக்கும் ஆற்றல் குறித்தும் பொலிஸார் கூடுதலான அளவுக்கு விழிப்புணர்வுடையவர்களாக இருக்க வேண்டும் என ஐ.நா எதிர்பார்க்கிறது என்றும் அவர் தெரிவித்தார். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட இணையத்தளத்தின் மூலமான பொது முறைப்பாடு முகாமைத்துவ முறைமையை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இதைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'இலங்கையர்கள் பெருமையாகப் பேசிக்கொள்கிற சகிப்புத்தன்மை, சகலரையும் அரவணைக்கும் போக்கு மற்றும் பன்முகத்தன்மை ஆகிய பண்புகள் மீதான தாக்குதலே வெறுப்புப்பேச்சு என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். அது சமூக ஒருங்கிணைவையும், பொதுவான பண்புகளையும் மலினப்படுத்துவதுடன் சமாதானம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் காணப்பட்ட முன்னேற்றங்களை மட்டுப்படுத்தும் ஆபத்தைக் கொண்டுள்ளது' என்றார். (ம)

## தமிழ்...

ராசா மற்றும் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோரும், துணை பொதுச்செயலர்களாக ப.சத்தியலிங்கம், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இணைப் பொருளாளர்களாக பெ.கனகசபாபதி, வ.கனகேஸ்வரன் ஆகியோரும், உப தலைவர்களாக மு.ராஜேஸ்வரன் மற்றும் துரைரத்தினசிங்கம், இ.சாள்ஸ்நிர்மலநாதன், த.குருகுலராஜா, சி.சிவமோகன், அ.பரஞ்சோதி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். துணைச் செயலர்களாக எஸ்.எக்ஸ்.குலநாயகம், ஈ.சரவணபவன், யோகேஸ்வரன், அரியநேந்திரன், தண்டாயுதபாணி, சாந்தி சிறீஸ்கந்தராஜா, கே.வி.தவராசா, த.கலையரசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
கூட்டத்தின் நிறைவில் கருத்து தெரிவித்த தலைவர் மாவை சேனாதிராசா தமிழ் அரசுக் கட்சியின் செயற்குழு கூட்டம் நிறைவடைந்து தற்போது பொதுக்குழு கூட்டம்-இடம்பெற்று புதிய தேர்வுகளும் இடம்பெற்றுள்ள நிலையில், நாளைய தினம் (இன்று) பேராளர் மாநாடு இடம்பெறவுள்ளது. இதில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் அதாவது எமது மக்களின் தீர்வு, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடயம், வேலை வாய்ப்பு என்பவற்றுடன் மிக முக்கியமாக கல்முனை வடக்கு பிரதேச செயலக தரம் உயர்த்தலுக்கான பணி உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்படும் என்று தெரிவித்தார்.
நேற்றைய கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட வடக்கு - கிழக்கின் 8 மாவட்ட பிரதிநிதிகளோடு கொழும்பு மாவட்ட **பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.** (ம-105)

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி நாளை திங்களகிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொழும்புத்துறை வீதி, பழைய பூங்கா வீதி, குருசோ வீதி, அச்சுகூட வீதி, ஈச்சமோட்டை வீதி, சுவாமியார் வீதி, வைடன்ஸ் லேன், துண்டி, கொழும்புத்துறை முதலாம் 2ஆம் 3ஆம் 4ஆம் குறுக்குத் தெருக்கள், வளன்புரம், நெடுங்குளம், புங்கன்குளம், இலந்தைக்குளம், உதயபுரம், மணியம் தோட்டம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், மாலுசந்தி, பாரதிதாசன் படிப்பகம், முத்துமாரி யம்மன் கோவிலடி, நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், இலகடி, காந்தியூர், மந்திகை, உபயகதிர்காமம், வராத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம், மாத னை, நெல்லண்டை, வெளிச்சவீடு, சிவப்பி ரகாசம், 3ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை நகரம், பருத்தித்துறை இலங்கை போக்குவரத்து சபை, சாரையடி, கிராமக்கோடு, தம்பசிட்டி, கல்லூரி வீதி, வி.எம்.வீதி, சாளம்பை, பருத்தித்துறை அரச மருத்துவமனை, கற்கோவளம், வல்லிபுரம் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் சபை, றூபின்ஸ் மருத்துவமனை, சாரு ரூ சகாலு பிறைவேற் லிமிடட், நெல்லண்டை வெளிச்சவீடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புதிய யோகா பயிற்சி நெறிகள் நல்லூர் தேரடி அருகே ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாணம் யோகா உலகம் புதிய யோகா பயிற்சிநெறிகளை நல்லூர்த் தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ளது.
இந்தப் பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.
யோகா வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம் 7 மணிவரை இரு பிரிவுகளாக ஒரு மாதம் தினமும் இடம்பெறும் என்று அறிவித்துள்ளனர். (ஐ)




HAT-TRICK OFFER | FREE HIT OFFER | 50-50 OFFER | WIDE OFFER

SUPER 6 OFFER | MAN OF THE MATCH OFFER

மிகப்பெரிய உற்பத்திகள் | மிகப்பெரிய பிராண்டுகள்
பிரம்மாண்ட சலுகைகள்

LG Life's Good | TOSHIBA Leading Innovation | Abans

சகல தொலைக்காட்சிகளுக்கும் 3 வருட இலவச உத்தரவாதம்

## MAN OF THE MATCH OFFER

49" 4K
LG 49" UHD TV
LGTV49UK6320PTE
ரூ.169,999
32" LG LED TV FREE

## FREE HIT OFFER

32"
ABANS 32" LED TV
ABTV32N2176
ரூ.49,999 இற்கு 2 ஐ கொள்வனவு செய்திடுங்கள்

43"
THTV43L3750VE
TOSHIBA 43" FHD TV
+ LG SOUND BAR
Rs.74,999

43"
ABANS 43" LED TV
ABTV43N2176
ரூ.99,999 இற்கு 2 ஐ கொள்வனவு செய்திடுங்கள்

43"
LGTV43LK5260PTA
LG 43" FHD TV
+ LG 5.1 HOME THEATRE
ரூ.94,999

43" 4K
LGTV43UK6320PTE
LG 43" UHD TV
+ LG 5.1 HOME THEATRE
ரூ.119,999

65" 4K
LG Sound Bar FREE
LG 65" UHD TV
LGTV65UU640C
ரூ.299,999

75" 4K
iPhone XR FREE
LG 75" UHD TV
LGTV75UU640C
ரூ.749,999

86" 4K
iPhone XS FREE
LG 86" UHD TV
LGTV86UU640C
ரூ.1,299,999

## SUPER 6 OFFER

32"
LG 32" SMART TV
LGTV32LK610BPTB
ரூ.59,999
25% தள்ளுபடி
விசேட விலை ரூ.44,999

55"
TOSHIBA 55" FHD TV
THTV55L3750VE
ரூ.144,999
14% தள்ளுபடி
விசேட விலை ரூ.124,999

50" 4K
TOSHIBA 50" UHD TV
THTV50U7880VE
ரூ.164,999
12% தள்ளுபடி
விசேட விலை ரூ.144,999

58" 4K
TOSHIBA 58" UHD TV
THTV58U7880VE
ரூ.299,999
33% தள்ளுபடி
விசேட விலை ரூ.199,999

55" 4K
DISCOUNT Rs.90,000
LG 55" UHD TV
LGTV55UK6320PTE
ரூ.279,999
32% தள்ளுபடி
மாற்றீடு விலை ரூ.189,999

## WIDE OFFER

32"
வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு
TOSHIBA 32" LED TV
THTV32L2800VE
ரூ.44,999
மாற்றீடு சலுகை ரூ.35,999

32"
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு
LG 32" LED TV
LGTV32LK500
மாற்றீடு சலுகை ரூ.39,999

50" 4K
வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு
LG 50" UHD TV
LGTV50UK6320PTE
ரூ.229,999

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணியின் பெயரை குறிப்பிட்டு ரூ.1,150,000/- பெறுமதியான 86" LG 4K UHD TVயை வெல்லுங்கள். AB (இடைவெளி) 2019 (இடைவெளி) பதிலை குறிப்பிட்டு 87798 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்.
*Dialog, Mobitel & Hutch ஆகிய இணைப்புகளுக்கு மாத்திரமே பொருந்தும்.

உலகக் கோப்பை போட்டிகளின் விபரங்களை அறிந்திட "World Cup Live" Appயை Google Play Store மற்றும் Apple App Store இல் பதிவிறக்கம் செய்திடுங்கள்.

011 5 999 000
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள்
Abans


புதிய
Pears
Unilever
சரும பராமரிப்பிற்கு பயன்படுத்தப்படும் சிறந்த மூலப்பொருட்களுள் ஒன்றாக ஒலிவ் எண்ணெய் திகழ்கிறது என்பது நாம் அறிந்ததே. குழந்தைகளின் சருமத்திற்கும் அதீத நன்மைகளை ஒலிவ் எண்ணெய் பெற்றுத்தருகின்றது.
பெயார்ஸ் சோப்பில் ஒலிவ் எண்ணெய் அடங்கியிருப்பதால் உங்கள் குழந்தையின் சருமத்திற்கு சிறந்த மென்மையையும் சரும ஆரோக்கியத்தையும் பெற்றுத்தருகின்றது.
Pears
ரூ. 70/- இலிருந்து
கூச்சி கூச்சி சொப்ட் கூச்சி கூச்சி பெயார்ஸ்
1323 (இலவச அழைப்பு)
அழையுங்கள்

# நெடுந்தாரகையின் சேவைக்கு அனுமதி மறுக்கும் பிரதேச சபை

## குமுதினி பழுதடைந்ததால் மக்கள் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 30

குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவு செல்வதற்கான கடல் வழிப் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள், மற்றும், நெடுந்தீவுக்கு செல்லும் அலுவலர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். கஸ்ரப் பிரதேசத்தில் விரும்பி கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் கூட போக்குவரத்துச் சேவை சீரின்மையால் அங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட வேண்டும் போல் உள்ளது என்று தெரிவித்து வருகின்றனர்.

நெடுந்தீவுக்கான கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபட்ட 40 ஆண்டுகள் பழைமையான குமுதினிப் படகு மீண்டும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனால் நெடுந்தீவுக்கான கடல் வழிப் போக்குவரத்தில் கடந்த சில நாள்களாக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது ஒரு நேரப் போக்குவரத்து மாத்திரமே இடம்பெறுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. அதில் பயணம் செய்தே நெடுந்தீவுக்கான அரச சேவைகளை ஆற்ற வேண்டிய துர்பாக்கிய நிலைக்குள் அரச அலுவலர்கள் தள்ளப்பட்டுள்ளனர். குமுதினிப் படகு சேவை பாதிக்கப்பட்டால் மாற்று ஏற்பாடாக அதற்குப் பதிலாக குறித்த நேரத்தில் நெடுந்தாரகையை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று நெடுந்தீவுப் பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும் அது நடைமுறைப் படுத்தப்படாததன் காரணமாகவே மக்கள் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. நெடுந்தீவு மக்களுடைய முக்கிய தேவைகளில் ஒன்றான படகுச் சேவைக்காக போடப்பட்ட தீர்மானமே நடைமுறைப்படுத்தப்படாதுள்ள போது, மக்கள் நலன் சார்ந்த வேறு விடயங்களை பிரதேச சபை எவ்வாறு நடைமுறைப்படுத்தும், அல்லது கொண்டுவரும் என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் நெடுந்தீவுப் பிரதேச சபையின் தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது; தற்போது நெடுந்தாரகைப் படகினை குமுதினி சேவைக்குப் பதிலாகப் பயன்படுத்துகின்ற போது அதிக செலவு ஏற்படுகிறது. முன்னரே மாதாந்தம் ரூபா மூன்று லட்சம் மேலதிக செலவினமாக உள்ள நிலையில் மேலதிகசேவையில்நெடுந்தாரகையை ஈடுபடுத்துவது இன்னும் செலவை அதிகரிக்கும் என்றார்.

நெடுந்தீவுக்கான பயணத்தில் 40 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றும் குமுதினிப் படகு அடிக்கடி பழுதடைகின்றது. எனினும் திருத்தங்கள் செய்யப்பட்டு மீண்டும் மீண்டும் மக்களுக்கான சேவைகளில் ஈடுபட்டு வந்திருந்தது. தற்போது குமுதினி மீண்டும் பழுதடைந்ததால் மக்கள், மற்றும், அரச அலுவலர்கள் இவ்வாறான சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு நெடுந்தாரகை என்னும் படகு சேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

உலக வங்கி மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளின் உதவியுடன் குறிகட்டுவான்- நெடுந்தீவு இடையிலான பயணிகள் போக்குவரத்துக்காக 150 மில்லியனில் இலங்கை படகு கட்டுமான நிறுவனமான டொக்கியாட் நிறுவனத்தினால் 80 இருக்கைகள் வசதியுடன் அமைக்கப்பட்டதே நெடுந்தாரகை. இவ்வாறு அமைக்கப்பட்ட படகுக்கான மாலுமிகளுக்காக நெடுந்தீவு இளைஞர்களில் ஐவருக்கு இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊடாக பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. நெடுந்தாரகைக்காக முதல் ஓர் ஆண்டுக்கான 36 லட்சம் ரூபா காப்புறுதியும் முழுமையாக வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெடுந்தாரகை தனது முதலாவது படகு சேவையை ஆரம்பித்திருந்தது. அந்தப் படகு சேவைக்கு ஒரு நேரப் போக்குவரத்தில் மாத்திரமே ஈடுபட்டு வருகிறது. இரண்டு நேரப் போக்குவரத்தில் ஈடுபட்ட குமுதினி பழுதடைந்த நிலையில் அந்த நேரங்களில் போக்குவரத்துச் செய்யும் மக்கள் அவதியுறுகின்றனர். அவர்களின் பிரயாணத்தை இலகுபடுத்துவதற்காகவே பிரதேச சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துமாறு மக்கள் கோருகின்றனர். (எ-21)

## உந்துருளி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 30

இரு உந்துருளிகள் மோதியதில் அவற்றில் பயணித்த இருவரும் காயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை தச்சன்தோப்பு தொடருந்து நிலையத்துக்கு அருகில் ஏ 32 நாவற்குழி - கேரதீவு வீதியில் இடம்பெற்றுள்ளது.

வீதியின் பக்கம் மாறிச் சென்று உந்துருளியும் அவ்வழியே வந்த மற்றொரு உந்துருளியும் நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் கைதடி நாவற்குழி கோகிலாகண்டியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தையடுத்து அங்கு நின்றவர்கள் அவசர நோயாளர் காவு வண்டிக்கு தகவல் வழங்கியதையடுத்து அங்கு வந்த வாகனம் இருவரையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## கற்றல் உபகரணம் கையளிப்பு

அனலைதீவு, ஜூன் 30

யாழ்ப்பாணம் அனலைதீவில் உள்ள முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

புலம்பெயர் நாட்டில் வதியும் நா. யோகேஸ்வரன் தனது தாயாரின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்த உதவியை வழங்கியுள்ளார்.

வழங்கப்பட்ட உபகரணங்கள் அந்தந்த முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் ஊடாக சிறார்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (ஐ-9)

## பொங்கல் விழாவும் தீ மிதிப்பும்

ஏழாலை, ஜூன் 30

யாழ்ப்பாணம் ஏழாலை மேற்கு மாவடி ஞான வைரவர் ஆலய வருடாந்தப் பெரும் பொங்கல் விழாவும், தீமிதிப்பும் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளன.


நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு விளக்குவைத்தல் பூஜை நிகழ்வுடன் பொங்கல் விழா ஆரம்பமானது.

தொடர்ந்து எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு அபிஷேக ஆராதனைகளுடன் நள்ளிரவு தீமூட்டுதல் நிகழ்வுடன் மறுநாள் அதிகாலை வளர்ந்து வைத்தலுடன் பெரும் பொங்கல் விழா நடைபெறும்

6 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு. பூஜைகள் நடைபெற்று 11 மணியளவில் தீமிதித்தல் நிகழ்வு இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-39)

## மரக்கறிச் சந்தைக் கட்டடம் திறப்பு





யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணம் பாசையூர் மரக்கறிச் சந்தைக் கட்டடம் சீரமைக்கப்பட்டு உத்தியோக பூர்வமாக நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து திறந்து வைத்தார்.

தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சின் 2018 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் 2.07 மில்லியன் ரூபா நிதியில் குறித்த கட்டடம் சீரமைக்கப்பட்டது.

நிகழ்வில் பாசையூர் பங்குத்தந்தை, யாழ்ப்பாணப் பிரதேச செயலர் சா. சுதர்சன், மாநகர பிரதி ஆணையாளர், மாநகர பொறியியலாளர், மாநகர பொதுச்சுகாதார பொறியியற்பிரிவு அதிகாரிகள், மாநகரசபை அலுவலர்கள், பாசையூர் கடற்றொழிலாளர் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-105,17)

## மாணவர்களுக்கான சிறப்புச் செயலமர்வு

வவுனியா, ஜூன் 30

வவுனியா விபுலாநந்தா கல்லூரியில் இந்த ஆண்டு பரீட்சை எழுதும் கலைப்பிரிவு மாணவர்களுக்கான சிறப்புச் செயலமர்வு பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக வெளிச்சம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பழைய மாணவர் அபிவிருத்தி குழுவினருடன் இணைந்து 2006 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் நிதி பங்களிப்புடன் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.

செயலமர்வில் வளவாளர்களாக எம்.ரதிக்குமார், எஸ்.கமலேஸ்வரன், எஸ்.மோகன், எஸ்.கயேந்திரகுமார், எஸ்.சிவராஜா, எஸ்.வசந்தன், நா.தமிழிந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-222)

## மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு



சாவகச்சேரி, ஜூன் 30

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் அதிபர் திருமதி. ல.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும் மாந்தை கிழக்கு பிரதேச செயலருமான செல்வி ரஞ்சனா நவரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக பிரான்ஸ் இலங்கைத் தமிழ் பழைய மாணவர் சங்க செயலர் எந்திரி த. தயாபரன், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சிவத்திரை சிவநாதன் ஆகியோர் கலந்துகொண்டார். 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. (ஐ-9)

# நம்பிக்கை மோசடி குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார் முன்னாள் பதிவாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நம்பிக்கை மோசடிக் குற்றச்சாட்டில் யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் முன்னாள் பதிவாளர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தனக்கு விதிக்கப்பட்ட குற்றத் தீர்ப்பையும் இரண்டு வருட ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையையும் ஆட்சேபித்து முன்னாள் நீதிமன்றப் பதிவாளர் செய்திருந்த மேன்முறையீட்டின் மீது கடந்த வியாழக்கிழமை தீர்ப்பளிக்கப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் மேன்முறையீட்டு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மேன்முறையீட்டாளரான வல்லிபுரம் மார்க்கண்டு சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா சட்டப் பிரச்சினை ஒன்றுடன் மட்டும் தனது வாதத்தை மட்டுப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன் என்று தெரிவித்தார்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றுக்குரிய பணத்தை நம்பிக்கை மோசடி செய்தார் என்று தொடுக்கப்பட்டு குற்றச்சாட்டில், குற்றம் புரியப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட காலம் ஒரு வருடத்துக்குக் கூடியதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் இது சட்டத்துக்கு முரணானது என்றும் சட்டத்தரணி சிறிகாந்தா சமர்ப்பித்தார். இத்தகைய குற்றச்சாட்டு ஒன்றில், ஒரு வருட காலத்துக்கு உட்பட்டதாகவே குற்றம் புரியப்பட்ட காலம் அமைந்திருக்க வேண்டும் என்றும், ஒரு வருட காலத்திற்கு மேலதிகமாக குற்றம் நீடித்திருந்தால், மிகுதிக் காலத்துக்கு தனியான குற்றச்சாட்டு தொடுக்கப்பட வேண்டும் என்பதே சட்ட நியதி என்றும் அவர் மேலும் வாதிட்டார். இந்தச் சூழ்நிலையில் மேன்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டு சட்ட விரோதமானது என்றும், அந்தக் காரணத்தால் குறித்த வழக்கு விசாரணை, சட்டப்படி செல்லுபடியற்றது என்றும் சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

பிரதிவாதியான சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான உதவி சொலிசிற்றர் ஜெனரல்பி. குமாரரத்தினம் மனுதாரர் தரப்பு வாதங்களை மறுத்துரைத்து தனது சமர்ப்பணங்களை முன்வைத்தார். குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒரு வருட கால எல்லையை மீறிக் குற்றச்சாட்டு அமைந்திருப்பதால், அது சட்டவிரோதமானது எனத் தமது தீர்ப்பில் தெரிவித்த நீதியரசர்கள், யாழ்ப்பாண மேல் நீதிமன்ற வழக்குத் தீர்ப்பையும் தண்டனையும் தள்ளுபடி செய்து, மேன்முறையீட்டாளரை விடுவித்து உத்தரவிட்டனர்.

இந்த வழக்கில் 2003 ஆனி 9ஆம் திகதிக்கும் 2005ஆம் ஆண்டு மார்கழி 1ஆம் திகதிக்கும் இடையில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றுக்குரிய பணம் ரூபா. இரண்டு லட்சத்து பதினைந்தாயிரத்தை கையாடல் செய்து நம்பிக்கை மோசடி புரிந்தார் என்று அதன் அப்போதைய பதிவாளர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

2013ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆரம்பமான விசாரணையின் முடிவில் 2015ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. எதிர்க்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடகால சிறைத்தண்டனையும் பத்தாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது. அபராதம் செலுத்தத் தவறின் ஆறு மாத காலச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது. (எ-21,26)





# வவுனியாவில் கடும் வறட்சி குளத்திலிருந்து துர்நாற்றம்

வவுனியா, ஜூன் 30

வறட்சியுடனான காலநிலை காரணமாக வவுனியாவிலுள்ள பல குளங்களின் தண்ணீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றது.



இதனால் குளத்திலிருந்த பெருமளவு மீன்கள் உயிரிழந்து அப்பகுதியெங்கும் துர்நாற்றம் வீசிவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா மகாகச்சக்கொடிய குளத்திலிருந்த பெருமளவான தண்ணீர் வற்றியுள்ளது. இதனால் குளத்திலிருந்த பெருமளவு மீன்கள் உயிரிழந்து வருகின்றன. மகாகச்சக்கொடிய விவசாய கிராமமாகும் அப்பகுதியில் தற்போது விவசாய செய்கைகள் அனைத்தும் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் கிணறுகளில் தண்ணீர் மெல்ல மெல்ல வற்றி வருவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பேயாடிகூளாங்குளம், மகாறம்பைக்குளம், பூவரசன்குளம், பெண்ணாவரசன்குளம் போன்ற பகுதிகளில் கச்சான் செய்கைகள் மேற்கொண்டு வரும் விவசாயிகள் கிணறுகளில் தண்ணீர் இன்றி கச்சான் செய்கைகள் பாதிப்படைந்துள்ளதுடன் விவசாயச் செய்கையைக் கைவிட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வென்று பொய் கூறுகின்றது பிரதேச சபை

## மன்னார் தோட்டவெளி மீன் பண்ணை அமைக்கும் தரப்பினர் குற்றச்சாட்டு

மன்னார், ஜூன் 30

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தோட்டவெளிப் பகுதியில் மீன்வளர்ப்புப்பண்ணை ஒன்றை அமைப்பதற்கு எடுத்துள்ள முயற்சிக்கு தடையை ஏற்படுத்தும் வகையில் மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் கருத்துக்களைக் கூறி வருகிறார் என்று அங்கு பண்ணை அமைப்பில் ஈடுபட்டுள்ளோரால் குற்றஞ்சாட்டப் படுகிறது.

மன்னார் தோட்டவெளிப் பகுதியில் மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஒருவர் மீன் வளர்ப்பு பண்ணையை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அந்தப் பண்ணையை அமைப்பதற்கு நிதி ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாததன் காரணமாக மீன் தொட்டி அமைப்பதற்காக வெளியேற்றப்படும் மணலை விற்பதற்கும் அதன் மூலம் கிடைக்கும் பணத்தில் வேலைகளை ஆரம்பிப்பதற்கும் உரிய அனுமதிகளை கனிய வளங்கள் திணைக்களம், புவிச்சரிதவியல், அளவை, சுரங்கங்கள் பணியகம் ஆகியவற்றில் பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. மீன் வளர்ப்புப் பண்ணை அமைப்பதற்கு கடற்தொழில்கள் நீரியல்வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பெரும் நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை, தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றிலும் அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

அந்த அனுமதிகளைப் பெற்று வேலைகளை ஆரம்பித்த நிலையில் வேலைகளை மேற்கொள்வதற்கு மன்னார் பிரதேச சபையில் அனுமதி பெறப்படவில்லை என்றும், சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது என்றும் குற்றஞ்சாட்டிய பிரதேச சபைத் தவிசாளர் அண்மையில் பிரதேச சபை அமர்வு நிறைவடைந்தவுடன் குறித்த இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார். அவருடன் பிரதேச சபை உறுப்பினர்களும் அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது அங்கு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த தவிசாளர் சட்டவிரோதமாக மணல் அகழப்படுகின்றது என்றும், அதை ஆய்வு செய்வதற்கு பிரதேச சபையினர் வந்தபோது மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் வாகனங்களை விட்டுவிட்டு தப்பித்துச் சென்றுவிட்டனர் என்றும் தெரிவித்திருந்ததுடன், இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

அங்கு பண்ணை அமைப்பில் ஈடுபடும் தரப்பினர் இந்தக் குற்றச்சாட்டுக்களை முழுமையாக மறுத்துள்ளனர். அங்கு இடம்பெறுவது சட்டவிரோத மண் அகழ்வு அல்ல மீன் பண்ணை ஒன்றை அமைப்பதற்கு உரிய அனுமதிகளைப் பெற்றே அங்கு மணல் அகழப்படுகிறது. தொட்டிஅமைப்பதற்குஉற்றமணலை அகழ்வதற்கும், அதை வெளியில் கொண்டு செல்வதற்கும் உரிய அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. அனுமதிகள் பெறப்படவில்லை என்றால் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும். எனினும் பொலிஸாருக்கு அனுமதிகள் பெறப்பட்டுள்ளது அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் தனிப்பட்ட வகையில் என்மீது அவதூறை ஏற்படுத்தியுள்ளார். நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதிவழங்கியிருந்த போது பிரதேச சபையில் அனுமதி பெறப்படவில்லை என்று தவிசாளர் கூறுகிறார். பிரதேச சபையில் அனுமதிக்காகச் சென்ற போது, எதற்கு அனுமதி பெறவேண்டும் என்ற விவரத்தை அவர் வழங்கவில்லை. அது தொடர்பில் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதேச சபை உறுப்பினர்கள் வரும் போது உழவியந்திரங்கள், அதன் சாரதிகள் சம்பவ இடத்தில் நின்றார்கள். அங்கு பொலிஸாரும் நின்றிருந்தனர். எனினும் தவிசாளர் பொய் கூறியுள்ளார்.

மணல் அகழ்ந்து அதை வெளிமாவட்டங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யவில்லை. எமது மாவட்டத்தில் வீட்டுத் திட்டம் கிடைத்த மக்களுக்கு குறைந்த விலையிலேயெ மணலை வழங்கியுள்ளேன். பொது அமைப்புக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உழவியந்திரக் கூலியை மட்டும் பெற்று பொது அமைப்புகளுக்கும் மணல் வழங்கியுள்ளேன். பிரதேச சபையைக் கேட்காது அனுமதி வழங்கியது தொடர்பில் தவிசாளர் நகர அபிவிருத்தி அதிகார சபையினரிடமே கேள்வி கேட்கவேண்டும். ஆனால் அத்தனை அனுமதிகளைப் பெற்று வேலைகளை ஆரம்பித்துள்ள என்மீது வேண்டுமென்றே தவிசாளர் பழிபோடுகிறார். தோட்டவெளிப்பகுதியில் எத்தனையோ சட்விரோத மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன. அங்கு பெரும் குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

அவற்றை எல்லாம் காணாதது போல் விட்டுவிடும் தவிசாளர் அனுமதிகளைப் பெற்று மணலை வெளியேற்றும் என்மீது குற்ஞ்சாட்டுவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்று மீன்வளர்ப்புபண்ணை அமைத்துவரும் சகாயம் உதயனுக்குத் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, நகர அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெறப்படவேண்டும். அவர்கள் பிரதேச சபையிடம் அதன் பொறுப்பை விட்டுவிடுவார்கள்: நாங்கள் ஆராய்ந்து அனுமதிகளை வழங்குவோம். ஆனால் அவர் அந்த அனுமதியைப் பெறவில்லை. சட்டவிரோதமாகவே மணல் அகழ்கிறார்- என்றார்.

பிரதேச சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் தெரிவிக்கும் போது, மீன் பண்ணை அமைப்பது தான் நோக்கமாக இருந்தால் அவர் மணலை அகழ்ந்து அருகில் போடவேண்டும். அதை விட்டு, மணலை விற்பனை செய்வது அவருடைய நோக்கம் மீன் பண்ணை அமைப்பதா, மணல் அகழ்வா என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அத்துடன் பிரதேச சபையில் அனுமதி பெற வந்தபோது அவருக்கு ஒரு திகதி வழங்கப்பட்டது அந்தத் திகதியில் அவர் வராது அனுமதி தரவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார் - என்றார். (எ-21)

# அரச தலைவராகும் தகுதிகள் சஜித் பிரேமதாசவுக்கு இல்லை

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 30

ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்டால் அதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. அவர் வேட்பாளராகக் களமிறங்குவதை அனைவரும் விரும்பலாம். ஆனால் அவர் அரச தலைவராக மக்கள் விரும்பவில்லை. காரணம் நாட்டின் அரச தலைவராக இருப்பதற்கு சில முக்கிய தகுதிகள் இருக்கவேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவுக் எதிராக அமெரிக்காவில் வழக்கு தாக்கல் செய்துள்ளமை புலம் பெயர் தமிழர்களின் திட்டமிட்ட சதிச் செயல். அதனால் கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவ்விதத்தில் தடையாக இருக்காது.

அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இருந்தே வேட்பாளர் நியமிக்கப்படுவார்.

வேட்பாளர் யார் என்பது தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடிய பின்னர் தீர்மானம் எடுக்கப்படும்.

சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது குறித்தும் இன்னும் கலந்துரையாடல்களே இடம்பெற்று வருகின்றன.

இறுதி தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த விடயம் குறித்தும் ஆராய்ந்த பின்னரே வேட்பாளர் நியமிக்கப்படு வார். ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாச நிய மிக்கப்பட்டால் அதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. அவர் வேட்பாளராகக் களமிறங்குவதை அனைவரும் விரும்பலாம். ஆனால் அவர் அர தலைவராவதை மக்கள் விரும்ப வில்லை.

காரணம் நாட்டின் அரச தலைவராக இருப்பதற்கு சில முக்கிய தகுதிகள் இருக்க வேண்டும். அமெரிக்காவில் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளமை திட்டமிட்ட சதியாகும் - என்றார். (எ)

# சமத்துவமாக நடத்தினாலே பெருமை கொள்ள முடியும்

## விக்கிரமபாகு தெரிவிப்பு



கொழும்பு. ஜூன் 30

சகல சமூகத்தவர்களையும் சமத்துவமானவர்களாக நடத்தினால் மாத்திரமே பௌத்த தர்ம போதனைகளை சரிவரக் கடைப்பிடிக்கின்றோம் என்று பெருமையாக கூறிக்கொள்ள முடியும் என்று நவ சம சமாஜ கட்சியின் தலைவர் விக்கிரம பாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பயங்கரவாதத்துக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும். அனைவரும் சமன் என்ற கொள்கையை மனதில் நிறுத்தினால் மாத்திரமே முன்னோக்கிச் செல்ல இயலும். இதனையே அனைத்து மதங்களும் போதிக்கின்றன. நாட்டை பயங்கரவாத்திலிருந்து மீட்க தற்போது கடினமான பாதையில் பயணிக்க வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. சில அரசியல்வாதிகளின் கருத்துக்கள் வன்முறையை தூண்டும் வகையில் உள்ளது. இவற்றை கடந்தே நாம் பயணிக்க வேண்டும் -என்றார். (எ)

# அரச தலைவர் வேட்பாளர்: பெரமுனவுடன் சு.க. பேச்சு

கொழும்பு. ஜூன் 30

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற இரண்டு தரப்பிலிருந்தும் ஒருவரை அரச தலைவர் வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார். கொழும்பில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் பேச்சு நடத்தவுள்ளோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரையே அடுத்த அரச தலைவர் தேர்தலுக்கு களமிறக்குவார் என்று தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதுதவிர இப்போதைய நிலமையில் இன்னுமொருவரின் பெயர் பரிந் துரைக்கப்படவில்லை. அதனூடாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் முறுகல்நிலையை அடைந்துள்ளனர் என்று எவரும் கருதக்கூடாது.

இந்தப் பேச்சு தொடரும். பொதுஜன பெரமுன, தாமரைச் சின்னத்தில் இருந்து ஒரு வேட்பாளரை களமிறக்குவதாக கூறிக்கொண்டிருக்கிறது. நாமும் எமது சின்னத்திலிருந்து வேட்பாளர் ஒருவரை களமிறக்கவுள்ளதாக அறிவித்துள்ளோம்.

இந்த விடயம் குறித்துதான் நாம் தற்போது பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறோம்.

அடுத்த அரச தலைவர் தேர்தலில் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு வேட்பாளரை களமிறக்குவது குறித்தும் பேச்சு இடம்பெறலாம். பேச்சு ஊடாகவே இதனைத் தீர்க்க வேண்டும். எம்மைப் பொறுத்தவரை இரண்டு தரப்பும் இணைந்து ஒரு வேட்பாளரை களமிறக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கிறது.

அதேபோல், தலைமை யாரை நியமிப்பது என்பது குறித்தும் பேச்சு நடத்துவோம் - என்றார். (எ)

# மொட்டுச் சின்னத்தை விட்டுக் கொடுக்கோம்

## அதன் பொதுச் செயலர் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 30

தலைமைத்துவத்தையும், மொட்டு சின்னத்தையும் எக்காரணிகளுக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது என சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்லை வெற்றிக் கொண்டு மக்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கு கிராமிய மட்டத்தில் இருந்து செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறிலங்கா சுதந்திர கட்சியும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான பரந்துப்பட்ட கூட்டணியமைத்தல் விவகாரத்தின் பெறுபேறு அடுத்த மாத இறுதிக்குள் கிடைக்கும். எனினும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரை ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி எதிர்க்கட்சி தலைவர் அறிவிப்பார்.

பொதுஜன பெரமுனவின் கொள்கைத் திட்டங்கள் தற்போது நாடுதழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கட்சியின் கிளை நிறுவனங்களை ஸ்தாபித்ததற்கான ஏற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் பலத்துடன் இடம்பெறவுள்ள அனைத்து தேர்தல்களையும் எதிர்க்கொள்ள புதிய கொள்கைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன- என்றார். (எ)

# தூக்கை நிறைவேற்றுவது சாத்தியப்படாத விடயம்!

## செஹான் சேமசிங்க தெரிவிப்பு



கொழும்பு. ஜூன் 30

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தூக்குத் தண்டனையைத் தொடர்ந்து நிறைவேற்றாமல் இருப்போம் என வாக்களித்த 120 நாடுகளில் இலங்கையும் ஒரு நாடாகும். இந்த விடயத்தில் இருந்து ஒருபோதும் விடுப்பட முடியாது.

நன்மை பயக்கும் என்று கருதி அரச தலைவர் முன்னெடுக்கும் தீர்மானங்கள் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

அடிப்படைவாதிகளின் குண்டு தாக்குதலை தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சி இனங்களுக்கிடையில் இன முரண்பாடுகளை ஏற்படுத்தி அதனூடாக மீண்டும் ஆட்சிக்கு வரும் திட்டங்களையே வகுக்கின்றது.

கறுப்பு ஜூலை இனக் கலவரத்தை ஐக்கிய தேசிய கட்சியே ஆரம்பித்தது. அதனால் 30 வருட கால சிவில் போர் தோற்றம் பெற்றது. அதன் தொடர்ச்சியை மீண்டும் முன்னெடுக்கும் முயற்சியே தற்போது இடம் பெறுகின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தை கொண்டே இவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவது ஒருபோதும் சாத்தியப்படாது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தூக்குதுத் தண்டனையைத் தொடர்ந்து நிறைவேற்றாமல் இருப்போம் என வாக்களித்த 120 நாடுகளில் இலங்கையும் ஒரு நாடாகும். இந்த விடயத்தில் இருந்து ஒருபோதும் விடுபட முடியாது. நன்மை பயக்கும் என்று கருதி அரச தலைவர் முன்னெடுக்கும் தீர்மானங்கள் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். என்றார்.

# தூக்குத் தண்டனைக்கு நோர்வே எதிர்ப்பு


கொழும்பு. ஜூன் 30

இலங்கையில் மீண்டும் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கான திட்டத்துக்கு நோர்வே எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய நால்வருக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். அதற்கு நோர்வே கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

அது தொடர்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் 43 வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ள மையால் நோர்வே கவலையடைகிறது. கடந்த டிசெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தூக்குத் தண்டனையை நிறுத்திவைக்கும் செயற்பாட்டுக்கு ஆதரவளித்த 120 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையில் தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதென்பது இலங்கையின் பன்னாட்டு மதிப்பையும், மனித உரிமைகள் செயற்பாடுகளையும் பாதிக்கும் செயலாகும்.



கொள்கைரீதியில் அனைத்து வகையான தூக்குத் தண்டனையையும் நோர்வே கடுமையாக எதிர்க்கின்றது. அனைத்து குடிமக்களினதும் மனித உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்வது அனைத்து நாடுகளினதும் கடமை என நோர்வே நம்புகிறது.

இலங்கையை மீண்டும் தூக்குத் தண்டனையை அறிமுகம் செய்வதை கைவிடுமாறு நோர்வே கேட்டுக்கொள்கிறது- என்றுள்ளது. (எ)

# கொண்டச்சிக்குடா மயானத்தை ராணுவத்தினர் அபகரிக்கின்றனர்

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

மன்னார், ஜூன் 30
முசலி பிரதேசத்துக்கு உட்பட்ட கொண்டச்சிக் குடா கிராமத்தில் வசித்து வரும் சைவ மக்களின் மயானத்தை படையினர் அபகரிக்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அதனை எங்கள் பாவனைக்கே விடுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது பற்றி தேசிய மீனவர் ஒத்துழைப்பு சங்க செயலர் ஏ.பெனடிட் குருஸ் குழுவினரிடம் மக்கள் முறைப்பாட்டைக் கூறியுள்ளனர் என்று அந்தக் குழுவைச் சேர்ந்த பெனடிட் குருஸ் தெரிவித்தார்.
முசலி கொண்டச்சி குடாப்பகுதியில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றன. 2013ஆம் ஆண்டளவில் முசலி பிரதேசத்தின் குடிமக்கள் குழுவின் முயற்சியால் அந்தக் கிராமத்து மக்களுக்கு குறித்த மயானம் பெற்றுக் கொடுக்கப் பட்டது. இதனை அன்றைய காலகட்டத்தில் பிரதேச செயலராக இருந்த கேதீஸ்வரன் வழங்கியிருந்தார்.
தற்போது முசலிப்பிரதேசத்து கொண்டச்சிக்குடா பகுதி சைவ மக்கள் பயன்படுத்தி வரும் சைவ மக்களின் மயானத்தை படையினர் எடுத்துக் கொண்டு அதற்கு மாற்றிடாக வேறு இடத்தில் இடம் தருவதாகக் கூறுகின்றனர். அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.
குறித்த மயானக் காணியைத் தம்முடைய பாவனையில் தொடர்ந்தும் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கு-213)

## மீன்சந்தைக் கட்டடம் திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிதி உதவியுடன் சீரமைக்கப்பட்ட பாசையூர் இறைச்சிக்கடையுடன் இணைந்த மீன்சந்தைக் கட்டடம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப் பட்டது.
யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்டால் திரைநீக்கம் செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் பாசையூர் பங்குத்தந்தை, யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன், யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர், யாழ்ப்பாண மாநகர பிரதி ஆணையாளர், மாநகர பொறியியலாளர், மாநகர பொதுச்சுகாதார பொறியியற்பிரிவு அதிகாரிகள், பாசையூர் கடற்றொழிலாளர் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
சந்தைத் தொகுதி திறந்து வைக்கப்பட்ட பின்னர் முதல்வரால் உரை நிகழ்த்தப்பட்டது. (ஜ-105)

## ஆங்கில தின போட்டிகள்

சாவகச்சேரி, ஜூன் 30
தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய நிலை ஆங்கில தினப் போட்டிகள் நேற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு ஆகிய இரு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. (ஜ-9)




யாழ்ப்பாணம் ஏழாலை குப்பிளான் பகுதியில் அண்மையில் மின்னல் தாக்கி உயிரிழந்த பெண்ணின் மகனுக்கு ஈருருளி வழங்கப் பட்டது. ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவனுக்கே நல்லூர் றொட்றிக் கழகத்தால் ஈருருளி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)

## கருத்தமர்வு

தென்மராட்சி, ஜூன் 30
நல்லிணக்கப் பொறிமுறையில் நிலைமாறுகால நீதி மற்றும் தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம் தொடர்பான கருத்தமர்வு ஒன்று நடைபெறவுள்ளது.
கைதடி மேற்கு சரஸ்வதி வைர விழா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. கைதடி மேற்கு இளைஞர் கழகமும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையமும் இணைந்து இந்தக் கருத்தமர்வை நடத்தவுள்ளன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார். (ஜ-9)

## மடு ஆலய வளாகத்தில் சுற்றுலா நீதிமன்றம்

மன்னார், ஜூன் 30
மன்னார் மடு ஆடி மாத பெருவிழாவை முன்னிட்டு நான்கு நாளைக்கு மடு ஆலய வளாத்தில் சுற்றுலா நீதி மன்றம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு ஆலயத்தின் பெருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளைமறுதினம் 2 ஆம் திகதி திருப்பலியுடன் நிறைவு பெறவுள்ளது.
இங்கு நடைபெறும் விழாக் காலங்களில் இவ்விடத்தில் சட்ட விரோத செயல்பாட்டில் ஈடுபடுவோரை கைது செய்யும் முகமாக இந்த சுற்றுலா நீதிமன்றம் செயற்படுகிறது.
நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நீதிமன்றம் செவ்வாய்கிழமை வரை செயற்படும் என்று தெரி விக்கப் பட்டது.
சுற்றுலா நீதிமன்றத்தின் நீதிபதியாக மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கடமை புரிவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-60)

## இலவச மருத்துவ முகாமும் முதலுதவிப் பெட்டி வழங்கலும்

இலவச மருத்துவ முகாமும், பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வும் நேற்று வவுனியாவில் இடம்பெற்றன.
வவுனியா மகாகச்சக்கொடி ஆரம்பப் பாடசாலையில் ஒரு நாள் இலவச மருத்துவ முகாமும், மாமடுவ பொலிஸ் நிலையப்பிரிவிலுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகளும் வழங்கிவைக்கப்பட்டன.
வன்னிப்பிராந்திய சமுதாயப் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் மாமடுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ.பி செனரத் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.
இலவச மருத்துவ முகாமில் குருதிப்பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்கல், உயர்குருதி அழுத்தம், பல் மருத்துவம், கால் நடை மருத்துவம் போன்ற பலவிதமான நோய்களுக்குமான மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றன. (ஐ)



## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 30
ஒரே திசையில் பயணித்த ஈருருளியும் உந்துருளியும் மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த இருவரும் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மிருசுவில் உசன் சந்தியில் ஏ 9 வீதியில் இடம்பெற்றது.
ஈருருளியில் சென்ற எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த மு.திருஞானசம்பந்தர் ( வயது - 64 ) என்பவரும், உந்துருளியில் சென்ற கொடிகாமம் கெற்பேலியைச் சேர்ந்த மயில்வாகனன் ஜெயசீலன் (வயது - 32) என்பவருமே காயமடைந்தனர்.
காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-9)





யாழ்ப்பாணம் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நிலைய மைதானத்தில் தலைவர் வை.இராச ரத்தினம் தலைமையில் நடைபெற்றன. (ஜ-9)

ஞாயிறு சிறப்பமசம்
30.06.2019

சூரியகாந்தி



# தமிழகத் தண்ணீர் பிரச்சினை எமக்கு நல்லதொரு படிப்பினை

வி. அருணாசலம்

இந்தியாவின் தமிழகத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு தலைவிரித்தாடுகிறது. தண்ணீருக்காக வீதிகளில் மக்கள் திரண்டு பெரும் அல்லல்படுகிறார். 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பெய்த பெரு மழையால் இந்தியாவின் சென்னையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தை நேரடியாகக் கண்ட ஈழத் தமிழர் ஒருவர் அது பற்றிக் குறிப்பிடும் போது, “சென்னையின் குடி நீரை அதிகம் அசுத்தப்படுத்துகின்ற அங்குள்ள கூவம் நதி அந்தக் கடும் மழைநீரால் முழுமையாக மூடப்பட்டுப் பின் கழுவப்பட்டது. இதை மனிதரால் செய்துவிட முடியாது. அந்த இயற்கை தந்த வய்ப்பை மனிதன் சரியாகப் பயன்படுத்தத் தவறி விட்டான். அந்த மழை ஓய்ந்து, வெள்ளம் வடிந்ததும் கூவம் ஆற்றின் இரண்டு புறங்களிலும் வேலியிட்டு, கழிவுகளைக் கொட்டாது பாதுகாத்திருந்தால் தற்போதுள்ள குடிநீர்ப் பிரச்சினை இருந்திருக்காது. ஆனால் அதைச் செய்ய முடியாத அளவுக்குத் தமிழ் நாட்டின் அரசியலும் மக்களின் மனநிலையும் இருந்தது. வாய்ப்பைத் தவறவிட்டு விட்டுத் தற்போது தண்ணீருக்கு அல்லல்படுகின்றனர்”- என்றார். இலங்கையின் வடபகுதிக்கு அண்மையாகவுள்ள இந்தியப் பிராந்தியத்தில் தற்போது ஏற்பட்டுள்ள இந்தத் தண்ணீர்த் தட்டுப்பாட்டுநிலை இங்கும் பரவவிருப்பதைக் காலவோட்டம் உணர்த்த விருக்கிறது. இங்கு அந்த நிலை ஏற்படுவதற்கும் அரசியல்வாதிகளும் மக்களுமே காரணமாக இருப்பர்.






இந்தியாவின் ஹைதரபாத் பகுதியில் வீடுகளின் வாசலுக்கு முன்பாக ஆமையின் உருவச்சிலை ஒன்று வைக்கப்பட்டு, அந்தச் சிலை இருப்புத் தட்டில் தண்ணீர் விடப்பட்டிருக்கம். அவர்களின் வழிபாட்டு அறைகளிலும் சிறிய ஆமை உருவங்கள் வைக்கப்பட்டு, அதன் கீழுள்ள தட்டில் தண்ணீர் விட்டு வைத்து வணங்குவார்கள். இதற்கான காரணம், எதிர்காலத்தில் பாலை நிலமாக மாறவிருக்கம் பகுதிகளை முன்னுணரும் சக்தி ஆமைகளுக்கு உண்டு. ஆகவே தமது வாழிடங்களை விட்டு ஆமைகள் வெளியேறிவிடக்கூடாது என்பதை அவர்கள் நம்பிக்கை வழிபாடாக மேற்கொள்கின்றனர். ஒரு பிரதேசத்தில் இருந்து ஆமைகள் வெளியேறிச் செல்வதை அவதானித்தால் அந்த இடம் விரைவில் பாலைவமான இருக்கிறது என்றே அரத்தம். இதை விட நன்னீர் உள்ள பகுதிகளிலே ஆத்தி மரம் முளைக்கும், கறையான் புற்று எழுப்பும், காலை நேரத்தில் குருவிகள் புல் நுணிகளில் உள்ள நீரில் உருண்டு, பிரண்டு மகிழும். இந்தப் பகுதித் தரையின் கீழ் நன்னீர் உள்ளது என்பதையே இவை உணர்த்தும். தற்போது ஆத்தி மரங்களோ, கறையான் புற்றுகளோ, குருவிகள் புரள்வதோ வடக்கில் அருகி வருகின்றன. இங்கு நிலத்தடி நீர் அருகி வருகிறது என்பதே இதன் பொருள்.

**வடக்கில் எட்டிப்பார்க்கும் வறட்சி**

சுண்ணாம்புப் பாறைகளால் ஆன தரைப் பரப்பையுடைய யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர் நிலைகள், நீர்வளங்கள் அற்ற நிலையில், அது தரைக் கீழ் நீர் வளத்திலேயே முழுவதுமாகத் தங்கியுள்ளது. யாழ் நகருக்குள் மலக்குழிகளும் கிணறுகளும் அடுத்தடுத்து அமைவதால் நீர் அசுத்தமாகிவருகிறது. சுன்னாகம் பகுதியில் கழிவு ஒயில் கலந்ததில் நீர் மாசுபட்டுள்ளது. தீவகப் பகுதிகளிலும் ஏனைய கரையோரப் பகுதிகளிலும் தரைக்கீழ் நீர்வளம் சவராகிப் பின்னர் உவராகி வருகிறது. இவ்வாறாக யாழ்ப்பாணக் குடாநாடு மிக மோசமான குடிநீர்ப்பிரச்சனைக்கு உட்பட்டு வருகிறது. வடமாகாணத்தின் பெரும்பகுதி கடலால் சூழப்பட்டுள்ளது. மழைபெய்தால் ஒரு சில மணி நேரத்தில் அந்த நீர் முழுதும் கடலைச் சென்றடைகிறது. குடாநாட்டில் நீர்த் தேக்கங்கள் இல்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளம் உட்பட ஒன்றிரண்டு குளங்கள் இருப்பினும் அங்கும் வருடத்தில் 6 மாதங்களுக்கு மேல் வறட்சியே நிலவுகிறது. இதனால் விவசாயம், மந்தை வளர்ப்பு என எதையும் செய்ய முடியாத நிலை நீடிக்கிறது. இதைவிட கிளிநொச்சியில் உவர் பரவி வருவது மிக வேகமாக அதிகரித்துள்ளது.

**தரைக்கீழ் நீர்ச் சேமிப்பில் அக்கறையில்லை**

தரைக்கீழ் நீர் வளத்தைக் கொண்ட யாழ் குடா நாட்டில் பெய்யும் மழையைச் சேமிக்கின்ற எந்தவொரு திட்டங்களும் முன்னெடுக்கப்படுவதாயில்லை. தானாகப் பெய்து தானாக நிலத்துக்குள் வடிகின்ற நீரையே மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். பெய்த மழையில் பெருமளவு நீர் கடலுடன் சென்று கலந்து விடுகிறது. இயற்கையாகத் தரைக்குள் வடியும் நீரின் அளவையும் மக்களின் செயற்பாடுகள் குறைத்து வருகின்றன. கொங்கிறீட் தரைகள், மதிற் சுவர்கள், வடிகால்களூடாக மழை நீரைக் கடலுக்குள் விரைவாக அனுப்பிவிடுதல் என அவர்கள் மழைநீரை உடனடியாக அப்புறப்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர். அன்றி ஒருபோதும் தரையின் கீழ் வடியவிட்டுத் தரைக்கீழ் நீராக்குவதில் அக்கறையோ, ஆர்வமோ காட்டுவதில்லை.



**மாறாக இயற்கையை மாற்றியமைக்கிறார்கள்**

ஆனையிறவு சுண்டிக்குளம் கடல் நீரேரித் தொடுப்பு ஏ9 வீதி நிறுவலின்பொது துண்டிக்கப்பட்டது. ஆனையிறவில் தற்போது அமைக்கப்பட்டுள்ள ஹசலப்ப இராணுவச் சிப்பாயின் சிலைக்கு அருகாமையில் உள்ள பகுதியில் இயற்கையாகவே இந்த நீர்த் தொடுப்பு இருந்தது. பிரித்தானியர் காலத்தில் அவர்கள் அதைப் பிரித்தமைக்காமல் பாலங்களை அமைத்து இயல்பான நீரோட்டத்தை அதன் போக்கிலேயே விட்டிருந்தனர். இந்தப் பாலங்கள் ஊடான நீரோட்டமானது காலையும் மாலையும் மாறி மாறி ஓடும் இந்த இரு நீர்க் கலப்பின் காரணமாக இறால் உற்பத்தி இந்தப் பகுதியில் அதிகம் காணப்பட்டது. இயற்கையான இந்த நீர்த்தொடுப்புத் துண்டிக்கப்பட்டதன் பின் இயற்கைக்கு மாறான பல மாற்றங்கள் நடந்தன. மண்டைக் கல்லாறு ஆற்றுப் பகுதி, வன்னேரி நஞ்சுண்ட காட்டுப் பகுதி எல்லாம் உவர்த் தன்மையாக வேகமாக மாறி வருகின்றன. வருடா வருடம் நன்னீர் உப்பு நீராகி வருவதையும், வயல் நிலங்கள் உவராகி வருவதையும் காண முடிகிறது. இதற்கு முதன்மைக் காரணம் இயற்கையான இந்த இரு நீர்த் தொடுப்பு தடை செய்யப்பட்டதே. அதனால் அந்தப் பகுதிக் கடலின் உவர் அதிகமாகி அந்தப் பிரதேசக் கரையோரங்களில் அதன் தாக்கம் உணரப்படுகிறது.

**நீர் விடயத்தில் மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும்**

குடாநாட்டிலுள்ள நகர வர்க்கத்தினர், பணவசதி படைத்தவர்களின் பிடியிலுள்ள குடிநீர்க் கிணறுகள் பல பயன்படுத்த முடியாதவை என்கிற எண்ணத்தில் இறைத்துச் சுத்தப்படுத்தாமலும், குளோரின் இடாமலும் கைவிடப்பட்டு வருகின்றன. மக்களிடம் காணப்படுகின்ற சூழல் பாதுகாப்புப் பற்றிய தெளிவின்மை எதிர்காலச் சந்ததிக்காக எதை விட்டுச் செல்கிறோம் என்ற தூர நோக்கின்மை ஆகிய பல்வேறு காரணங்கள் நன்னீரை மாசு படுத்துகின்றன. குடா நாட்டில் குளங்கள் இல்லாவிடினும் அநேகமாக எல்லாத் தோட்டக் காணிகளிலும் துரவுகள் வெட்டப்பட்டிருந்தன. ஒரு சிறிய குளத்தில் தேக்கப்படும் நீரை 50 துரவுகளில் சேகரிக்கக் கூடிய நிலை அப்போது இருந்தது. தற்போதைய நிலையில் மரம் நாட்டுவதை ஒரு சடங்காகச் செய்கின்ற அரசியல்வாதிகள் தூர்ந்து போயுள்ள துரவுகளை தூர்வை எடுப்பதில் கவனம் செலுத்துவதில்லை. அத்தோடு வடக்கில் மக்கள் வாழாத கைவிடப்பட்ட வீடுகள் அதிகம் உள்ளன. அந்த வீடுகளில் நல்ல நீரூற்றுள்ள கிணறுகள் பல பயன்படுத்தப்படாமலும் கவனிப்பாரற்றும் பாழடைந்துள்ளன. இந்தக் கிணறு களைக் கண்டறிந்து சுத்தப்ப டுத்திப் பயன்படுத்த வேண்டும். இந்தப் பாழ் கிணறு களுக்குள் கழிவுகளைக் கொட்டி நிலத்தடி நீரை மாசுபடுத்துமவதையும் இதன் மூலம் தடுக்க முடியும்.



**திட்டமிட்ட செயற்பாடுகள் முக்கியம்**

இன்று அதிகரித்து வரும் குடிமனை களால் நிலங்கள் நிரப்பட்டு அதில் வீடுகள், கடைத்தொகுதிகள் கட்டப்படுகின்றன. மதில்கள், வீதிகள் எனப் பல கொங்கிறீட் வேலைத்திட்டங்கள் இயற்கையான நீரோட்டத்தின் திசையை மாற்றுகின்றன. வட மாகாணத்தைப் பொறுத்தவரை வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கட்டங்கள் திணைக்களம், விவசாயத் திணைக்களம், உள்ளூராட்சி மன்றங்கள் என்பன கூட்டாக இணைந்து முடிவெடுத்து அபிவிருத்தித் திட்டங்களைச் செய்வதில்லை. அவ்வாறு இணைந்த தீர்மானங்கள் எடுக்கப்படாததன் விளைவாகவே நிலத்தடி நீரைப் பேண முடியாத நெருக்கடி நிலை அதகரித்து வருகிறது. வருடா வருடம் கிடைக் கின்ற மழை நீர் போதுமானதாக உள்ளபோதும் அவற்றைச் சேமிப்பதில் விடுகின்ற தவறு ஏற்கனவே உள்ள நன்னீரை மாசுபடுத்துவது அல்லது இல்லாது செய்வதில் போய் முடிகிறது. சமூக அக்கறையிருந்தால் மாத்திரமே இதைத் தடுத்துநிறுத்த முடியும். மக்களைப் பயன்படுத்தி அரசியல் செய்வதால் எதுவும் இயலாது.

**ஆழ்துளைக் கிணறுகளால் பாதகம்**

தானாகச் சேர்கின்ற தரைக்கீழ் நீர் கூடத் தற்போது அருகத் தொடங்கிவிட்டது. ஆனால், இப்போதும் சிந்தித்துச் செயலாற்றாது, ஆழ்துளைக் கிணறுகளை உருவாக்கி எஞ்சியுள்ள தரைக்கீழ் நீரையும் வெளியேற்றிவிடும் காரியத்தைச் செய்கிறார்கள்.

இதனால், நன்னீர் உப்பாக மாறி வருகிறது. குடாநாட்டில் மட்டும் ஆழ் துளைக் கிணறடிப்பவர்களால் நாளொன்றுக்குச் சராசரியாக 50 கிணறுகள் அடிக்கப்படுகின்றன.

அனுமதி பெற்று அமைக்குமாறு மட்டுப்படுத்தலை ஏற்படுத்தினாலும் இந்த நிலை நாளுக்கு நாள் அதிகரிக்கவே செய்கிறது.

மழை நீரைச் சேமித்துத் தரைக்கீழ் நீர் வளத்தை அதிகரிக்கின்ற திட்டங்களில் கவனம் செலுத்தாமல், இந்த நிலை இன்னும் 5 வருட காலப்பகுதிக்கு இடம்பெற்றால் தற்போது தென்னிந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலையே இங்கும் ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

# மீண்டும் சலசலப்பை தோற்றுவிக்கும்

# அரசமைப்பு விவாதம்!

ஸ்டோஸ்வாமி



**2015** ஆம் வருட அரச தலைருக்கான தேர்தலில் பேசுபொருளாக இருந்து பின்னர் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வந்த புதிய அரசமைப்புக்கான பணிகள் தொடர்பில் எவ்வித நகர்வுகளையும் அண்மையில் காணமுடியவில்லை. மற்றையதொரு அரசதலைவருக்கான தேர்தல் இந்த வருட இறுதியில் எதிர்கொள்ளப்படலாம் என எதிர்வுகூறப்பட்டிருந்தாலும், அடுத்த தேர்தலில் புதிய அரசமைப்புக்கான கோரிக்கை ஒரு பேசுபொருளாகவேனும் அமையுமா என்பது கேள்விக்குறியே. தற்போதைய நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினராகவும் புதிய அரசமைப்பின் சிற்பியுமாக விளங்கிய ஜயம்பதி விக்ரமரத்ன அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்து, இனிமேலும் புதிய அரசமைப்புத் தொடர்பாகத் தொடங்கப்பட்ட பணித் தொடரில் நம்பிக்கை வைப்பது பிரயோசனமற்றது என்பதைப் பிரதிபலித்திருக்கிறது. அரசமைப்பு பணிகளை முன்னெடுத்து வந்த வழிநடத்தற் குழு கூட்டப்படாமையால், அந்தப் பணிகள் தடங்கலுக்குள்ளாகி இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார் அவர். கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதியின் பின்னர் அரசமைப்புச் சபையின் வழிகாட்டல்குழு கூடவில்லை எனத் தெரிவித்திருக்கும் அவர், அந்தச் சபை அடுத்துக் கூட்டப்படக்கூடிய சந்தர்ப்பம் தொடர்பிலும் கருத்து எதனையும் தெரிவித்திருக்கவில்லை.

பெருமெடுப்பில் தொடங்கப்பட்டு ஆமையின் முதுகில் பயணித்துக்கொண்டிருந்த புதிய அரசமைப்புக்கான பணிகளின் நிலை இவ்வாறிருக்கையில், புதிய அரசமைப்பை நிறைவேற்றித் தருவதாக வாக்களித்து அரச தலைவர் பதவியில் அமர்ந்த மைத்திரிபால சிறிசேன, புதிய அரசமைப்பு வேண்டாம் எனக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். கடந்த புதன்கிழமை காலையில் ஊடகங்களின் உரிமையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்தவேளையிலேயே அவர் இந்தக் கருத்தினை முன்வைத்திருக்கிறார். அதுமாத்திரமல்லாமல், கடந்த அரச தலைவர் தேர்தல் பரப்புரைக் காலத்தில் அவருடைய பிரதான ஆர்ப்பரிப்பாக இருந்த இன்னொரு விடயம் தொடர்பிலும் திகைப்பை ஏற்படுத்தும் விதத்தில் கருத்தொன்றை அவர் வெளியிட்டிருக்கிறார். ஆமாம், அவரால் வாக்குறுதியளிக்கப்பட்டு நாடாளுமன்றில் அதீத பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட 19ஆம் திருத்தத்தை சாபமென விமர்சித்திருக்கிறார் அவர்.

கடந்த வாரம் அரச தலைவர் பங்கேற்றிருந்த இரு நிகழ்வுகளில் இந்த அரசமைப்புத் தொடர்பான விடயம் பேசுபொருளாகியிருந்தது. முதலில், கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 40ஆவது ஆண்டுப் நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர், அரசமைப்பின் 18ஆம் மற்றும் 19ஆம் திருத்தங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்றிருக்கிறார். அதேவேளை, கடந்த புதன்கிழமை ஊடகப் பிரதிநிகளைச் சந்தித்த அரச தலைவர் அங்கு, தான் உறுதியளித்து கொண்டுவந்த 19ஆம் திருத்தத்தினைச் சாபமென விமர்சித்திருக்கிறார்.

அடுத்த அரச தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்குச் சில மாதங்களே உள்ள நிலையில், தற்போதைய அரச தலைவர் குறித்த தேர்தலில் மீண்டும் போட்டியிடுவது தொடர்பில் மறுப்புரை எதனையும் இதுவரை தெரிவித்திருக்கவில்லை. மதிப்பிற்குரிய தீர்மானம் ஒன்றினை எடுப்பதற்காகக் காத்திருக்கும் அவர் அரசமைப்புத் தொடர்பில் வெளிப்படுத்தியிருக்கும் கருத்து அரசியலரங்கில் சலசலப்பினைத் தோற்றுவித்திருக்கிறது.




**பத்தொன்பதாம் திருத்தம் சாபமா?**

நடைமுறையில் உள்ள அரசினால் அரச தலைவர் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டுப் பின்னர் ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக 100 நாள் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டு நாடாளுமன்றில் 5/6 பெரும்பான்மைக்கும் மேலதிகமாக வாக்குகளைப்பெற்று நிறைவேறியதே இந்த 19ஆம் திருத்தம். அரச தலைவருக்குரிய அதிகாரங்களை நாடாளுமன்றுடன் பகிர்ந்துகொள்வதுடன், தலைமை அமைச்சருடன் கலந்துரையாடித் தீர்மா னங்களை எடுக்கும்படியான அறிவுறுத்தல்களை வழங்கும் இந்தத் திருத்தம், அரச தலைவருக்குரிய அதிகாரங்கள் சிலவற்றைப் பிடுங்கிவிட்டிருந்தது. ஆரச தலைவரின் பதவிக் காலத்தினை ஆறு வருடங்களிலிருந்து ஐந்து வருடங்களாகக் குறைத்தல், அரச தலைவராக விளங்கிய ஒருவர் மீளவும் அரச தலைவராகும் தடவைகளை மட்டுப்படுத்துதல், வயது மற்றும் குடியுரிமை சார்ந்த கட்டுப்பாடுகளை அரச தலைவராகுபவருக்கு விதித்தல், அரச தலைவர், தலைமை அமைச்சரைத் தன்னிச்சையாகப் பதவிநீக்க முடியாமை, நாடாளுமன்றினால் நிராகரிக்கப்பட்ட பிரேரணை ஒன்றினை அரச தலைவரினால் பொதுசன வாக்கெடுப்பிற்குவிடமுடியாமை போன்றவற்றுடன் அமைச்சுப் பதவி ஒன்றை அரச தலைவர் வகிப்பது தொடர்பிலும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியிருந்தது இந்த 19ஆம் திருத்தம். நாடாளுமன்றில் 215 வாக்குகளை ஆதரவாகவும் ஒரேயொரு வாக்கினை எதிராகவும் பெற்றிருந்தது.

இந்தத் திருத்தத் தின் உள்ளடக்கத்தினை நடைமுறையில் கொண்டுவந்தமை தொடர்பில் ஐ.நா. சபையிலும் பெருமையடித்திருந்தார் மைத்திரிபால.

அரசமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் இந்த 19ஆம் திருத்தம், நாடாளுமன்றின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளுக்கு மட்டுப்ப்டுத்தியதுடன் அரச தலைவரினால் எழுந்தமானமாக நாடாளுமன்றினைக் கலைக்கும் நிலவரத்தையும் மட்டுப்படுத்தியது.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை அரசமைப்புச் சபையின் விதப்புரை களுக்கு அமைவாகவே அரச தலைவரினால் நியமிக்கப்படும் வகையில் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் இந்தத் திருத்தம், அரசின் முக்கிய பதவி களுக்கான. அரச தலைவரின் நியமன முன்மொழிவுகளை அரசமைப்புச் சபை செவ்வைப்படுத்தும் தன்மையையும் கொண்டிருக்கிறது.

**ஒக்டோபர் 26 குழப்பத்தில் அரச தலைவருக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்த திருத்தம்!**

எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டமுறையில் கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி இருள் கௌவும் போது நிகழ்ந்த குழப்பம், 19ஆம் திருத்தத்தின் புதிய பிடிகளை அரச தலைவருக்குத் தெரியப்படுத்தியிருந்தது. அதிகளவு சனநாயகப் பண்புகளைக் கொண்டதுஎன விளிக்கப்பட்ட இந்த திருத்தம், அரச தலைவரின் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் நிலவரத்திற்குப் பிடிகொடுத்திருக்கவில்லை. அது பழைய நிலவரத்தினை மீளக் கொண்டுவந்ததுடன், அரசமைப்பிற்கு எதிராக இயங்கியவர் என்னும் அவப்பெயரையும் அரச தலைவருக்குப் பெற்றுக் கொடுத்திருந்தது.

நீதித்துறைக்கும் நிறைவேற்றதி காரத்திற்கும் இடையில் முறுகல் நிலையை தோற்றுவித்திருக்கும் 19ஆம் திருத்தம் முழுமையாக அதன் மூலப் பிரதியில் உள்ளவாறான விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டால், குழப்பங்கள் ஏற்படாது என்று குறிப்பிடும் ஜயம்பதி விக்ரமரட்ன, மக்கள் விடுதலைமுன்னணியின் 20ஆம் திருத்தமும் இந்தக் குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்கிறார்.

**ம.வி.முவின் ஆர்ப்பரிப்பு**

அரச தலைவரின் ஆட்சி அதிகாரங்களை அதிகப்படுத்தும் வகையில் அரசமைப்பில் செய்யப்பட்ட பதினெட்டாம் திருத்தத்தால் ஏற்பட்ட நிலவரத்தினைத் திருத்துவதற்கென மாதுளுவாவ சோபித தேரர் உள்ளிட்ட தரப்பினரால் அழைத்துவரப்பட்டவரே மைத்திரிபால. அவருடைய இணக்கத்துடன் கொண்டுவரப்பட்ட திருத்தத்தை அவரே இப்போது சாபம் என விமர்சித்திருக்கிறார். அதுமாத்திரமல்லாமல் 19ஆம் திருத்தத்தினை ஒழிப்பது முன்னுரிமைக்குரியது என்கிறார். அடுத்த அரச தலைவர் தேர்தலில் தமது வேட்பாளரைப் போட்டியிட வைக்ககொடுக்குகட்டியுள்ள ம.வி.மு, நிறைவேற்றதிகார ஒழிப்பு ஆர்ப்பரிப்புடன் 20ஆம் திருத்தத்தினை ஊக்குவிக்கிறது.

ஆடத்தெரியாதவன் கண்டுபிடித்த மேடையின் கோணல் ஆட்சி அதிகாரங்கள் (அரசுதலைவரிடம்) ஓரிடத்தில் குவிவதைக் கட்டுப்படுத்தும் விதத்திலும், அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து இணங்கி அரசாட்சி வண்டியை இழுத்துச் செல்லும் வகையிலுமே 19ஆம் திருத்தத்தின் ஏற்பாடுகள் அமைந்திருக்கின்றன. நல்லாட்சிக் கூட்டரசின் முதலாம் இரண்டாம் ஆண்டுகளிலும் இந்தப் பண்புகளே வெளித்தெரிந்தன. நாடாளுமன்றில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் தரப்புடன் ஒற்றுமை அற்ற நிலையை எப்போது அரச தலைவர் ஏற்படுத்தத் தொடங்கினாரோ, அப்போதே 19ஆம் திருத்தம் அவருக்குக் கோணல் மேடையாகிவிட்டது. தடைப்பட்டிருக்கும் புதிய அரசமைப்புப் பணிகளும் அதிகம் சிலாகிக்கப்படும் பழைய அரசமைப்பின் திருத்தங்க ளும், புதிய அரசமைப்பை வரைவதற்காகத் தயார்செய்யப்பட்ட அறிக்கைகளின் தாள்க வீதியோரக் கச்சான்வியாபாரிகளுக்குவிரைவாகவிற்கப்படுவதற்கான சாத்தியத்தினை அதிகரிக்கின்றன என்றால் அதில் தப்பில்லை.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


## நிலைப்பதற்குத் தமிழர் மனங்களை வெல்ல வேண்டும்!

■ சந்திரசேகர ஆசாத்

15 வருடங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி ஒருவர் சிறையிலேயே சாவடைந்துள்ளார். இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் நோய் காரணமாகவே இறந்தார் எனச் சிறைத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். குறித்த கைதி மீது சுமத்தப்பட்டிருந்த குற்றத்தை ஏற்றுக் கொள்ளும்படி சில அதிகாரத் தரப்பினரால் வலியுறுத்தப்பட்டதாகவும், அதற்கு மறுத்த நிலையிலேயே இந்த இறப்புச் சம்பவித்ததாகவும் உறுதிப்படுத்தப்படாத சில தகவல்கள் வெளிவந்துள்ளன. எப்படியிருப்பினும் சிறையில் இத்தனை வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் சாவடைந்துள்ளார் என்றால் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடமை சிறைச்சாலை அத்தியட்சருக்கு உண்டு. ஆனால் இந்த விடயம், நோய் காரணமாகக் கைதி இறந்துவிட்டார் என்கிற ஒரு மருத்துவ அறிக்கையுடன் முடித்து வைக்கப்படுமென்றே எண்ணத் தோன்றுகிறது.

### தமிழ்க் கைதிகளின் உயிருக்கு உத்தரவாதமில்லை

இலங்கைச் சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களுக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன. அப்படியான ஒரு நிலையில் இந்தக் கைதியின் சாவுக்கு மட்டும் இவர்களிடம் நியாயத்தை எதிர்பார்ப்பது மடமையே. 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் இடம்பெற்றபோது வெலிக்கடைச் சிறைச்சாலையில் குட்டிமணி, தங்கத்துரை உட்படத் தமிழ் அரசியல் கைதிகள் 50பேர் வரை வெட்டியும் அடித்தும் கொல்லப்பட்டனர். சிறைச்சாலைக் காவலர்களின் முன்னிலையிலும், அவர்களின் ஒத்துழைப்புடனும் சிங்களக் கைதிகளால் இந்த வெறியாட்டம் மேற்கொள்ளப்பட்டது. கொல்லப்பட்ட அரசியல் கைதிகளின் உடல்கள் குதறப்பட்டு உருக்குலைக்கப்பட்டுச் சிறை முற்றத்தில் வீசப்பட்டன. இந்த இழி செயல் தொடர்பாக எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எவரும் தண்டிக்கப்படவில்லை.



### அடைத்து வைத்துக் கொல்லும் அநாகரிகத் தொடர்

சுற்றிவர உயர்ந்த மதில்களால் அடைக்கப்பட்ட, உறுதியான இரும்புக் கதவுகளால் பாதுகாக்கப்படுகின்ற ஒரு சிறை வளாகத்தில் நடந்த அநாகரிகமான படுகொலைகளுக்கு அந்தச் சிறைச்சாலையின் நிர்வாகம் கூடப் பதிலளிக்கவில்லை. அப்படிப் பதிலளிக்குமாறு அவர்களை எந்தத் தரப்பும் கட்டாயப்படுத்தவும் இல்லை. அடைத்து வைத்துக் கொல்லும் அநாகரீகம் அத்துடன் முற்றுப் பெற்றுவிடவில்லை. காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. உலகின் மிக அகோரமான, அநாகரிகமான, கேவலமான படுகொலைகளை அரங்கேற்றிய வரலாற்றுப் பெருமை இலங்கைச் சிறைத் தரப்பினருக்கு என்றுமே உண்டு. வவுனியாச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் தங்களை அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றுவதை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர். அந்த நிலையில் அவர்கள் கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். துன்புறுத்தப்பட்டவர்களில் ஓர் இளைஞர் சுயநினைவிழந்து பின்னர் உயிரிழந்தார். ஆனால், தற்போது கூறப்பட்ட காரணம்போலவே அவரும் நோய் காரணமாக இறந்தார் என்று கூறப்பட்டது.



### சிங்களக் கைதிகள் விடயத்தில் சிறை நிர்வாகம்

காலத்துக் காலம் நடத்தப்படும் தமிழ் அரசியல் கைதிகள் மீதான படுகொலைகள் கணக்கிலெடுக்கப்படாதவையாகவும் தண்டனைக்கு அப்பாற்பட்டவையாகவும் விளங்கி வருகின்றன.

2012ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் குழப்பம் விளைவித்த கைதிகள் மீது சிறைச்சாலை அதிகாரிகளும் சிறப்பு அதிரடிப் படையினரும் துப்பாக்கிச் சூட்டை நிகழ்த்தினர். அதில் 27 பேர் கொல்லப்பட்டனர். அது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டுச் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர். அது தொடர்பாக வழக்கு நடந்து வருகிறது. அதாவது சிறைகளுக்குள் இடம்பெறும் தமிழ்க் கைதிகளின் சாவுகள் கணக்கில் எடுக்கப்படாத நிலையில், சிங்களக் கைதிகள் கொலை செய்யப்படுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதையே இந்த விடயம் தொட்டுக் காட்டுகிறது. இந்த நிலையில்தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் செல்லும் தலைவர்கள் என்ன செய்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

### அக்கறையற்ற தமிழ்த் தலைவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருசிலர் தமிழ் அரசியல் கைதிகளைச் சென்று பார்வையிட்டு அவர்களுக்குச் சில உதவிகளை வழங்குகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாகவோ, அவர்களுக்கு நியாயம் கிடைக்க வைக்கவோ, அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கவோ தமிழ்த் தலைமைகள் எந்தவித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவோ அவர்கள் சந்திக்கும் அவலங்களைத் தடுத்து நிறுத்தவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தீர்க்கமான நடவடிக்கை எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டு தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. இரண்டு வருடங்களுக்கு முன்பு அரசியல் கைதிகள் தங்களை விடுவிக்கக் கோரியும், தம்மீதான விசாரணைகளைத் துரிதப்ப டுத்தக் கோரியும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அந்தப் போராட்டம் 20நாள்கள் கடந்தநிலையில், கைதிகள் இறக்கக் கூடிய நிலை ஏற்பட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அதன் பேச்சாளர் சுமந்திரன் உட்படச் சிலர் அந்தக் கைதிகளைச் சந்தித்தனர். அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி வழங்கினர். போராட்டம் கைவிடப்பட்டது.

### அரச பிரதிநிதியாகச் செயற்பட்ட சுமந்திரன்

கைதிகளின் விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது. அப்போதைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, சட்டமா அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அதில் உள்ளடங்கினர். அந்தக் குழுவில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்படி விவகாரத்தை ஆராயும் ஓர் அரச குழுவின் உறுப்பினராகச் செயற்பட்டாரே தவிர, அரசியல் கைதிகளின் நியாயங்களை முன்வைத்துத் தனது சக்தியையும் ஆற்றலையும் பாவித்துப் பேரம் பேசும் வகையில் செயற்படவில்லை. அதன் விளைவாக விசாரணைகளைத் துரிதப்படுத்தச் சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பதெனவும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட முடியாதவர்கள் குறுகிய கால மறுவாழ்வுக்கு அனுப்பப்பட்டு விடுவிக்கப்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. கண்துடைப்புக்காக ஒன்றிரண்டு பேர் மறுவாழ்வுக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் சிலர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு சித்திரவதைகள் மூலம் பெற்றுக் கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தைச் சாட்சியாக வைத்து 100 வருடம் 200 வருடம் எனச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இன்னும் சிலருக்குக் குற்றங்களை ஒப்புக் கொள்ளும்படி அழுத்தம் கொடுக்கப்பட்டு அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறைக்கு அனுப்பப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இந்த விவகாரத்தில் அரசின் பிரதிநிதியாகச் செயற்பட்டதன்றி அரசியல் கைதிகளின் நியாயங்களை நிலைநிறுத்திச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

### அரசிடம் பேரம் பேசும் வலிமை கூட்டமைப்புக்கு உண்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி அரசு நிலைத்து நிற்க முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. அரசிடம் சில விடயங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வலிமை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு உண்டு. தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து சிறைகளில் அநீதியான முறையில் பலவித இன்னல்களை அனுபவித்துக் கொண்டும் இறந்து கொண்டு இருக்கும் நிலையில் ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்கள் விடயத்தில் தனது வலிமையைப் பயன்படுத்தக்கூடாது. அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறியதும் புதிய அரசமைப்பும் அதன் மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்ட முடியும் என்ற கனவும் கானல் நீராகிவிட்டன. சிங்களத் தலைமைகள் ஏமாற்றிவிட்டன என்ற வழமையான ஒப்பாரி ஆரம்பித்து விட்டது. ஆனால், அரசியல் கைதிகள் விவகாரத்தையோ காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகளையோ கையாள மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டே கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும்போது அவர்களில் பலர் விடுதலையாகவோ பிணையில் வெளிவரவோ வாய்ப்புண்டு. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அனுசரணை வழங்கி அதனை ஏற்றுக் கொண்டிருந்தது. இரண்டரை வருடங்கள் கடந்த நிலையிலும் அந்தச் சட்டம் நீக்கப்படவில்லை. இலங்கையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இதை நிறைவேற்ற ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

### மக்களால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது கூட்டமைப்பு


காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடுதலை என்பன தொடர்பான தமிழ் மக்களின் போராட்டங்கள் அரசுக்கும் ஆட்சிப் பீடத்துக்கும் எதிரானவை. ஆனால் அவற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் கோசங்கள் எழுவதையும், உரைகள் நிகழ்வதையும் காண முடிகிறது. இவற்றின் பின்னால் தமிழ் மக்களுக்கு விரோதமான சில சக்திகள் இருப்பதும் உண்டு. எப்படியிருப்பினும் அதற்கான வாய்ப்பை வழங்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே.

கல்முனை வடக்குத் தமிழ் உபசெயலகத்தைத் தரமுயர்த்தும்படி கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின்போது அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விரட்டப்பட்டது இந்த நிலையின் வளர்ச்சியே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள். அவர்களின் முதன்மைக் கடன் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தமிழ் மக்களின் நலன்களுக்காகச் செயற்படுவதாகும். தொடர்ந்து அரசின் நலன்களின் அடிப்படையில் செயற்பட்டால் தமிழ் மக்களிடமிருந்து அவர்களை அந்நியப்படுத்த முனையும் சக்திகளுக்கு வாய்ப்பை வழங்கும் நிலையே வளர்ச்சியடையும்.

இனியாவது அரசியல் கைதிகள் விவகாரம் போன்ற தம்மால் தீர்வு காணக்கூடிய தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையிலெடுத்துத் தீர்வு பெற்று வழங்கினாலன்றித் தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்து நிலைத்திருப்பது என்பது கூட்டமைப்பால் முடியாத ஒன்றாகவே மாறும்.





# அகதிகளாகச் சென்ற தந்தை, மகள் சாவு

அமெரிக்காவில் குடியேறும் முயற்சியில் ஆற்றின் கரை வழியே சென்ற தந்தையும், மகளும் ஆற்று நீரின் ஓட்டம் சீற்றமடைந்ததால் நீரில் மூழ்கிப்பரிதாபமாகஇறந்தனர். அவர்கள்தொடர்பானஒளிப்படம்சமூகவலைத் தளங்களில் அதிகம் பரவி வருகிறது.

தென்அமெரிக்கநாடுகளில்ஒன்றானஎல்சல்வடார்நாட்டைச்சேர்ந்தஆஸ்கர் ஆல்பெர்டோ மார்ட்டினஸ் (வயது 25). பிழைப்புக்கு வழிதேடி தனது குடும்பத்துடன்அமெரிக்காவில்தஞ்சமடைய முடிவுசெய்தார். இதற்காகதனதுமனைவி டானியா அவலோஸ் மற்றும் 2 வயது மகள் ஆங்கி வலேரியா ஆகியோருடன் கடந்த வார இறுதியில், அமெரிக்க எல்லையை ஒட்டி அமைந்துள்ள, மெக்சிகோவின் மட்டமோரோஸ் நகருக்கு சென்றார்.

பன்னாட்டு எல்லையில் உள்ள புவேர்டா மெக்சிக்கோ பாலம் வழியாக அமெரிக்கா செல்ல திட்டமிட்டிருந்த அவர்களுக்கு, அந்த பாலம் சில நாள்களுக்கு மூடப்பட்டிருக்கும் என்ற செய்தி மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது.

பின்னர் ரியோ கிராண்டே ஆற்றின் கரை வழியே சென்ற அவர்கள், ஆற்றில் நீரின் ஓட்டம் அமைதியாக இருப்பதாகக் கருதி அதில் நீந்திச் சென்றுஅமெரிக்காவில்கரையேறிவிடலாம்எனஎண்ணினர். அதன்படிதனதுமகளைதோளில்சுமந்துசென்றதந்தைமகளுடன்ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார்.

'அகதிகள் தொடர்பான
இன்னொரு துயரம்...'



ஐரோப்பியநாடுகளில்தற்போதுஅனல்காற்று வீசிவருகிறது. இதிலிருந்து மக்களைப் பாதுகாக்க பல்வேறு ஏற்பாடுகளை அந்தந்த நாடுகள் மேற்கொண்டுள்ளன. காட்டுத் தீயும் பரவலாக ஏற்பட்டு வருகிறது. அந்த வகையில் ஸ்பெய்னில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயைக் காட்டும் ஒளிப்படமே இது.

நடந்து முடிந்த ஜி20 மாநாட்டில் பங்கேற்ற பிரிட்டனின் தலைமை அமைச்சர் மே, பிரிட்டனுக்கும் அதன் நேசநாடுகளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இனியும் நடந்துகொள்ள வேண்டாம்என்றுபுடினிடம்கோரிக்கை விடுத்தார்.






ரவுண்ட் தவேள்ட்

# ஆப்கானில் தலிபான்கள் தாண்டவம்

ஆப்கானிஸ்தான் நாட்டின் டைகுன்டி மாகாணத்தில் தலிபான்கள் நேற்றுமுன்தினம் தொடர்தாக்குதல்களைநடத்தினர். இதில்10 பொலிஸார் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டு மேற்குப் பகுதியில் தலிபான் கள் மற்றும் பல்வேறு சிறிய ஆயுதக் குழுக்களின் ஆதிக்கம் சமீபகாலமாக மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது. சில பகுதிகளைக் கைப்பற்றி அங்கு உள்ளூர் வரிவிதிப்பு உள்ளிட்ட நிர்வா கங்களை தங்கள் வசப்படுத்தியுள்ள தலிபான்கள், தமக்கெனப் போட்டி அரசை நடத்தி வருகின்றனர். தலைநகர் காபுலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்பது தலிபான்களின் எண்ணம். அவ்வாறு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட தாக்குதலிலேயே மேற்படி பொலிஸார் கொல்லப்பட்டனர்.

'தலிபான்களும் விடுவதாயில்லை...'

# ரஷ்யா வருமாறு ட்ரம்புக்கு அழைப்பு

தொகுப்பு
பிரகாஸ்



இரண்டாம் உலகப்போரின் 75ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் பங்கேற்க ரஷ்யாவுக்கு வருமாறு அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு ரஷ்ய அதிபர் புதின் அழைப்பு விடுத்துள்ளார்.

1939ஆம்ஆண்டுமுதல்1945ஆம் ஆண்டுவரை நடந்த இரண்டாம் உலகப்போரில் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவை நேச நாடுகள் என்றும் எதிர் அணியில் அச்சு நாடுகள் என்று அழைக்கப்பட்ட ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியன ஒன்று சேர்ந்து போரிட்டன. சுமார் ஆறாண்டுகள்நீடித்தஇந்தஇரண்டாம்உலகப்போரின்போது, ஹவாய் தீவுகளில் உள்ள அமெரிக்காவின் பியர்ல் ஹார்பர் கடற்படைத் தளத்தைத் தாக்க தனது படைகளுக்கு உத்தரவிட்டார் ஜப்பான் ராணுவ தளபதி ஜெனரல் டோஜோ.

போர் விதிகளின்படி முறையான முன்கூட்டியே அறிவிப்புச் செய்யாமல் எந்த நாடும் இன்னொரு நாட்டைத் தாக்கக் கூடாது. ஆனால் எச்சரிக்கை செய்தால் அமெரிக்கா உஷார் ஆகிவிடும் என்பதால் எதிர்பாராத திடீர் தாக்குதலை ஜப்பான் வான்டைகள் நடத்தின. இதில் அமெரிக்காவின் 20க்கும் மேற்பட்ட போர்க் கப்பல்களும், 350க்கும் மேற்பட்ட போர் வானூர்திகளும் சேதமடைந்தன. இந்த உலகப்போரில் நேச நாடுகள்வெற்றிபெற்றன. இந்தவெற்றியைதற்போதுகொண்டாடி வருகிறது ரஷ்யா. இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவே ட்ரம்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

'புறப்படுவாரோ ட்ரம்ப்...'



# அரசியல், மத பிரக்ஞைகளின் தவறான வழிநடத்தலில் சமூகம்



**உளத்தாக்கம் சிறிதாக இருந்தால் அது எமது உலகப் பார்வையில் சிறிதளவு உடைவையே ஏற்படுத்தும். இதைத் துன்பம் எனலாம். உளத்தாக்கம் பெரிதாக இருந்தால் அது எமது உலகப் பார்வையையே மாற்றிவிடும். இதைக் கலி எனலாம். கலி நிலை எம்மை முன்னைய நிலைக்குச் செல்ல விடாது. உளத்தாக்கத்துக்குப் பின் மனிதன் உலகைப் புதிய பார்வையில் கற்க வேண்டும். இதற்கு உரிய மதிநுட்பக் காப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபடும். சிறந்த மதிநுட்பக் காப்பை உடையோர் சிறந்த முன்னேற்றத்தை அடைவர்.**

மருத்துவர் சி. யமுனானந்தா

சிறு பிள்ளைகள் விளையாடுவதற்கும், அவர்களின் புத்திக் கூர்மையை அதிகரிப்பதற்கும் கடதாசி மட்டையிலான பொருத்தும் விளையாட்டுப் பொருள்களில் பல இன்று பிரபல்யமாகி உள்ளன. அவற்றின்மூலம் வீடு, மயில், கப்பல், ஆகாய வானுர்தி போன்ற இன்னோரன்ன அமைப்புக்களை முப்பரிமாணத்தில் சிறுவர்கள் பொருத்தி விளையாடுகிறார்கள். இவ்வாறு பொருத்தி விளையா டும்போது அவர்களின் கற்றல்திறன் அதிகரிக்கின்றது. இதன்போது அந்த விளையாட்டுப் பொருளில் சில பகுதி அல்லது முழுவதும் குழப்பப்பட்டாலோ அல்லது காணாமல் போனாலோ அதை உணர்ந்து அவற்றைச் சில பகுதியாகப் பூர்த்தி செய்யும் திறனைப் பெறுவர். இதை உள்வாங்கி நகரல் (அஸிமிலேஷன்) என்பர். இதுவே ஒரு பாதிப்பின் பின் மேற் கொள்ளப்படும் கற்றல் செயற்பாடாகும். இதற்கு அடுத்தகட்டமாகக் காணாமல் போனபகுதிகளுக்கு தம்மால் ஏற்ற பொருள்களைப் பொருத்தி முழுமைப்படுத்த முனைவர். இதை நிரப்பி நகரல் 'அக்கோமோடேஷன்' என்பர். திறமையான சிறுவர்களாக இவர்கள் இணங்காணப்படுவர். இத்தகைய கற்றல் செயற்பாடுகள் சாதாரண வாழ்விலும், அசாதாரண சூழலிலும் மனிதர்களில் நிகழ்கின்றன.

**தனி மனிதச் சிதைவாக உளத்தாக்கமும் நெருக்கீடும்**

பெரியளவான உளத்தாக்கங்கள் தனிமனிதவாழ்விலும் சமூகத்திலும் ஏற்படலாம். தனிமனித வாழ்வில் ஏற்படும் பெரியளவு உளத்தாக்கங்களாக நெருங்கிய உறவுகளின் இறப்புக்கள், பிரிவுகள் என்பன அமைகின்றன. நவீன வன்முறைத் தொழில்நுட்பம் ஒரு கணத்தில் ஒரு சமூகத்தைக் கூட்டாக அழிக்கின்ற தன்மையை இன்று நாம் காண்கின்றோம். இதை இன்று நாம் சமூகமாகக் காண்கின்றோம். மேலும் இன்றைய் தகவல் தொழில்நுட்பத் தொடர்பாடல் உளப்பாதிப்பை ஒரு கணப்பொழுதில் பல்லாயிரக்கணக்கானோருக்கு ஏற்படுத்தி விடுகின்றது. இவை யாவும் உளத்தாக்கத்துக்குப் பின்பான நெருக்கீட்டை (போஸ்ற் ற்றயுமற்றிக் ஸ்ற்றீஸ்) ஏற்படுத்துகின்றன.


**உளப் பாதிப்பின் பின்பான இயக்கம்**

ஓர் அழகான பூச்சாடி மீது கல்லெறியும்போது அது எப்படி நொருங்குகின்றதோ அவ்வாறே மனித மனதிலும் நெருக்கீடுகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. உளப்பாதிப்பை எதிர்கொண்ட மனம் அதற்குப் பின் இரண்டு பாதைகளில் இயங்கலாம். முதலாவது அந்தப் பாதிப்புக்களை உள்வாங்கி நகர்தல்.

மற்றையது அந்தப் பாதிப்புக்களை நிரப்பிநகரல் என அவை அமையும். உளத்தாக்கத்துக்குப் பின்பான மனம் அதை நிரவி நகரல் என்பது உளத்தாக்கத்துக்குப் பின்பான வளர்ச்சி அல்லது உளத்தாக்கத்துக்குப் பின்பான மீள் பழநிலை ஆகும்.

**நெருக்கீட்டுக்கும் மீள் படிநிலைக்குமான வேறுபாடு**

உளத்தாக்கத்துக்குப் பின்பான நெருக்கீட்டின் அளவுக்கும் உளத்தாக்கத்துக்குப் பின்பான மீள் படிநிலைக்கும் இடையிலான தொடர்பு பின்வருமாறு அமையும். அதாவது உளத்தாக்கத்தின் பாதிப்புக் குறைவாக உள்ள போது உளத்தாக்கத்துக்குப் பின்பான மீபடிநிலை குறைவாக இருக்கும். உளத்தாக்கத்துக்குப் பின்பான நெருக்கீடு அதிகமாகும் போது உளத்தாக்கத்துக்குப் பின்பான மீள்படிநிலை அதிகரித்து. உளத்தாக்கத்துக்குப் பின்பான நெருக்கீடு மேலும் அதிகரிக்கும் போது உளத்தாக்கத்துக்குப் பின்பான மீள்படிநிலை குறைவடையும்.



**மீள விடாத கலி நிலை**

உளத்தாக்கம் சிறிதாக இருந்தால் அது எமது உலகப் பார்வையில் சிறிதளவு உடைவையே ஏற்படுத்தும். இதைத் துன்பம் எனலாம். உளத்தாக்கம் பெரிதாக இருந்தால் அது எமது உலகப் பார்வையையே மாற்றிவிடும். இதைக் கலி எனலாம். கலி நிலை எம்மை முன்னைய நிலைக்குச் செல்ல விடாது. உளத்தாக்கத்துக்குப் பின் மனிதன் உலகைப் புதிய பார்வையில் கற்க வேண்டும். இதற்கு உரிய மதிநுட்பக் காப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபடும். சிறந்த மதிநுட்பக் காப்பை உடையோர் சிறந்த முன்னேற்றத்தை அடைவர். அதாவது உளநெருக்கீட்டில் ஏற்பட்ட தடைகளைத் தாண்டி முன்னேறுவர். நெருக்கீட்டினால் தவறான பாதைக்குச் செல்லாது பிரச்சினைகளுக்குத் தீர்வை எதிர்கொண்டும் உணர்வுகளால் ஏற்படும் மாற்றங்களுக்குத் தீர்வை எதிர்கொண்டும் நகர்வர். இவையே உளத்தாக்கத்துக்குப் பின்பான மீள்படிநிலை ஆகும்.

**சமூகக்கூட்டு மதிநுட்பக் காப்பு முக்கியம்**

உணர்வுபூர்வமான எதிர்கொள்ளலில் சமயக்கிரியைகள், கலாசார வழக்கங்கள் என்பன இன்றியமையாதவையாகின்றன. தனிமனிதனுக்கு உளத்தாக்கத்துக்குப் பின்பான மீள் படிநிலை அமைகின்றதோ அவ்வாறே கூட்டான வன்மையான இன்னல்களுக்கு உட்பட்ட சமூகத்துக்கும் வன்மையான இன்னல்களுக்குப் பின்பான சமூக மீள் படிநிலை உண்டு. அதை அடைவதற்கு அந்தச் சமூகத்துக்குக் கூட்டான மதிநுட்பக்காப்பு மிகவும் முக்கியமானதாகும். உதாரணமாக இறுதிப்போரில் சந்தித்த கொடும் இன்னல்களுக்குப் பின்பான சமூக மீள் படிநிலையில் பத்து ஆண்டுகள் கழிந்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. குறிப்பாகச் சுமார் 30 தொடக்கம் 50 வ்யதில் உள்ளவர்களுக்குப் பன்னாட்டுத் தரத்திலான தொழில்நுட்பக் கற்கைநெறிகளும், அவற்றுக்கான தொழிற்தகைமைச் சான்றிதழ்களும் வழங்கும் தொழிற்கல்வி நிலையங்கள் உருவாக்கப்படல் வேண்டும். இதனால் அவர்கள் சமூகவாழ்வில் இழந்த சில விடயங்களைத் தாண்டி முன்னேற முடியும்.

அண்மைய இன, மதரீதியான வன்முறைகளுக்குப் பின்பாக எமது சமூகத்தின் கூட்டான மதிநுட்பக்காப்பு மிகவும் சாதுரியமாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் அரசியல் பிரக்ஞைகள், சமயப் பிரக்ஞைகள் தவறான பாதையில் சமூகத்தை வழிநடத்த முயல்கின்றன. இது எமது எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதல்ல.



# காணி – நிலங்கள் தாரளம் காணியற்றவர்கள் ஏராளம்

■ ந.சதாசிவ ஐயர்

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களில் பலருக்கு ஒரு துண்டுக் காணிகூட இல்லை. சிறியதொரு துண்டுக்காணி இருந்தாலும் வீட்டுத் திட்டம் மூலம் அவர்களுக்கு வீடு வழங்கி உதவி செய்யலாம் என்று யாழ்.மாவட்டச் செயலர் ஆதங்கம் தெரிவிக்கிறார். யாழ்ப்பாணத்தில் பகிர்ந்து கொடுப்பதற்கு மக்களின் வாழ்வுக்கு உகந்த இடங்களில் அரச காணிகள் போதுமானதாக இல்லை என்பது உண்மையே. ஆனால், யாழப்பாணத்தில் காணிகள் இல்லாமல் இல்லை.



### பயன்பாடற்றுக் கிடக்கின்ற தனியார் காணிகள்

யாழ்ப்பாணத்தில் தனியார் காணிகள் தாராளமாக உள்ளன. அவற்றில் தேடுவாரற்றும், தேவைக்கு அதிகமாகவும், உரித்திருந்தும் சரியான முறையில் உரிமைகோரப்படாமலும், உரித்திருந்தும் தெரியாதிருப்பதும், உரித்திருந்தும் கவனிப்பராற்று விடப்பட்டுள்ளதுமான தனியார் காணிகள் கணிசமான அளவு உள்ளன. இவ்வாறன காணிகளை உரியவர்கள் உறுதிப்படுத்திக் கொள்வதாலும், தமது பொருளாதாரம் சிறந்ததாக இருப்பின் தாராள சிந்தை யுடன் அவற்றைக் காணி இல்லாதவர்களுக்கு முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ வழங்குவதாலும், அல்லது நியாயமான விலைக்கு விற்பதாலும் காணியிருப்பவர்கள் காணியற்ற வசதிகுறைந்த தங்கள் உறவினர், நண்பர்களுக்கு அல்லது கஸ்ரப்பட்டவர்களுக்கு ஒரு துண்டுக் காணியை வழங்குவதாலும் எம்மவர் காணிப் பிரச்சினைக்கு நாமே உதவலாம். கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதியுள்ள, ஓரளவாவது தண்ணீர் வசதியுள்ள, தரிசாகக்கிடக்கும் பெரிய காணிகளை இவ்வாறு பகிர்ந்து வழங்கினால் நிச்சயமாக வீட்டுத் திட்டங்கள் உருவாகுவதற்கு வாய்ப்புண்டு.

> தமது பொருளாதாரம் சிறந்ததாக இருப்பின் தாராள சிந்தை யுடன் அவற்றைக் காணி இல்லாதவர்களுக்கு முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ வழங்குவதாலும், அல்லது நியாயமான விலைக்கு விற்பதாலும் காணியிருப்பவர்கள் காணியற்ற வசதிகுறைந்த தங்கள் உறவினர், நண்பர்களுக்கு அல்லது கஸ்ரப் பட்டவர்களுக்கு ஒரு துண்டுக் காணியை வழங்குவதாலும் எம்மவர் காணிப் பிரச்சினைக்கு நாமே உதவலாம்.

### பகிர்ந்தளிப்பதில் பலரும் ஆர்வம் காட்டலாம்

கடந்த காலத்தில் பிரதேச செயலகங்கள் கட்டுவதற்கு அரசால் நிதியளிக்கப்பட்டபோதும் காணியில்லாததால் அவை கட்டமுடியாத சூழல் இருந்தது. பிரதேச மக்கள் பணம் சேர்த்துக் காணி வாங்கிக்கொடுத்து உதவியதால் எழுந்து நிற்கும் பிரதேச செயலகங்களை யாழ்ப்பாணத்தில் காணலாம். நல்ல உள்ளம்கொண்ட ஒருவர் நல்லூர் பிரதேசத்தில் பெறுமதியான காணியொன்றை நன்கொடையாகக் கொடுத்ததால் அதில் மக்களுக்குச் சேவை செய்யும் அலுவலகமொன்று கட்டப்படவுள்ளது. இதேபோன்று நல்ல உள்ளங்கள் முக்கியமாக உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், சமூக சேவை அமைப்புக்கள் இதில் ஆர்வம் காட்டினால் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் காண முடியும். தங்கள் பகுதிகளில் தரிசாகவும், பற்றை மண்டியும் இருக்கும் காணி உரித்தாளர்களை இனம் கண்டு, அவர்களுடன் தொடர்பு கொண்டு, அதைப் பயனுள்ளதாக ஆக்கும்படி அவர்களுக்கு ஆலோசனை கூறுதல் பொருத்தமானதாகும். புலம் பெயர் மக்கள் தங்கள் முதுசக்காணிகளை இனங்கண்டு உறுதிப்படுத்திக்கொள்வதுடன் காணி இல்லாதவர்களுக்கு அவற்றில் ஒரு பகுதியையாவது வழங்கும்படி ஆலோசனை வழங்கலாம்.

### பல பிரச்சினைகளுடன் வடக்குக் காணிகள்

வடக்கில் இருக்கின்ற தனியார் காணிகள் உறுதிகள் மூலம் உரிமை கொண்டவையாகும். ஆனால் நீண்டகாலப் போர், இடம்பெயர்வு, புலம் பெயர்வு, இராணுவ ஆக்கிரமிப்புக்கள் காரணமாகப் பல பிரச்சினைகளுக்குக் காணிகள் முகம் கொடுப்பதுடன் காணி உரிமையாளரும் அல்லற்படுவது காணக்கிடைக்கின்றது. உறுதிகள் இருக்கின்றன காணிகள் எங்கே என அடையாளப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. காணி இருக்கிறது உறுதியில்லை, முதுசக்காணி எனத் தெரிகிறது எப்படி உறுதிப்படுத்துவது எனத் தெரியவில்லை.

உரிய முறையில் உரிமைகோரி கைமாற்றம் செய்யப்படாததால் மரத்தின் கிளைபோல் சிறு துண்டுக்காணி ஒன்று பலருக்குப் பல்கிப்பெருகிச் சிக்கல், காணியானது ஒருவர் பராமரிப்பில் உள்ளது ஆனால் பலருக்குப் பங்கு, குடும்ப ஒற்றுமையீனத்தால் பிரிவிடல் செய்யமுடியாத நிலை, ஒருவர் சம்மதிக்காவிட்டாலேபோதும் இழுபறியாகும் மற்றவர்கள் ஒன்றும் செய்யமுடியாத நிலை, தேசவழமைச் சட்டப்படி கணவரின் சம்மதமின்மையால் தனது முதுசச் சீதன மற்றும் நன்கொடைக் காணிகளை ஏதும் செய்ய முடியாமல் தவிக்கும் மனைவி, நீடிக்கின்ற காணி வழக்கால் பயன்படுத்தப்படாமல் பல வருடங்களாகப் பற்றை மண்டியிருக்கும் காணிகள்... இப்படியாக இங்குள்ள காணிகள் தொடர்பில் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

### இணக்கமும் தீர்வும்

தற்போது பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் இயங்கி வருகின்ற இணக்க சபைகள் காணி விவகாரத்தில் இணங்கி வருபவர்களுக்கு முடிந்த அளவு இணக்கமான தீர்வுகளை வழங்குகின்றன. ஆனால் இணங்கி வராதபோது, விளங்கிக் கொள்ள முடியாதபோது நிலை இழுபறிதான். நீதிமன்று, வழக்கு என இறங்கினால் பெறுமதிக்குமேல் செலவும், காலவிரயமும்தான் மிஞ்சும்.

### பங்காளரின் அசண்டையால் பாதகங்கள்

ஒற்றுமையாகத் தீர்வு கண்டால் எத்தனை நன்மைகள். காணியில் பங்குள்ளோர் எனது பங்கிருக்கட்டும் பிறகு பார்ப்போம், அவசரமில்லை. என அதைச் சட்டரீதியாக அணுகவும் தீர்வு காணவும் முன்வராமல் உதாசீனம்செய்யும்போது பலர் பாதிக்கப்படுகின்றனர். மற்றைய பங்காளர் தமக்குரிய பங்கைப் பயன்படுத்த முடியாதநிலை ஏற்படுகிறது. உரிய அலுவகங்களினூடாகத் தேவைகளை நிறைவேற்ற முடியாதநிலையில் தவிக்கிறார். வீட்டுத்திட்டம் பெறவோ, வங்கிக்கடன்பெற்று வீடுகட்டவோ, தொழில் முயற்சியில் ஈடுபடவோ, ஜீவனோபாயம் தேடவோ முடியாத நிலையில் தவிக்கிறார். ஆகவே காணியில் பங்கிருப்போர் தாம் ஓரளவாவது வசதியாயிருக்கும்போது அல்லது புலம்பெயர்ந்து வாழும்போது தமது பங்கை உறுதிப்படுத்திப் பேணுவதுடன் தமக்குத் தேவையில்லாத போது அதை மற்றையவருக்குக் கொடுக்கலாம். அல்லது நியாயமான விலைக்கு விற்கலாம். அல்லது முறையான எழுத்துரு ஆவணம் மூலம் யாருக்காவது குத்தகைக்காவது கொடுக்கலாம். இதனால் காணி பயன்படுத்தப்படும். கிராமப்பகுதிகளில் பரந்து பட்டுக்காணப்படும் கட்டாந்தரையான தனியார் காணிகளையும் இவ்வாறு காணி இதனால் இல்லாதவர்களுக்குப் பயனளிக்கும் வகை செய்யலாம்.

### இவை சில உதாரணங்கள்

1. வலி வடக்கில் கைவிடப்பட்ட 20 பரப்புக் காணியது. நல்ல தோட்டக்காணி. இடம்பெயர்வின் முன் உரியவர் குத்தகைக்குக் கொடுத்திருந்தார். பின்னர் உரியவர் இறந்துவிட்டார். குத்தகை செய்தவரும் இறந்துவிட்டார். இப்போது குத்தகை செய்தவரின் மகன் அது தனது தந்தையின் காணியா எனத் தேடிப் பார்த்தபோது தான் அது குத்தகைக் காணியெனத் தெரிய வந்தது. ஆராய்ந்ததில் இறந்துபோன உரித்தாளரின் பின்னுரித்தாளர்கள் 32பேர். யாவரும் வெளிநாட்டில். அவர்களைத் தேடிப்பிடித்ததில், அவர்களில் 6பேர் தமது பங்கை வைத்திருக்க விரும்பினர். மற்றவர்கள் தேவையில்லை என்றனர். எனினும் குத்தகை;காரரின் மகன் துவண்டுவிடவில்லை. அயராது முயன்று யாவரிடமும் சம்மதம் பெற்று அற்றோணித் தத்துவம்பெற்று முறைப்படி பிரிவிடல் செய்ய ஆவன செய்தார். வெளிநாட்டில் வாழந்தவர்கள் அவருக்கும் ஒரு துண்டுக் காணியைக் கொடுத்தனர். அவருக்கே தொடரந்தும் காணியைக் குத்த கைக்கும் கொடுத்தனர். இதற்கு எடுத்த காலம் ஒரு வருடம். செலவு ஒரு லட்சம். காணி சமூகத்துக்குப் பயனுமானது காணியில்லாதருக்கு ஒரு துண்டுக் காணியும் கிடைத்தது.
2. வலி வடக்கில் ஒரு முதியவர். கைவிடப்பட்ட காணிகளில் தான் வாழ்ந்த அயலை நன்கு அறிந்தவர். உரியவர்கள் இல்லாத நிலையில் பின்னுரித்தாளர்களை இனங்கண்டு, அவரவர் காணிகளை அடையாளம் காட்டினார். உரித்தாளரைக் கண்டுபிடித்து அயலவர் உதவியுடன் மீளமைத்தார்.
3. பெறுமதியற்ற உவர்த்தன்மையான ஒரு காணியைப் போர்க்காலம் விழுங்கியது. உரியவர், சாக பின்னுரித்தாளர் எனத் தொகை 12ஆனது. இதில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வெளிநாட்டில். இலங்கையிலிருக்கும் ஒருவர் முயற்சி எடுத்தார் சிறிது சிரமப்பட்டார். இன்று அது அவர்களுள் வசதியற்ற ஒருவருக்கு உரித்தானது. எனவே இனியாவது இது குறித்துச் சிந்தித்துச் செயலாற்றுவோம். "ஆடி அடங்கும் வாழக்கையடா... அரையடி நிலமும் சொந்தமில்லையடா" காணிகளைப் பேணுவோம் பயன் படுத்துவோம் பகிர்ந்தளிப்போம் போதுமென்று நினைப்போம். தமிழர் பகுதிகளில் தான் காணி வழக்குகள் அதிகம் என்றிருக்கின்ற ஏளனச் சொல்லை இனியாவது இல்லாதாக்குவோம்.

*கட்டுரையாளர் - ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்.*



# தென்கிழக்கு திசையில் இருந்து....






அனார்கலி

## மணிப்புலவரது நூல்கள்

நாடறிந்தஎழுத்தாளர், சாய்ந்தமருதைச் சேர்ந்த மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத், தம்மிடமிருந்த இரண்டாயிரம்நூல்களைத்தென்கிழக்குப் பல்கலைக்கழக அஷ்ரப் ஞாபகார்த்த நூலகத்துக்கு அன்பளிப்புச்செய்துள்ளார்.
இதற்கென ஒலுவில் வளாகத்திலுள்ளமேற்படிநூலகத்தில்மணிப்புலவரின்நூல்களுக்கெனகாட்சிப்படுத்தல்கூடம்ஒன்றும்ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நூலகர் எம்.எம். றிபாயுதீன் தெரிவித்தார்.
மணிப்புலவர் மஜீதினால் எழுதப்பட்ட 18 நூல்களும் காட்சிப்படுத்தலில் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

**அத்தனையும் அறிவுப் பொக்கிசங்கள்**

## தேசியப்பிரச்சினையாம்!

கல்முனை உப தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவதனால் முஸ்லிம்களுக்கு ஏற்படவுள்ள அநீதியை முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினையாக முன்னெடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் இராஜங்க அமைச்சரும்நாடாளுமன்றஉறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ்தலைமையில்கல்முனையில்நடைபெற்றமுக்கியகூட்டமொன்றில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டது.
கல்முனைவடக்குதமிழ்உபபிரதேசசெயலகம்தரமுயர்த்தப்படுமானால்அது கல்முனைமுஸ்லிம்களுக்குபெரும்இழப்பைஏற்படுத்துமெனவும்அவர்களது பொருளாதாரத்தைகேள்விக்குறியாக்குமெனவும்பொதுவாக இலங்கைமுஸ்லிம் சமூகத்தின் அரசியல், பொருளாதாரத்தைப் பலமிழக்கச் செய்து தமது தேசியத்தைச் சிதைப்பதற்கு வழி வகுக்குமெனவும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் முன்மொழிவை ஒரு அறிவிப்பாக வெளியிட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**விடாக்கண்டன், கொடாக்கண்டன்!**



## றம்புட்டான் பருவகாலம்

றம்புட்டான் பழப் பருவம் ஆரம்பமாகியுள்ளதால் அம்பாறைமாவட்டத்தின்பலபிரதேசங்களிலும்றம்புட்டான்பழ வியாபாரம் களைகட்டி வருகின்றது.
'மள்வானை' எனப்பெயர்பெற்றஇந்தச்சுவைமிகுந்தபழங்களைக் கொழும்பு -மள்வானைப் பகுதிகளுக்குச் சென்று கொள்வனவுசெய்துவரும்உள்ளூர்வியாபாரிகள்தினமும் நல்ல வருமானம் பெற்று வருகின்றது. மாவ்டடத்தின் முக்கிய நகரங்கள், பொதுச்சந்தைகள் மற்றும் முதன்மை வீதியோரங்களில் றம்புட்டான் வியாபாரம்களைகட்டிவருவதுகுறிப்பிடத்தக்கது.

**மள்வானை மள்வானை!**

## இப்படியும் ஒரு சவால்

கல்முனை வடக்குத் தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தல் விடயத்தில் மூக்கை நுழைத்து தமிழ் மக்களின் உரிமையைப் பெற்றுத் தருவமாக நீலிக்கண்ணீர் வடிக்கும் கல்முனை விகாராதிபதி ரண்முத்துகல தேரர், அத்துரலிய ரத்னதேரர், கலகொட அத்தே ஞானசாரதேரர் ஆகியோருக்குக் கல்முனை முஸ்லிம் பிரமுகர் ஒருவர் சவாலொன்றை பகிரங்கமாக விடுத்துள்ளார்.
கல்முனை பளீல் பவுண்டேசன் தலைவரும் கல்முனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.ஏ.அப்துல் கபூர் பொது பகிரங்க சவாலை விடுத்தார்.
"உண்மையில்இந்தத்தேரர்கள்தமிழ்மக்களில் பரிவு, அக்கறை கொண்டவர்களானால் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல் போனோர் விவகாரம், வடக்கு-கிழக்கு இணைப்பு, தமிழ் மக்கள் எதிர்பார்க்கும்இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வுஎன்பவற்றுக்காகஅரசுடன்போராடிஅவற்றுக்குத்தீர்கிடைக்க வைக்க முன்வருவார்களா?" இவ்வாறு அப்துல் கபூர் சவால் விடுத்தார்.

**சரியான போட்டிதான்.**

## பக்தர்கள் படையெடுப்பு

கதிகாமம் ஆடிவேல்விழாஎதிர்வரும்3ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளதால்நாட்டின்பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள் கதிர்காமம் நோக்கிப் படையெடுக்கத்தொடங்கியுள்ளனர். குறிப்பாகக்கிழக்கின் பலமாவட்டங்களிலிருந்தும்பெருந்தொகையான இந்து மக்கள் கால்நடையாகவும் வாகனங்களிலும் கதிர்காமத்துக்குப் பக்தி பூர்வமாகத் தினமும் பயணித்த வண்ணமுள்ளனர்.
இந்த நிலையில் வழமை போன்று திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துச் சாலைகள் கதிர்காம பக்தர்களின் நலன்கருதி சிறப்பு பஸ் சேவைகளைத் தினமும் நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. முன்னோடியாக கல்முனை பஸ் சாலையிலிருந்து கதிர்காமத்துக்கான தினசரி பேருந்து சேவை தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் உற்சவ காலத்தில் கூடிய பேருந்து சேவைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.
மேலும்கதிர்காமஉற்சவத்துக்குகால்நடையாகச் செல்லும் பக்தர்களுக்காகக் கடந்த 27ஆம் திகதி முதல் காட்டுப்பாதை திறக்கப்பட்டுள்ள அதே வேளைஜூலை3ஆம்திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இந்த ஆடிவேல் விழா ஜூலை 18ஆம்திகதிதீர்த்தோற்சவத்துடன்முடிவடையவிருக்கின்றது.

**கதிர்காமக் கந்தன் அருள் பாலிப்பாராக!**



## வேண்டாம் முரண்பாடுகள்

தமிழ்,முஸ்லிம்மக்களிடையேமுரண்பாடுகள் ஏற்படாத வகையில் கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தல் விவகாரத்துக்குத்தீர்வுகாணவேண்டும். இவ்வாறு முஸ்லிம்காங்கிரஸின் திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர்கருத்துவெளியிட்டார். இந்தவிடயத்தில்பேரினவாதசக்திகள்உள்நுழைந்துகுளிர்காய்வதற்கு இடமளிக்காது ஒற்றுமைக்கான விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டுமெனவும்அவர்கேட்டுள்ளார். சமூகஒற்றுமையைச்சீர்குலைக்கும்சக்திகளுக்கு இடமளியாதீர் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

**இதயம் திறந்து பேசுங்கள்!**

## ஹக்கீமின் கருத்து

முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான அடக்குமுறை, அடாவடி முடிவுக்கு கொண்டுவரடப்பட்ட வேண்டுமெனவும் அதற்கானஉத்தரவாதம் கிடைக்கப்பெறாமல் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லையென்வும்.
சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ள கருத்துத்தென்கிழக்கு முஸ்லிம் மக்களிடையே பெரும் வரவேற்பைப்பெற்றுள்ளது. பதவிகள், படாடோபங்களுக்காகசமூகத்தை விற்கமாட்டோம், விலைபோகமாட்டோமென்பதைக் ஹக்கீம் எனும் முஸ்லிம் தலைமை உணர்த்தியுள்ளதுஎனஅம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும்அமைப்புத்தெரிவித்துள்ளது.

**துணிந்து நில் தொடர்ந்து செல்!**



## மூன்றாமிடம்





சுகாதார அமைச்சால் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட சிறந்த ஆரோக்கியவாழ்வுநிலையத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் நிந்தவூர் ஆதார மருத்துவமனை தேசிய மட்டத்தில் மூன்றாமி டத்தைப் பெற்றுள்ளது.
இதற்கானவிருதுவழங்கும்நிகழ்வுகொழும்புஹெக்டர்கொப்பகடுவ விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது நிந்தவூர் ஆதார மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர்மருத்துவர்திருமதிசஹீலா ராணி இஸடீன் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடமிருந்து விருதைப் பெற்றுக் கொண்டார்.

**சாதனைகள் படைப்போம்.**

தாஸ் மாஸ்ரர்

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

தொடர் 55



**கட்டுநாயக்கா வானூர்தித் தளத்தின் மீது புலிகள் தொடுத்த தாக்குதலைத் தொடர்ந்து களுத் துறை பூஸாவில் இருந்து கைதிகள் ஒருவரையும் வெளியே எடுக்க வில்லை. நீதிமன்றத்துக்குக் கொண்டு போகும் வழியில் சிங்களக் கிராமங்களே இருக்கின்றன.**

புதிய கிறிஸ்தவப் பிரிவொன்றில் சேர்ந்திருந்த ஒருவர் களுத்துறைச் சிறைக்குள் இருந்தார். இரவு-பகல் என்றில்லாமல் எந்த நேரமும் முட்டுக்காலில் நின்று பிரார்த்தித்துக்கொண்டிருப்பார். எந்த நேரமும் தூய ஆவியைப் பற்றித்தான் சொல்லிக்கொள்வார். அந்த விசுவாசம் எனக்கும் வர வேண்டும் என விரும்பினார். “இறைவன் எங்களை இந்த நிலையில் வைத்திருக்கிறார். அவரது கிருபை கிடைத்ததும் வெளியில் போய்விடுவோம்' என்று பலமாக நம்பிக் கொண்டிருந்தார். நான் அவரைச் சந்தித்தபோது அவர் 5 வருடங்களைச் சிறைக்குள் கழித்திருந்தார்.

அங்கிருந்த இன்னொருவர் எப்பொழுதும் தனது காதல் பற்றியும் தான் காதலிக்கு எழுதிய கடிதங்கள், அதற்கு அவள் எழுதிய பதில்கள், படங்கள் என்று நானாவித கதைகளைச் சொல்வார். அங்கிருந்த தடுப்புக்காவல் கைதிகள் வெவ்வேறுபட்ட விடயங்களில் தம்மை உட்படுத்திக் கொண்டிருப்பதைப் புரிந்துகொண்டேன். நான் அவர்களுடன் ஒட்டாதிருந்த போதிலும் அவர்கள் தனித் தனியாகத் தங்கள் உள்ளக்கிடக்கைகளை என்னுடன் பகிர்ந்து கொண்டனர்.

⊙⊙⊙⊙⊙

23.7.2001 அன்று அதிகாலை கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தை விடுதலைப் புலிகளின் சிறப்புப் படைப் பிரிவு ஒன்று தாக்கியழித்து விட்டதாகச் செய்திகள் வெளியாகின. துணியால் சுற்றப்பட்ட சிறிய வானொலிப்பெட்டியில் தமிழ் -சிங்களச் செய்திகளை அவதானமாகக் கேட்டேன். அங்கிருந்த கைதிகளும் இந்தத் தாக்குதலை மெய்ச்சிக் கதைத்தார்கள். பெரிய தாக்குதல்கள் நடக்கும்போது அவை புலிகளுக்கு மிகப்பெரிய பெரும் வெற்றியாக அமையும்போது சிறையிலுள்ள தமிழ்க் கைதிகள் பயப்படுவது இயல்பாகிவிட்டது. இந்தத் தாக்குதலின் பின்னனியில் சிறைக்குள்ளிருக்கும் தமக்கு என்ன நடக்குமோ என்ற பயம் சிறைக்குள் எல்லோர் மத்தியிலும் இருந்தது. ஆனால். பூசாவில் இந்தச் சூழல் வேறு விதமாக இருந்துள்ளது. பின்னர் நான் பூஸா சென்றபோது பூஸாவில் இருந்த நண்பர்கள் சொன்னார்கள் புலிகள் கட்டுநாயக்காவைத் தாக்கியழித்த நாளை மிகவும் சந்தோசத்துடனும் உற்சாகத்துடனும் களித்ததாக். தாங்கள் உள்ளே இருந்தாலும் பரவாயில்லை. இந்த வெற்றி தமிழருக்குக் கிடைத்த வெற்றி என்றனர். இந்தத் தாக்குதலின் விவரங்களை அவதானித்தபோது புலிகளின் இந்தத் தாக்குதல் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படாதவாறு இராணுவ வானூர்திகளை இலக்கு வைத்து நடத்தப்பட்டிருந்தது.

⊙⊙⊙⊙⊙


பொதுவாக வடக்குக் கிழக்கில் இராணுவம் மற்றும் புலிகள் மேற்கொள்கின்ற தாக்குதல்களில் இறந்த அல்லது காயமடைந்த இராணுவத்தினரை வானூர்தி மூலமாக இரத்மலானை வானூர்தி நிலையத்துக்குக் கொண்டு சென்று பின்னர் அங்கிருந்து காலி வீதி ஊடாக நோயாளர் காவுகை வண்டியில் கொழும்பிலுள்ள மருத்துவமனைக்கும் இராணுவ மருத்துவமனைக்கும் கொண்டு செல்வார்கள். அந்தச் சமயத்தில் கிரிக்கெட் போட்டி ஒன்று நடந்தால் கொழும்பு நகரின் தெருவோரக் காட்சி அறைகளில் இருக்கின்ற பெரிய தொலைக்காட்சிகளில் சிங்கள மக்கள் கிரிக்கெட் பாத்துக் கொண்டிருப்பார்களே தவிர நோயாளர் காவு வண்டியைத் திரும்பிப் பார்ப்பதில்லை. அந்த நோயாளர் காவு வண்டியில் இராணுவத்தினர் கொண்டு செல்லப்படுவது குறித்தும் அவர்களுக்குத் தெரிந்திராது. கட்டுநாயக்கா வானூர்தித் தளத்தின் மீது புலிகள் தொடுத்த தாக்குதலைத் தொடர்ந்து களுத்துறை பூஸாவில் இருந்து கைதிகள் ஒருவரையும் வெளியே எடுக்கவில்லை. நீதிமன்றத்துக்குக் கொண்டு போகும் வழியில் சிங்களக் கிராமங்களே இருக்கின்றன. யாராவது கூட்டமாகக் கைதிகள் பேருந்தை மறித்துக் கைதிகளைக் கொலைசெய்து விட்டால் அது சிறைச்சாலை நிர்வா கத்துக்குச் சிக்கலாகி விடும். கொழும்பில் வழக்கு உள்ள கைதிகளுக்கு இது வேறு தலையிடியாக இருந்தது.



(தொடரும்)

கந்தர்மடம் அ.அஜந்தன்

# அகமறிந்து கொண்டாடு



காலத்தின் எல்லைக்கோட்டை
காணும்வரை இந்த ஓட்டம்
கனவுகள் கலைந்து தினம்
மனங்களிலே அவற்றின் தேட்டம்


அத்தனையும் இருந்துமிந்த
மனங்களிலே ஏனோ வாட்டம்
முட்களால் நிறைந்துவிட்டது
நம் மனங்களின் பூந்தோட்டம்

இருப்பதில் பற்றின்றித் தினம்
பறப்பதிலேயே பெரும் நாட்டம்

பாதையில் நடக்கமறந்து
தினம் போதையில் உன் ஆட்டம்

அகத்தினை நாடாமல் தினம்
புறத்தினுள் அலையும் கூட்டம்
எமக்குள்ளே தேடாமல்
பிறர்மீதேன் வீண் நோட்டம்

மகிழ்வது எங்கென்று தினம்
உன் மனதில் திண்டாட்டம்
உனக்குள்ளே அதுவுண்டு
உணர்ந்திட்டால் என்றும் கொண்டாட்டம்.



தையிட்டி அ.இராசதுரை

மேடை -33



# அதியுயர் காண்டத்து மேடைகள்

"வட் ரூ டூ..." என்று பெரும் விரக்தியோடு தென்மராட்சிக் கேணல், போர்க்களத்திலே கூடச் சொல்ல முடியாத ஒரு சொல்லைச் சொன்னதும்,

"நல்லாய் விடியட்டுக்கும் அலியாவையும் கொஞ்சம் வெருட்டிப் பயப்பிடுத்திவிட்டுச் சிவிலியன்களை வாகனத்துக்குள் ஏத்துவம் சேர்..." என்றெல்லாம் தெற்கில் அவருடைய பமிலியில் உள்ள முக்கிய ஸ்தரைத்தான் ஆமையொன்று தூக்கியடித்துக் கொன்ற ரஜடியையும் சடினாய் மறந்தும்விட்ட கப்ரின் ஒருவர், அதுபற்றி அலட்டித் தள்ளியதும் தென்மராட்சிக் கேணல் பகிடிச் சிரிப்பைத் தொடக்க அந்த வாகனமும் கூடிச் சிரித்து விழுந்து, அந்த மட்டோடு கப்ரினின், கதையும் யானை உழக்கி மிதித்த கதையாய்... ரைமும் அதிகாலை 5 ஆகிக் கொண்டிருக்க, பெரும் வெடிச் சத்தமாய் ஆதிமூலக் கதவு, படாரென்று அடித்துச் சாத்தப்படும் அந்தத் திறில்லான சத்தம், அங்காச்சோ... இங்காச்சோ... என்ற நிலையில் கோவிலுக்குள் இருந்து கொண்டிருந்த சிவிலியன்களை மாத்திரமல்ல வாகனங்களுக்குள் முழிசித் தழிசிக் கொண்டிருந்த அத்தனை துருப்புகளையும் துரும்பாய் மேலும் களைக்க வைத்து.... நல்லாய் இருத்தி எழுப்பியும் விடுகிறது சத்தம்...!

ஆதி மூலத்துக்குள் மலைபோன்ற யானை ஒன்று படுக்கை போட்டும் கொண்டது... எனி எவர்தான் என்ன பாடு பட்டாலும் குருக்கள் இனிப் பயணத்தில் இருக்க மாட்டார்...! இதுதான் பிள்ளையாரின் கட்டளை என்ற விதமாய்...!

⊙ ⊙ ⊙ ⊙

மரத்தில் கிடந்து பழுத்ததொரு பலாப் பழமாய்த் தென்மராட்சியார் உளறித்தள்ள... குருக்களம்மா தலையிலடித்துக் குளறியழ... அர்ச்சுணா முதற்கொண்டு கலங்கிப் போய் நிற்க, றக்கடிக்குச் சடினாய் வரும்படி தென்மராட்சிக் கேணலிடமிருந்து சடின் மெசேஜ் வந்து விடுகிறது... நேரமும் சிக்ஸ்சாகி நிலம் வெளித்து விடுகிறது...!

> மரத்தில் கிடந்து பழுத்ததோர் பலாப் பழமாய்த் தென்மராட்சி யார் உளறித்தள்ள... குருக்க ளம்மா தலையிலடித்துக் குளறியழ... அர்ச்சுணா முதற்கொண்டு கலங்கிப் போய் நிற்க, றக்கடிக்குச் சடினாய் வரும்படி தென்மராட்சிக் கேணலிடமிருந்து சடின் மெசேஜ் வந்து விடுகிறது... நேரமும் சிக்ஸ்சாகி நிலம் வெளித்து விடுகிறது...

தென்மராட்சியார் தம்மிடமுள்ள சில முக்கியங்களோடு... ஒரு கொஞ்சத் தென்போடு வெளிக்கிட்டும், வரக் கோபுர வாசலில் யானை ஒன்று துதிக்கையை ஆட்டியபடியே... நிற்க, அந்த யானையானது கெலித்துப்போன மராட்சியாரை எதுவும் செய்யாமல், அப்பால் நல்ல பிள்ளையாக விலகிப் போய்விட்டதை, ஈசானத்தில்நின்றபடியே... நோட் பண்ணின ஆமிக்காரருக்கும் நெஞ்சுக்குள் கொஞ்சம் தண்ணி வந்தமாதிரி ஒரு தென்பு...!

⊙ ⊙ ⊙ ⊙

ரைம் 7.15

யானைக் காட்டிலிருக்கும் ரைகர்ஸோடு இது தொடர்பாய்த் தாம் ரோக் பண்ணின கதையையும் மராட்சியார் ஒளிப்பு மறைப்பின்றிச் சொன்னதும், சவுட் பண்ணிய கேணல், எந்த யானையையும் சுடப்படாது என்ற கடுமையான கண்டிஷனைப் போட்டுவிட்டதோடு தனது கதையை முடித்துவிட்டு ஒருக்காலும் நடக்காத ஒரு சிக்கு முக்கான விடயத்துக்காகப் பெருமூச்சொன்றையும் விட்டபடியே தனது அரைவழுக்கான தலையைப் போட்டுச் சொறிந்ததும் தென்மராட்சியார் கடிக்கின்ற தனது தலையைக் கூடச் சொறிய முடியாத வராய்... நின்று கொண்டிருக்க முகாமிலிருந்து காலை ஆகாரங்களும் ஓகோவென்று வந்திறங்கி விடுகின்றன.

(தொடரும்)





■ எஸ்.தர்சி

## கொல்கிறதே காதல்...!



அப்பப்பா.....
இந்தப் பகலை நகர்த்துவதற்கு
எத்துனை
பிரயத்தனப்படுகிறேன்...?

எனக்கிது உவப்பாயில்லை..
எங்கோ ஒரு பறவையின்
குரல் தன் கூடிழந்த
சோகத்தைக் கூறிக்கொண்டே
இருக்கிறது.....

எவ்விடமிருந்தோ
மெல்ல பயணப்பட்டு வந்த
வெண்மேகமொன்று
மொத்தமாய்ப் பொழிவதற்கு
என்நிலம் கேட்கிறது....
நானோ
நாடு தொலைத்த
அகதியைப் போல்
நீயிருக்கும் திசை
பார்த்தபடி நின்றிருக்கிறேன்...!

கூண்டிலிருந்து
விடுபட எத்தணிக்கும்
பறவையொன்றின்
சிறகடிப்பை ஒத்த என்
இதயத்துடிப்பை
எப்போது நீ அறியப்போகிறாய்?

குரலுண்டு
வாழும் சிறுபறவை நான்!
ஒருமுறை
உனைக் காண
பிரயாசைப்படுவதை
உணரப் போவதெப்போது?

உன் பார்வையை
எதிர்கொள்ளும் தெம்பற்று
கால்நோக்கும் பார்வைக்குள்
சிறைப்பட்டிருக்கிறது
அத்தனை காதலும்...!

அலைபேசியில் பரிமாறப்படுகிற
முத்தங்கள் ஒருபோதும்
உயிர்ப்பிப்பதேயில்லை!
ஈரம் உலர்ந்தே எனை
வந்தடைவதால்....

இதோ இந்தப் பகலின்
சூடு மெல்ல
எனைப் படர்கிறது.
வெயிலின் கதகதப்பு
முன்னொரு நாளில்
எனைப் பற்றியிருந்த
உன் கரங்களை
நினைவுப்படுத்திக்
கொல்கிறது....!

பத்திரமாயிரு...
என்னைக் கடந்து
எதுவும் உன்னை
காதல் செய்திட முடியாது .....!

## ஒன்றிக்கவில்லை




**கதை**

இந்தியாவின் கேரளா மாநிலக் காட்டுப் பகுதியில் இருந்து 'தும்பா' என்ற தாய்ப் புலி தனது குட்டியுடன் வழி தவறி அங்குள்ள ஆனை மலைப் புலிகள் காப்பகத்தின் முன்னணிப் பகுதிக்குள் நுழைகிறது. அதைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காகக் கேரளாவினதும், கேரளாவின் அயல் மாநிலமான தமிழகத்தினதும் வனத் துறையினர் முகாமிடுகின்றனர். கதாநாயகன் தர்ஷன், அவரது நண்பன் தீனா ஆகிய இருவரும் வனத்துறையின் தீந்தைப் பூச்சு வேலைக்காக குறித்த பகுதிக்குச் செல்கின்றனர். புலியைப் படம்பிடிக்கும் ஆர்வத்தில், பெற்றோரின் எதிர்ப்பையும் மீறிக் கமராவும் கையுமாக அந்த இடத்துக்குச் செல்கிறார் ஒளிப்படக் கலைஞரான கதாநாயகி கீர்த்தி பாண்டியன். அங்கு தர்ஷன், தீனாவுடன் அவருக்கு நட்பு மலர்கிறது. இதற்கிடையில், வழிதவறிய புலியைத் தேடிப் பிடித்து ஆதாயம் அடைய நினைக்கும் ஒரு வனத்துறை அதிகாரியால் இவர்கள் 3 பேருக்கும் பிரச்சினைகள் எழுகின்றன.

இவர்களுக்கு அந்த வனத்துறை அதிகாரி ஏன் இடைஞ்சல் அளிக்கிறார்? மனிதர்களை வனவிலங்குகள் எப்படி எதிர்கொள்கின்றன? புலியைக் கீர்த்தி படம்பிடித்தாரா? வனத்துறையினரிடம் புலி சிக்கியதா? இத்தகைய கேள்விகளுக்குப் பதிலாக அமைகிறது மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

வெகுளியான பாத்திரமான தர்ஷனின் பயம், நண்பன் தீனாவின் குறும்புத்தனம் ஆகியவை சில இடங்களில் இரசிக்க வைக்கின்றன. நகைச்சுவை என்ற பெயரில் தீனா தொடர்ச்சியாக வெளிப்படுத்தும் வனக் காட்சிகள் ஒரு கட்டத்துக்கு மேல் நீள்வது சலிப்பு. விலங்குகளை வேட்டையாடத் திட்டமிடும் அதிகாரியைத் தண்டிக்க, அந்தப் பகுதி மக்களின் உதவியோடு கீர்த்தி பாண்டியன் குழு முன்னெடுக்கும் நிகழ்வுகள் சிறப்பு. ஜெயம் ரவி சிறப்புத் தோற்றத்தில் பாத்திரமேற்றுப் புலிகள் பாதுகாக்கப்படுவதன் அவசியத்தை எடுத்துச் சொல்வதும், காட்டில் வாழும் ஆதிக் குடிகள், கானுயிர்கள் இடையே காணப்படும் பிரிக்கமுடியாத பந்தத்தை எடுத்துச் சொல்வதும் மனதில் பதிகின்றன. கீர்த்தி பாண்டியன் பூனையை அணுகி ஒளிப் படம் எடுப்பதுபோல புலியை நெருங்குவது நம்பும்படி இல்லை.

**பலம் - பலவீனம்**

வன விலங்குகள், அதிலும் குறிப்பாக அழிந்துவரும் விலங்கான புலியைப் பாதுகாப்பது அனைவருடைய முக்கிய கடமை என்ற கருத்தைச் சுமந்துள்ள திரைப்படம். அந்த நோக்கத்தைத் திரைக்கதை வழியே சரியாக முன்வைத்துக் கொண்டுபோக முயற்சித்திருக்கிறார் இயக்குநர் ஹரீஷ் ராம். வன வளத்தைப் பாதுகாப்பதில் அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கும் அக்கறை சில அதிகாரிகளுக்கு இல்லை என்பதையும் படம் சுட்டிக் காட்டுகிறது. டாப்சிலிப் மலைப்பகுதி யின் அழகு, அங்கு வசிக்கும் மக்களின் நம்பிக்கை, வன அதிகாரியின் அதிகாரம் என யதார்த்த வாழ்வியலுடன் கதை நகர்கிறது. புலியை வேட்டையாடத் துடிப்பது, அதன் அழிவுக்கு யார் காரணம் என ஒரே நேர் கோட்டில் பயணிக்காமல் காட்டெருமை, குரங்கு, அணில் உள் ளிட்ட விலங்குகளையும் சூழ்ந்து படம் நகர்வதால் குழந்தைகளை வெகுவாக ஈர்க்கிறது. கிராபிக்ஸ் தொழில் நுட்பம்தான் இதுபோன்ற படங்களில் முக்கியம். இந்த விடயத்தில் பெரிதாகச் சறுக்கி யிருக்கிறது 'தும்பா'. படத்தில் புலி உள்ளிட்ட அனைத்து விலங்குகளின் காட்சிகளும் பொம்மைப் படத்தின் அளவுக்கே இருக்கின்றன. இதனால், விலங்குகள், மனிதக் கதாபாத்திரங்களுடன் ஒன்றிக்கவில்லை. அதனால் பார்வையாளர்கள் மனதில் பதிய மறுக்கிறது படம்.





**இசை, ஒளிப்பதிவு,**

காட்டைக் கதைக்களமாகக் கொண்ட படத்துக்குப் பிரம்மாண்டமான ஒளிப்பதிவை வழங்கியிருக்கிறார் நரேன் இளன். கதையின் போக்குக்கு ஏற்ற இசையை அனிருத், விவேக் மெர்வின், சந்தோஷ் தயாநிதி கூட்டணி வழங்கியுள்ளது.

கிராபிக்ஸ் புலியின் வடிவமைப்பில் இன்னும் நுணுக்கம், வனத்தில் சிக்கித் தவிக்கும் தர்ஷன் தீனாவின் காட்சிகளில் சுவாரஸ்யம், புலியைப் பிடிக்க வன அதிகாரி செயற்படுத்தும் திட்டங்களில் புதுமை எனச் சிலவற்றை மெருகூட்டியிருந்தால் 'தும்பா' ஈர்த்திருக்கும்.

# மீண்டும் திரைக்கு வரும் 'அவெஞ்சர்ஸ் எண்ட் கேம்'

மார்வெல் கலையகத்தின் நெடுந்தொடரின் முடிவு என்று வர்ணிக்கப்படும் 'அவெஞ்சர்ஸ் எண்ட் கேம்' படம் ஜுன் மாதம் 28 ஆம் திகதி அன்று திரையரங்குகளில் மீண்டும் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி வெளியான 'அவெஞ்சர்ஸ் எண்ட் கேம்' படம், பன்னாட்டு அளவில் பிரம்மாண்ட வெற்றி பெற்று வசூலிலும் சாதனை படைத்தது. வெகுவேகமாக 2 பில்லியல் டொலர் என்ற வசூலைத் தொட்டது. திரைப்பட வரலாற்றில் இதுவரை அதிக வசூரைப் பெற்ற திரைப்படம் ஜேம்ஸ் கமரூன் இயக்கிய 'அவதார்'.

அவதாரின் சாதனையை இந்த 'அவெஞ்சர்ஸ் எண்ட் கேம்' முறியடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 'அவதார்' 2.788 பில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலித்துள்ளது. 'அவெஞ்சர்ஸ் எண்ட் கேம்;' 2.743 பில்லியன் டொலர்கள் வரை வசூலித்தது.

'அவதார்' வசூல் சாதனையை முறியடிக்க இன்னும் 45 மில்லியன் டொலர்கள் தேவை என்ற நிலையில் படத்தை மீண்டும் பரவலாக வெளியிடுவதற்குத் திட்டமிட்டுள்ளது. இந்த மறுவெளியீட்டில் கூடுதலாக இன்னும் சில காட்சிகளைச் சேர்த்து வெளியிட முடிவெடுத்துள்ளது. மார்வெல் ஸ்டூடியோஸ் நிறுவனத் தலைவர் கெவின் வ்பீஜ் கூறுகையில்,

"இந்தப் புதிய படம் கூடுதலான ஓடும் நேரத்தோடு இருக்காது. ஆனால், படத்தின் முடிவில் கூடுதலாக சில விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. காத்திருந்து, கடைசி வரை பார்த்தால் இதற்கு முன் நீக்கப்பட்டிருந்த ஒரு காட்சி, ஒரு சின்ன அஞ்சலி, இன்னும் சில ஆச்சரியங்கள் உங்களுக்காக இருக்கும்" என்று தெரிவித்தார்.






பண்ணையாரும் பத்மினியும்', 'சேதுபதி' படங்களை இயக்கிய அருண் குமாரின் மூன்றாவது படம் சிந்துபாத்.

**கதை**

இந்தியாவின் தமிழகத்தில் தென் பகுதியில் உள்ள ஒரு நகரத்தில் வசிக்கிறார் விஜய் சேதுபதி. இவருடன் இருக்கும் சூர்யாவும் இவரும் திருடுவதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். நூதனத் திருடர்களாகப் பல இடங்களில் கைவரிசை காட்டும் இவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் காண விரும்புகிறார் ஜோர்ஜ். அதற்காக விஜய் சேதுபதி வசிக்கும் வீட்டை விற்கச் சொல்கிறார். இதனிடையே மலேசியாவில் இருந்து விடுமுறையில் வந்திருக்கும் அஞ்சலியைப் பார்த்ததும் விஜய் சேதுபதிக்குப் பிடித்து விடுகிறது. சில பல வழக்கமான சம்பவங்களுக்குப் பிறகு இருவரும் காதலிக்கிறார்கள். காதல் அஞ்சலியின் வீட்டுக்குத் தெரியவந்ததும் பிரச்சினை ஏற்படுகிறது. அது முடிந்து அஞ்சலியை மலேசியாவுக்கு வழியனுப்பும் சில நொடிகளில் மனைவியாக்கிக் கொள்கிறார் விஜய்சேதுபதி. இரண்டு நாள்களில் திரும்பி வந்துவிடுவேன் என்று சொல்லிச் செல்கிறார் அஞ்சலி. பின்னர் அஞ்சலி ஏற்படுத்தும் தொலைபேசி அழைப்பு விஜய் சேதுபதிக்குப் பதற்றத்தையும் பயத்தையும் ஏற்படுத்துகிறது. அஞ்சலிக்கு என்ன நேர்ந்தது. விஜய் சேதுபதி அடுத்தடுத்த நடவடிக்கைகள் என்ன? போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது மீதிக்கதை.



**பாத்திரங்கள்**


திரு என்கிற கதாபாத்திரத்தில் சரியாகப் பொருந்துகிறார் விஜய் சேதுபதி. காது கேட்காது, ஆனால், தேவையானது மட்டும் கேட்கும் என்கிற அவரின் பாத்திரம் சுவாரஸ்யம் சேர்க்கிறது. தம்பி சூர்யாவைத் தேடிப் பதறுவது, திருடும் முறைகளில் நூதன உத்தியைக் கையாள்வது, காதல் பார்வை என்கிற பெயரில் நகைச்சுவை செய்வது. காதலில் கிறங்குவது என வழக்கம் போல் தனது திறமையை வெளிப்படுத்துகிறார். விஜய் சேதுபதியின் காதுக்கு ஈடு கொடுத்துச் சத்தம் போட்டுப் பேசும் பாத்திரத்தில் நாயகி அஞ்சலி அழகாக நடித்திருக்கிறார். கொத்தடிமையின் வலியையும், குடும்பத்தின் பாரத்தையும், கணவன் மீதான காதலையும் வெளிப்படுத்தும் போது நடிப்பில் நிறைகிறார். இளம்பெண்ணின் தகப்பனாக விவேக் பிரசன்னா வித்தியாசமான நடிப்பை வழங்கியுள்ளார். விஜய் சேதுபதியின் மகன் சூர்யா, படம் முழுக்க வருகிறார். ஜோர்ஜ், அருள்தாஸ் ஆகியோர் கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தின் நோக்கத்தை நிறைவேற்றுகின்றனர். எதிர்மறைக் கதாபாத்திரத்தில் லிங்கா நடிப்பில் நியாயம் செய்யவில்லை.

**ஒளிப்பதிவு, இசை, காட்சித் தொகுப்பு**

விஜய் கார்த்திக் கண்ணனின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலம் சேர்க்கிறது. யுவன் ஷங்கர் ராஜாவின் இசையில் றொக் ஸ்ரார் பாடல் தரம். ஆனால், அடுத்தடுத்து வரும் பாடல்கள் வேகத்தடைகளே. பின்னணி இசையில் கதைக்களத்துக்கான கனத்தைக் கூட்டியிருக்கிறார் யுவன். ரூபன் சில பாடல்கள், காட்சிகளை நீக்கியிருக்கலாம்.

**பலம் – பலவீனம்**

விஜய் சேதுபதியின் வாழ்க்கை, அஞ்சலியின் குடும்பச் சூழல், விஜய் சேதுபதி சூர்யாவுக்கு இடையே உள்ள அன்பு ஆகியவற்றை இயக்கு நர் அருண் குமார் காட்சியப்படுத்திய விதம் கவனிக்க வைக்கிறது. வதைமுகாம் போல, சிறைச்சாலையைப் போல காட்சியளிக்கும் தாய்லாந்து கூடாரத்தில் ஏராளமான இளம்பெண்கள் சிறை பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதைத் தாமதமாகவே இயக்குநர் பதிவு செய்கிறார். ஒன்றமுடியாமல் போகிறது. அஞ்சலிக்கு நேரும் ஆபத்துகளைச் சொன்ன விதமும் எடுபடவில்லை. விஜய் சேதுபதி சூர்யாவுக்கான அன்பின் பிணைப்பு குறித்தும் இயக்குநர் பதில் சொல்ல வில்லை. காதலையும், குடும்ப உணர்வையும் தனக்கே உரிய பாணியில் பதிவு செய்யும் அருண் குமார் இதில் இரண்டையும் தயக்கத்துடனேயே அணுகியுள்ளார். கதைக்களத்துக்கான கனம் இருந்தும் திரைக்கதையில் போதுமான அழுத்தத்தை வழங்கத் தவறியுள்ளார்.






2013ஆம் வெளியாகிப் பெரும் வரவேற்பைப் பெற்ற 'தி கென்ஞ்யூறிங்' திகில் பட வரிசையில் இது 7ஆவது படம். 'அன்னபெல்' பொம்மையை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள மூன்றாவது படம்.

**கதை**

'அன்னபெல்' முதல் பாகம் முடிந்து 3 வருடங்களுக்குப் பிறகு ஆரம்பிக்கிறது 'அன்னபெல் கம்ஸ் ஹோம்' படத்தின் கதை. 1970ஆம் ஆண்டில் பேய்களை விரட்டும் நிபுணர்களான இடி - லொறய்ன் தம்பதியினர் அமானுஷ்யங்கள் நிறைந்த 'அன்னபெல்' பொம்மையை வீட்டுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அவர்களின் வீட்டில் இருக்கும் அமானுஷ்யப் பொருள்களைச் சேகரித்து வைக்கும் அங்குள்ள ஒரு சிறிய அருங்காட்சியகத்தில் இருக்கும் ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் அந்தப் பொம்மையை வைக்கிறார்கள். ஒரு வருடத்துக்குப் பிறகு தங்கள் மகள் ஜூடியைக் கவனித்துக் கொள்வதற்காக மேரி ஆலன் என்ற இளம்பெண்ணை நியமித்து விட்டு வெளியே செல்கிறார்கள். பாடசாலைக்குச் செல்லும் ஜூடி அங்கே அடிக்கடி ஒரு விநோதமான மனிதர் தன்னைப் பின் தொடர்ந்து வருவதை அவதானிக்கிறாள். பின்னர் மேரி ஆலனின் தோழியான டானிலா என்பவள் இறந்து போன தனது தந்தையைத் தொடர்பு கொள்ள வேண்டி ஜூடியின் வீட்டுக்கு வருகிறாள். ஜூடிக்குப் பிறந்தநாள் பரிசளிக்கிறார். அவள் விளையாடச் சென்றதும் அமானுஷ்யப் பொருள்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அந்த அருங்காட்சியகத்தில் நுழைகிறாள். அங்கே இருக்கும் அனைத்துப் பொருட்களையும் தொட்டுப் பார்க்கும் அவள் ஒரு கட்டத்தில் 'அன்னபெல்' பொம்மை இருக்கும் கண்ணாடிப் பெட்டியைத் திறந்துவிடுகிறாள். அதன் பின்னர் பல் வேறு அமானுஷ்ய சம்பவங்கள் நடக்கின்றன. இதிலிருந்து மூவரும் தப்பித்தார்களா? 'அன்னபெல்' பொம்மைக்கு என்னவானது? என்பதே 'அன்னபெல் கம்ஸ் ஹோம்' படத்தின் மீதிக்கதை.

**வித்தியாசமான அணுகுமுறை**

அமானுஷ்யங்கள் நிறைந்த ஒரு வீடு. உள்ளே நண்பர்கள் மாட்டிக்கொள்வது என்ற வழக்கமான ஹொலிவூட் பேய்ப் படம்தான். இருந்தாலும் இதற்கு முன்பு வந்த படங்களின் காட்சிச் சாயல்களை இந்தப் படத்தில் வெகுவாகக் குறைத்திருக்கின்றனர். உதாரணமாக முகத்தில் கொடூர வர்ணப்பூச்சுடன் கமராவுக்கு முன்னால் திடீரென வந்து பீதியைக் கிளப்புவது, ஏதேனும் ஒரு கதாபாத்திரம் இருட்டில் நின்று கொண்டிருக்கும்போது அதற்குப் பின்னால் ஒரு பேய் திடீரென்று தோன்றிப் பயமுறுத்துவது போன்ற காட்சிகள் இதில் குறைவு. கதை முழுவதும் விறுவிறுப்புப் படத்தைப் போல அமைக்கப்பட்டிருப்பது சிறப்பு. ஆனாலும், முதல் ஒரு மணி நேரம் எந்தத் திருப்பமும் இல்லாமல் செல்வது படத்தின் மிகப்பெரிய குறை. பல இடங்களில் கொட்டாவி வருகிறது. இரண்டாம் பாதியின் நிமிர்ந்து உட்கார வைக்கும் சில காட்சிகள்தான் படத்தைத் தூக்கி நிறுத்துகின்றன. திரைக்கதையில் கவனம் செலுத்தி, முதல் பாதியை இன்னும் சுவாரஸ்யப்படுத்தியிருந்தால் இது அதிகம் பேசப்பட்டிருக்கும்.



# ஆசிய கிறிஸ்தவத்தினதும் ஈழப் போராட்டத்தினதும் குரல்!

## வானலையில் தமிழ் ஒலி
## வெரித்தாஸ் வானொலி

தேவநாயகம் தேவானந்த்




Veritas846
RADYO TOTOO

ஆசியமக்களுக்கு அவர்களுடைய மொழியில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்திகளை அறிவிப்பது. மனித வளர்ச்சிக்குத் தேவையான பயன்மிக்க கருத்துகளை அளிப்பது போன்றவை வெரித்தாஸ்வானொலியின்முக்கிய நோக்கங்களாகும்.
வெரித்தாஸ் வானொலியின் நிகழ்ச்சிகள்சிற்றலைவரிசையில்ஒலிபரப்பாவதுவழமை. சிற்றலை16,19.25, 31மீற்றர்களில் இதன் ஒலிபரப்பைக் கேட்கமுடியும். ஒரு நாளில் இரண்டு தடவைகள் ஒரே நிகழ்ச்சிகள் இதில் ஒலிபரப்பாகும். இரவு7.30மணிக்கு ஆரம்பமாகும்தமிழ்ஒலிபரப்புஇரவு 7.55மணிவரைநீடிக்கும். 25நிமிட நிகழ்ச்சி நடக்கும்.

**விக்கி விக்கி ஒலிபரப்பாகும் இரவு நிகழ்ச்சி**

இரவு ஒலிபரப்பாகும் நிகழ்ச்சி மறுநாள் காலை 6 மணிக்கு மீள் ஒலிபரப்பாகும். காலையில் அனேகமாக வெரித்தாஸைக் கேட்கமுடிவதில்லை என்ற மனக்குறையுண்டு. காரணம் சூரியன் உதயமாகி வெயில் வரும்போது சிற்றலை நிகழ்ச்சிகள் விக்கி விக்கிக் கேட்கமுடியாது ஒலிப்பதா கும். வெரித்தாஸ் வானொலியின் நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டின் சாந்தோம் கலைக்கூடத்துடன்இணைந்தேநடைபெறுகின்றன. இதை அடிக்கடி வெரித்தாஸ் வானொலியில் கேட்டிருக்கிறோம். அப்போதெல்லாம் அந்தச் சாந்தோம் கலைக்கூடத்தைப்பார்க்கவேண்டும்என்றுஎண்ணியதுண்டு.

> வெரித்தாஸ் வானொலி கிறிஸ்துவின் வார்த்தையை அறிவிப்பதும், சத்தியத்தைப் பரப்பவதுமான தனது பணியைச் செவ்வனே செய்து வந்தது. இதற்காக இது போப்பாண்டவர்கள் பலருடைய பாராட்டுகளையும் பெற்றது. விவிலியக் கருத்தோவியம் இதற்கொரு சிறந்த எடுத்துக் காட்டு எனலாம்.

**பேராசிரியர் கா. சிவத்தம்பியின் ஒலிச்சித்திரம்**

2010 ஆண்டு சென்னையில் தங்கியிருக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அப்போது இலங்கையைச் சேர்ந்த உலகறிந்த தமிழ்ப் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் இறப்புச் செய்தி கிடைத்தது. அப்போது சென்னையில்அமைந்துள்ளசாந்தோம் கலைக்கூடத்திலிருந்து ஓர் அழைப்புவந்தது.
பேராசிரியர் கா. சிவத்தம்பி யைப்பற்றிய ஒலிச்சித்திரம் ஒன்றை வெரித்தாஸ் வானொலிக்காகத்தயாரிக்கிறோம்ஈழத்தவர் என்ற வகையிலும் பேராசிரியர் கா.சிவத்தம்பியை அறிந்தவர் என்ற வகையிலும்அவரைப்பற்றித்தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.
ஒலிப்பதிவை மேற்கொள்வதற்காகச் சாந்தோம் கலைக் கூடத்துக்கு நான் சென்றிருந்தேன்.
அப்போது வெரித்தாஸ் வானொலியூடாக வானலையில் கேட்டுவந்த சாந்தோம் கலைக்கூடத்தைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மகிழ்ச்சியாக இருந்தது.



**நினைவில் நிற்கின்ற நிகழ்ச்சிகள்**

வெரித்தாஸ் வானொலியின் பல நிகழ்ச்சிகளைஇன்றும்பலர்நினைவு கூருகிறார்கள். விவிலியக்கருத்தோவியம். செய்திகள், செய்தியும்பின்னணியும், உறவுப்பாலம், நேயர் கடிதங்கள் என்பன இப்போதும் பலரது நினைவில் நிற்கின்ற நிகழ்ச்சிகளே. வெரித்தாஸில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியாகக் கிறிஸ்தவ நிகழ்சிகளும் கிறிஸ்தவ செய்தியும் மட்டும் ஒலிபரப்பாகும். வாராந்தம்வியாழக்கிழமைகளில்20நிமிடநிகழ்ச்சியாக வெரித்தாஸ் வானொலி வழங்கி வந்த விவிலியக் கருத்தோவியம் என்ற நிகழ்ச்சி கிறிஸ்தவர்க ளின் புனிதநூலானபைபிளைமிகச்சிறப்பாக அடிமட்ட மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்கு உதவியது எனலாம். பைபிளில் காணப்பட்ட சிறியவிடயமொன்றைஎடுத்துநாடக வடிவ நிகழ்ச்சியாக ஆக்கி மிக அற்புதமாகக் கேட்போரின் மனதில் நிலைக்கக்கூடியதாக அமைத்து வழங்கியது வெரித்தாஸ். அது இன்றும் நினைவில்உள்ளது'என்கிறார்முன்னாள் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர் என். புலேந்திரன்.

**கிறிஸ்தவத்தின் குரலாக...**

வெரித்தாஸ் வானொலி கிறிஸ்துவின் வார்த்தையை அறிவிப்பதும், சத்தியத்தைப் பரப்பவதுமான தனது பணியைச் செவ்வனே செய்து வந்தது. இதற்காக இது போப்பாண்டவர்கள் பலருடையபராட்டுகளையும்பெற்றது. விவிலியக் கருத்தோவியம் இதற்கொரு சிறந்த எடுத்துக் காட்டு எனலாம்.
புனிதத்திருத்தந்தை ஆறாம்பவுல் 1970ஆம்ஆண்டு, பிலிப்பைன்ஸ் நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது நவம்பர் 29ஆம் திகதியன்று அவர் வெரித்தாஸ் வானொலி நிலை யத்துக்குச் சென்றிருந்தார். அங்கு வழங்கிய செவ்வியில், 'இந்த வானொலி, கிறிஸ்துவின் படிப்பினைகளை மக்கள் மனங்களில் எதிரொலிக்கச் செய்கிறது' என்றுபுகழ்ந்துரைத்தார்.
இதேபோன்று 1981ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ்'க்குச்சென்றிருந்தபுனிதத்திருத்தந்தை இரண்டாம் ஜோன்போல். வெரித்தாஸ் வானொலிநிலையத்துக்குச் சென்று 'ஆசிய கிறிஸ்தவத்தின் குரலொலியாக இந்த வானொலி விளங்குகிறது' என்று வெரித்தாஸ் வானொலியைப் பாராட்டினார். ஆனால் ஈழத்தவர்களைப் பொறுத்தளவில்வெரித்தாஸ்வானொலிஈழத்தவர்களின் உரிமைப் போராட்டத்துக்காக ஒலித்த குரலாகவே பார்க்கப்படுகிறது.

(தொடரும்)

---

## துயர் துடைக்க வா!

சி.சிவரம்யா

தோளோடு தோள் நின்று
தோற்கும் பொழுது எல்லாம்
தோல்வியைத் தாங்கிக் கொள்ள
தோழனாய் நீ வரவேண்டும்

இயலாமையை அறவே விலக்கி
இவ்வுலகில் பயணம் தொடர
இன்சொல் தனைக் கூறி
இனிய உறவாய் நீ வரவேண்டும்

மனவலி நீக்கி
மடமைகள் தனை விலக்கி
மறுப்பின்றி அன்புக்கரம் நீட்டி
மறக்காமல் உதவித நீ வரவேண்டும்




## வாழ்க்கை

புள்ளி மேல் புள்ளி இட்டு
வரைந்த கோலமாய்
புதிய நம்பிக்கையுடன்
வாழ்வு மலர்கிறது

கண்ணிலே ஆயிரம்
கனவுகள் தோன்ற
கண்ட காட்சிகள் எல்லாம்
கவிதை பாட

சிந்தனை செழிப்புற்று
உளம் மகிழ
சிறப்பாக அமைகிறது

மனித வாழ்க்கை
எண்ணியவை அனைத்தும்
வெற்றி பெற
எண்ணங்கள் எல்லாம்
நன்மை தர
இன்புற்று நலமாய்
வாழ்வோமாக!



# இந்த வாரம்

## 30.06.2019 முதல் 06.07.2019 வரை

*உங்களுக்கு எப்படி?*



## மேடம்

வீடு. வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறை பின்பற்றவும். புத்திரரின் அறிவுத்திறன் வளர உங்களின் கடந்த கால அனுபவங்களை சொல்வீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் அதிகரிக்கும். சுற்றுலா பயணத்திட்டம் உருவாகும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். பெண்கள் கணவரின் அன்பால் சந்தோஷவாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து பரிசு, பாராட்டு பெறுவர். மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சி பெறுவர்.. மாணவர்கள் சிறப்பாக படிப்பர்.

## இடபம்

குரு. சுக்கிரன்,செவ்வாய், சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். முன்னேற்றம் பெற உதவிய நண்பர்களுக்கு நன்றி சொல்வீர்கள். வாகனப்பயணம் நன்மை தரும். புத்திரர் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். பூர்வ சொத்தில் ஆதாயம் கிடைக்கும். பணம் கடன் வாங்குவதில் நிதானம் பின்பற்றவும். மனைவி குடும்ப நலனுக்கான பணிகளை மேற்கொள்வார். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். பணியாளர் பணியிடத்தில் விவாதம் பேச வேண்டாம். பெண்கள் உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

## மிதுனம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். ஆன்மிக கருத்துக்களை ஆர்வமுடன்சொல்வீர்கள்.சமூகநிகழ்வுகளால்புதிய படிப்பினை பெறுவீர்கள். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி நிலவும். புத்திரர் உங்களிடம் நண்பர்க்கு இணையாக பழகுவர். முக்கிய பணி நிறைவேற இஷ்டதெய்வஅருள் துணை நிற்கும்.எதிர்ப்பாளரும் மறைமுகமாக உங்களிடம் உதவி பெற விரும்புவர். மனைவியின் நற்செயல் பெருமை சேர்க்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.பணியாளர்கள்நிர்வாகத்தின்சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். மாண வர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர். .

## கடகம்

பெரும்பான்மை கிரகங்கள் அளப்பரிய நற்பலன் தருவர். பழகுபவர்களின் மனமறிந்து பேசுவீர்கள். செயல்கள் திட்டமிட்டபடிநிறைவேறும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரரின் சொல்லும், செயலும் வளர்ச்சி பெற உதவுவீர்கள் நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் வசூலாகும். ஆரோக்கியம் சீராக இருக்கும்.மனைவி வழி சார்ந்த உறவினர் பாசமுடன் பழகுவர்.தொழில்,வியாபாரத்தில்அதிகமூலதனத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர்.பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவர்.மாணவர்கள்படிப்பில்தரத்தேர்ச்சி பெறுவர்.

## சிங்கம்

சூரியன், புதன், ராகு, சந்திரன் ராஜ யோகபலன் தருவர். எண்ணங்களில் புதுமை நிறைந்திருக்கும். நண்பர்கள் உங்கள் சொல்லுக்கு வரவேற்பு தருவர். உடன்பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பிள்ளைகள் அறிவாற்றல், செயல் திறனில் முன்னேற்றம் காண்பர். மனைவியின் மனதில் உங்கள் மீதான நம்பிக்கை வளரும். தொழிலில் வளர்ச்சி பெற நவீன மாற்றம் மேற்கொள்வீர்கள். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். பெண்கள் இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.

## கன்னி

சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன் சந்திரனால் சுபபலன் கிடைக்கும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர் அன்பு பாராட்டுவர்.நேரத்திற்கு உணவு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை பெருகும்.அரசு வகையில் உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாண வர்களுக்கு படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

## துலாம்

குரு, சுக்கிரன், கேது, சனீஸ்வரர் ஆதாயபலன் தருவர். நற்பண்பு உள்ளவர்களின் உதவி கிடைக்கும். உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள்.வீடு, வாகனத்தில் பயன்பாடு திருப்திகரமாகும். பிள்ளைகளின் செயல்கள் சிறப்பாக அமைந்து பெற்றோர்க்கு பெருமை ஏற்படுத்தும். வழக்கு, விவகாரங்களில் இருந்த கடின போக்கு மாறி அனுகூல மாற்றம் வரும்.மனைவி உங்களின் நல்ல குணங்களைப் பாராட்டுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

## விருச்சிகம்

புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். மனதில் தைரியமும், செயலில் உற்சாகமும் அதிகரிக்கும். பணிகளை திட்டமிட்டபடி செயல்படுத்துவீர்கள். தாய்வழி உறவினர்களிடம்; குடும்ப விவகாரம் பேச வேண்டாம். புத்திரரின் எண்ணம் அறிந்து இதமாக நல்வழி நடத்தவும். ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் நல்ல கருத்து குடும்பத்தில் ஒற்றுமை வளர்க்கும். வெளியூர் பயணம் புதிய அனுபவம் தரும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பினால் பணவரவு சீராகும். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். பெண்களுக்கு தாய்வீட்டாரின் உதவி கிடைக்கும்.

## தனுசு

சந்திரனால் நற்பலன் கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை கவனமுடன் நிறைவேற்றுவது அவசியம். தாய்வழி உறவினர் சொந்தம் பாராட்டுவர்.வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். புத்திரர் நல்ல நண்பர்களின் உதவியால் படிப்பு செயல்திறனில் முன்னேறுவர். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் தரக் கூடாது. கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். பணியாளர் நிர்ணயித்த கால அவகாசத்தில் இலக்கை நிறைவேற்றுவர்.பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் படிப்பர்.

## மகரம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். வளர்ச்சிப்பாதைக்கான வழி பிறக்கும். இனிய அணுகுமுறையால் பணி எளிதாக நிறைவேறும். வாகனப் பயன்பாடு அளவுடன் இருக்கும். புத்திரர் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வர். மருத்துவ சிகிச்சையால் நோய் தொந்தரவு குறையும். உங்கள் சொல்லும், செயலும் மனைவியின் மனதில் நம்பிக்கையை வளர்க்கும். அரசாங்க உதவி பெற அனுகூலம் உண்டு. புதியவர்களின் ஆதரவில் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.

## கும்பம்

செவ்வாய், சுக்கிரன். கேது. சனீஸ்வரர் அளப்பரிய நன்மைகளை வழங்குவர். பணிகளை நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் அதிக அன்பை வெளிப்படுத்துவர். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். குலதெய்வ அருளால் கஷ்டம் அணுகாத சுமுக வாழ்வு பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். மனைவி உங்களிடம் கருத்திணக்கம் கொள்வார். தொழிலில் போட்டி குறைந்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, சன்மானம் பெறுவர். பெண்கள் தாய் வீட்டாருக்க உதவுவர். மாணவர்கள் ஒருமுகத்தன்மையுடன் படிப்பர்.

## மீனம்

செவ்வாய், சுக்கிரன், கேது. சனீஸ்வரர் அளப்பரிய நன்மைகளை வழங்குவர். பணிகளை நேர்த்தியாக நிறை வேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் அதிக அன்பை வெளிப்படுத்துவர். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். குலதெய்வ அருளால் கஷ்டம் அணுகாத சுமுக வாழ்வு பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். மனைவி உங்களிடம் கருத்திணக்கம் கொள்வார். தொழிலில் போட்டி குறைந்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு. சன்மானம் பெறுவர். பெண்கள் தாய் வீட்டாருக்க உதவுவர். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

CMYK

■ ஏ.ஜே.ஞானேந்திரன்

வேலை செய்யும் இடங்களிலுள்ளசுவிஸ்நண்பர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்வது அங்கு வழமையான ஒன்று. நாம் தயாரிக்கின்ற உறைப்பு உணவகளைச் சாப்பிடுவதற்கு அவர்களின் நாக்குகளும் பழகி விட்டன. காரசாரமானஉணவுகளைச்சுவிஸ் நண்பர்களும், நண்பிகளும் நன்கு விரும்பி ஒரு கைபார்க்கிறார்கள்.
கல்யாண வீடுகளுக்குச் சேலையைவிரும்பிஉடுத்திச் செல்லும் சுவிஸ் இளம் பெண்களைநான்கண்டுள்ளேன். சுவிஸ் இளவட்டங்கள்பலர்தமிழ்கலாச்சாரத்தை விரும்பி ஏற்றுள்ளதை என்னால்அவதானிக்கமுடிந்தது.
அதேபோல எமது இளவட்டங்களும், சுவிஸ் மொழியைச் சரளமாக உரையாடி, சுவிஸ் நாட்டுக் கலாச்சாரத்தை ஆர்வமாகப் பின்பற்றுகி றார்கள்.



# 23 சுவிஸ் அழகிய நாடு! எனும்

இதன்எதிரொலியாகத்கலப்புத்திருமணங்களும்நிகழ்கின்றன.

**பரத நாட்டிய அரங்கேற்றம்**

பரத நாட்டியத்தை அங்குள்ளவர்கள் பெரிதாக விரும்பிக் கற்கிறார்கள். சுவிஸில் மாநிலத்துக்கு மாநிலம் பரதநாட்டியத்தைச் செவ்வனே கற்ற பெண்கள், தமது மாநிலத்தில்உள்ளஇளம்பெண்களுக்குப் பரதம் கற்பிப்பதைத் தமது தொழிலாக மாற்றியிருக்கிறார்கள். அதற்குப் பெற்றோர்களும் விரும்பி அனுப்பி வைக்கிறார்கள். இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த பரத நாட்டிய ஆசிரியர் ஒருவரிடமும் பல மாணவிகள் நாட்டியம் பயின்றுகொண்டிருந்தார்கள்.பலபரீட்சைகளில் சித்திய டைந்து தகுதிகாண் நிலையில், பெற்றோர் பெரியளவில் செலவிட்டுப் பரதம்பழகியதமதுபிள்ளைகளின்நாட்டிய அரங்கேற்றவிழாவைநடாத்துகிறார்கள்.

**சுவிஸ் தமிழ்க் கலப்பு**

2004ஆம் ஆண்டில் எடுத்த ஒரு கணக்கின்படி, திருமணமாகிய இலங்கைத்தம்பதிகள் 18ஆயிரம் பேரில் 521 பேர் சுவிஸ்-இலங்கையர்களாகக்கலப்புத்திருமணஞ் செய்திருந்தனர். 15 வருடங்கள் கழிந்து விட்ட நிலையில், இளஞ் சமுதாயம் வளர்ந்து, சுவிஸ்நண்பர்களுடன் ஒன்றாகப்படித்து, அவரவர்வீடுகளுக்குச்சென்று உணவுண்டு பழகுவது என 2004ஆம் ஆண்டில் இருந்ததை விடவும் சுவிஸ் தமிழ்உறவுநிலைமைநன்றாகவேமாறி விட்டது. எனவே தற்காலத்தில் இந்தக் கலப்புத் திருமணங்களின் தொகை நிச்சயம் பல மடங்கு அதிகரித்திருக்கும் என்று குறிப்பிடலாம்.

**சமாதான நாடு**

அனைத்துநாடுகளையும்கைப்பற்றிவந்த ஜேர்மனியின் சர்வதிகாரி ஹிட்லரிடம், ஏன் சுவிட்சர்லாந்தை விட்டு வைத்து இருக்கிறீர்கள் என்று ஒருமுறை கேட்டபோது, அமர்ந்து கொண்டு சமாதானம் பேச ஒரு நாடு தேவை என்றாராம் ஹிட்லர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் உட்பட அகதிகள் மறுவாழ்வு, குழந்தைகள் நலம் என ஐக்கிய நாடுகளின் சுமார் 15 க்கும் மேற்பட்ட அமைப்புகள், தமது முக்கிய அலுவலகங்களை அமைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒருநாடுசுவிட்சர்லாந்து.
80 லட்சம் பேர்தான் சுவிஸின் மக்கள் தொகை என்றாலும் மனித உரிமை, சட்டம் ஒழுங்கு, பொருளாதார பலம் எனப் பல்வேறுசிறப்புத்தன்மைகளில்உலகின் ஓர்உதாரண நாடுஅது.

(தொடரும்)



# மீண்டு வரட்டும் லிபியா!



உள்நாட்டுப் போரில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் லிபியாவிலிருந்து நல்ல சமிக்ஞையொன்று வந்திருக்கிறது. ஐ.நாவின் ஆதரவுபெற்ற லிபிய அரசு அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க முடிவெடுத்தி ருக்கிறது. லிபியாவின் திரிபோலியை மையமாகக் கொண்டு இயங்கும் அரசின் தலைமை அமைச்சர் பயாஸ் அல்சராஜ், ஐ.நாவின் உதவியுடன் தேசிய அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யலாம் என்று கூறியிருக்கிறார். 2011ஆம் ஆண்டில் லிபியாவின் அப்போதைய சர்வாதிகாரி முகம்மது கடாபிக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்த பிறகு, அந்த நாடெங்கும் குழப்பம் நிலவ ஆரம்பித்தது. நேட்டோ படையினரின் ஊடுருவலால் அதிபர் பதவியிலிருந்து கடாபி தூக்கியெறியப்பட்டார். ஆனால், நான்கு தசாப்தங்களாக அவரால் ஆளப்பட்ட லிபியாவில் அதற்குப் பிறகு ஏற்பட்ட வெற்றிடத்தை உள்நாட்டவர்களாலும் சரி, அந்நிய சக்திகளாலும் சரி நிரப்பவே முடியவில்லை. தற்போது லிபியாவில் இரண்டு அரசுகள் உள்ளன. டப்ருக் அரசு லிபிய தேசிய இராணுவத்தின் ஆதரவு பெற்றது. திரிபோலியைத் தலைநகராகக் கொண்டு இயங்கும் அரசுக்கு பன்னாட்டு அங்கீகாரம் இருக்கிறது. பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராகத் தான் போரிடுவதாகவும், தன் தலைமையின் கீழ் லிபியாவை ஒருங்கிணைக்கப்போவதாகவும் ஹப்தார் கூறிக்கொள்கிறார். அல்சராஜோ தன்னுடைய அரசுதான் சட்டபூர்வமானது என்கிறார்.
அல்சராஜின் அரசைக் கவிழ்ப்பதற்காகத் தனது இராணுவத் துருப்புகளை திரிபோலி நோக்கி ஹஃப்தார் செலுத்தியதுதான் தற்போதைய பிரச்சினைக்குக் காரணம்.
திரிபோலி நகரத்துக்குக் கிழக்கிலும் தெற்கிலும் ஹப்தாரின் படைகள் போரிடுகின்றன, நகரத்துக்கு வெளியில் அரசுக்கு ஆதரவான படைகளால் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். பன்னாட்டு நாடுகளின் வேண்டுகோள்



களை மீறியும் இரண்டு தரப்புகளுமே போர்நிறுத்தம் செய்ய மறுத்துவந்தன. அமெரிக்கா, எகிப்து, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் ஹப்தாருக்கு ஆதரவாக இருக்கின்றன. துருக்கி, கட்டார் இரண்டும் திரிபோலி அரசை ஆதரிக்கின்றன. ஆட்சி மாற்றத்தால் ஏற்படும் போர்களால் ஒரு நாட்டில் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதற்கு லிபியா ஓர் உதாரணம். இராக், லிபியா போன்ற நாடுகளில் இராணுவத்தால் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்தது
வேண்டுமானால் எளிதாக இருந்திருக்கலாம். ஆனால், அதற்குப் பிறகு புதிய தேசத்தைக் கட்டமைப்பது எளிதல்ல; அது இராணுவ சக்தியைக் கொண்டு செய்யப்படக்கூடியதுமல்ல.
எண்ணெய் வளம் மிகுந்த லிபியாவில் ஊடுருவி, அங்குள்ள வெவ்வேறு ராணுவங்களுக்கு ஆதரவு வழங்கிவரும் அமெரிக்கா, பிரிட்டன், வளைகுடா நாடுகள் போன்றவை லிபியாவின் தற்போதைய பிரச்சினைக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.
குறைந்தபட்சம், தற்போதைக்காவது தங்களது குறுகலான புவியரசியல் நாட்டங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, இந்தப் போரால் அங்கே கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் பயங்கரவாதக் குழுக்களை அடக்கியாண்டு, அந்த நாட்டில் அமைதி ஏற்பட உதவ வேண்டும்.
இந்த நிலையில் போர்நிறுத்தம் ஏற்பட்டு, அதை எல்லாத் தரப்புகளும் மதித்து நடந்தால் மட்டுமே தலைமை அமைச்சர் அல்சராஜின் யோசனையானது ஒரு புதிய தொடக்கமாக அமையும்.

நன்றி தி ஹிந்து

# இது எங்கள் பாடசாலை

■ நெடுந்தீவு மகேஷ்




அந்தப் பாடசாலையின் வாசலில் தனது காலைப் பதித்தபோது ஒரு வித பயம்! அவரது கல்வியின் உயர்வுக்கு அத்திபாரமிட்ட கல்விக்கூடம் அது என்ற எண்ணத்தால் மூண்டெழுந்த பக்தியின் வெளிப்பாடு அது. இன்று கல்விப் பணிப்பாளராக உயர்ந்து நிற்கும் ஜெயராசாவின் உடல் சிலிர்த்தது. அன்றைய நாள்களில் அதிபராகவிருந்த நவரட்ணசிங்கத்தின் வெண்கலச் சிலை தூரத்தே தெரிந்தது. அவரது கம்பீரமான தோற்றம், கண்டிப்பு, தண்டிப்பு எல்லாமே நினைவில் வந்து பணிப்பாளரைச் சில பொழுது அச்சுறுத்தின. சிலையின் அருகே செல்லவும் சற்றுத் தயங்கினார். எனினும் அவரது மனதின் ஒரு மூலையில் விளைந்த பூரிப்பு அவரைப் பாடசாலைக்குள் ஈர்த்தது. அவருடன் கூடிவந்த ஏனைய அதிகாரிகளும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

அந்தக் கிராமத்தைத் தனது பிறப்பிடமாகக் கொண்டவரும் பணிப்பாளருமான ஜெயராசாவையும் அவரது மேற்பார்வைக் குழுவினரையும் எதிர்பார்த்துக் கடமையிலிருந்த இந்த நாள் அதிபரும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்தான். அவருமொரு பட்டதாரி, அதிபர் பரீட்சையில் சித்தி பெற்றவர். வாசலில் பணிப்பாளரையும் குழுவினரையும் கண்ட அதிபர் அந்த மேற்பார்வைக் குழுவை வரவேற்பதற்காக வாசலுக்கு வந்துவிட்டார்.

தொடர்ந்து நடந்த பணிப்பாளரை அதிபரின் அறைக்குள்ளே அழைத்த அதிபரின் வேண்டுகோளைக் கவனத்திலெடுத்தாலும் தான் கற்ற பாடசாலையின் இன்றைய அழகை இரசிக்கும் ஆவலோடு பணிப்பாளர், அதிபரையும் அழைத்துக் கொண்டு பாடசாலையின் சுற்றாடலைப் பார்க்க நடந்தார். அங்கே உயர்ந்து நின்ற மரங்கள் முதிர்ந்த நிலையில், அந்த நாள் அதிபர் நவரத்தினசிங்கத்தை ஞாபகப்படுத்தின.

வேறு மரஞ்செடி கொடிகளை அங்கே எவரும் புதிதாக நாட்டவில்லை! அதற்குத் தடையாக 'நாங்களே நிற்கி



றோம்!' என்பதாகப் புதிதாக முளைத்திருந்த மாடிக் கட்டடங்கள் சாட்சி பகர்ந்தன. பாடசாலை வளாகத்தின் உள்ளே நடந்து வகுப்பறைத் திசைகள் நோக்கிக் கூடி வந்த ஏனைய பணிப்பாளர்கள் விலகி நகர்ந்தனர். பாடசாலைச் சுற்றாடலைப் பழைய நினைவுகளோடு பார்த்துத் திரும்பிய பணிப்பாளர் வகுப்பறைகளுக்குள்ளே மாணவர்களின் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளை அவதானித்தார். 'வகுப்பறைகளில் மாணவர்களின் வரவு ஏன் குறைந்திருக்கிறது?' என்ற கேள்வியைத் தனக்குள் எழுப்பியவாறு வகுப்பறைகளை விட்டு வெளியேறிய பணிப்பாளர், அதிபரின் அலுவலகம் நோக்கி நடந்தார்.

அங்கே அதிபரின் அலுவலக வாசலில் ஒரு தாய் நின்று கொண்டிருந்தார். அந்தத் தாயைப் பார்த்த அதிபர் "இன்றைக்கு ஒன்றும் செய்ய ஏலாது நாளைக்கு வாருங்கள்' என்று சொல்வது பணிப்பாளரின் காதுக்கும் எட்டவே செய்தது. பணிப்பாளர் அதைக் காதில் வாங்கிக் கொண்டே அருகில் கம்பீரமாக அமைந்திருந்த புதிய அழகிய மகிந்தோதைய விஞ்ஞான கூடக் கட்டடத்துக்குள் நுழைந்தார். இத்தகைய பிரமாண்டமான விஞ்ஞானகூடம் தான் இந்தப் பாடசாலையில் கற்ற காலத்தில் காணக் கிடைக்கவில்லேயே என்ற ஏக்கம் நிரம்ப மனம் வருந்தினார். அன்று இத்தகைய வசதிகளோடு எமக்கு விஞ்ஞானக் கல்வி ஊட்டப்பட்டிருந்தால் எமக்குள் எத்தனை பேர் மருத்துவர்களாகவும் விஞ்ஞானிகளாகவும் பட்டம் பெற்றிருப்பார்கள் என்று எண்ணியவருக்குப் பெருமூச்சே எஞ்சியது.

◎◎◎◎◎

மனையியற்கூடம், நூலகம், கணனிக்கூடம் எனப்பலவும் பாடசாலையைச் சூழ்ந்து ஆங்காங்கே அமைந்திருந்தன. அனைத்தையும் பார்த்துவந்த பணிப்பாளர் இறுதியாகப் பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டத்தைக் காட்டும் கண்ணாடிகளாக அநேகரால் அவதானிக்கப்படும் பரீட்சை முடிவுகளைப் பார்த்தார். அவருக்கு வேதனை மேலெழுந்தது. இது எனது கிராமம். நான் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்ற பாடசாலை. என்னையும் என்னைப்போல் பலரையும் உயர்த்தி வைத்த ஏணி, இது இன்று இவ்வாறு வீழ்ச்சியடையக் காரணம் என்ன?

பாடசாலையில் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் அனைவரும் இந்தக் கிராமத்தவர்களே! அதிபரின் அறைச் சுவர்களிலே நவரத்தினசிங்கத்துடன் ஆசிநாதர், குருநாதன், சின்னத்தம்பி, அன்ரனி, புஸ்பவதி, சாரதாதேவி, ஓங்காரமூர்த்தி ஆகிய புகழ் பூத்த அதிபர்களின் உருவப்படங்கள் அலங்காரமாய்த் தொங்கின.

அடுத்துத் தெரிந்த இடைவெளியில் இன்றைய அதிபரின் ஒளிப்படத்துக்கான இடமொன்றும் இருப்பதை உணர்ந்த பணிப்பாளர் அருகிலிருந்த அதிபரை நோக்கினார். அவரின் பார்வையில் பாடசாலையை முன்னேற்ற வேண்டும் என்ற உறுதி இருப்பதாக நம்பினார். எனினும் பிள்ளைகளின் வரவிலும் அவர்களின் கற்றல் - கற்பித்தலிலும் பெற்றோருடன் ஆசிரியர்களும் அக்கறை காட்ட வேண்டுமோ? என்ற ஆதங்கம் தெரிந்தது.

கிராமத்தவர் பலர் தமது பிள்ளைகளை நகரப் பாடசாலைகளில் கல்வி கற்க அனுப்புகிறார்கள். ஆசிரியர்களும் தாம் செய்யும் தொழிலின் மகத்துவம் உணர்ந்து செயற்பட வேண்டாமோ? பணிப்பாளரோ ஆசிரியர் கூட்டத்தின்போது மனம் நொந்து பல கேள்விகளைக் கேட்டார். கலைத்திட்டமும் கற்பித்தல் பயிற்சிகளும் நாடு முழுவதும் ஒரே வகையானதாக இருக்கும்போது ஏன் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபாடுகள் விளைந்தன. தனது கிராமத்துப் பாடசாலைக்கு ஏன் இந்த அவலநிலை ஏற்பட்டது. பணிப்பாளர் மனத்திலே வேதனை மிஞ்ச, முகத்திலே துயரம் பரவ மௌனமாக வருந்தினார்.

**பழைய மாணவர் எனத் தோன்றிய பணிப்பாளர் ஜெயராசாவின் உணர்விலே பலநூறு கீறல்கள்! சோர்வோடு அதிபரின் அறையிலிருந்து வெளியே வந்தார். பாடசாலை முற்றத்தின் வடமேற்கு மூலையில் நிமிர்ந்து நிற்கும் முன்னாள் அதிபர் நவரட்ணசிங்கம் நினைவாக உருவமைத்த வெண்கலச்சிலை அங்கே கூடிநின்ற கல்வி நிர்வாகிகளைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பது போலத் தெரிந்தது. பணிப்பாளர் ஜெயராசா வெட்கித் தலை குனிந்தார்.**

◎◎◎◎◎


அவர் கற்ற காலத்தில் அன்றைய பாடசாலை வாழ்க்கைக்கு உற்சாகமும் உறுதியும் தந்த அந்த நாள் அதிபர் நவரட்னசிங்கம் செய்த அரும்பணிகளால் நகரத்து மாணவர்கள் அந்தக் கிராமத்துப் பாடசாலையை நோக்கி ஈர்க்கப்பட்ட சம்பவங்கள் மனதை மகிழ்வித்தன.

சுப்பிரமணியம், பாலசிங்கம், இராஜகோபால், ஸ்ரீஸ்கந்தராஜா, ஞானலிங்கம், சொக்கலிங்கம் போன்ற பலரும் நகரத்திலிருந்து வந்து கற்றுத் தேறினார்கள். பாடசாலையில் முற்பகல் ஒன்பது மணிக்குத் தொடங்கும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மதிய இடைவேளைக்குப் பின்னரும் பிற்பகல் நான்கு மணிவரை நடைபெற்றன. மதிய இடைவேளையின்போது பாடசாலை நூலகத்தில் பலரும்சேர்ந்து பத்திரிகைகளையும், புத்தகங்களையும் விருப்பத்தோடு வாசித்த ஞாபகம் ஜெயராசாவின் நினைவில் வந்து உற்சாகம் தந்தது. மாலையில் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்று பலரும் ஓடி விளையாடுவோம். இவ்வாறு பலதையும் எண்ணிப் பார்த்த பணிப்பாளருக்கு இவைகளையெல்லாம் கவனத்தில் எடுக்காமலேயே இன்று மாணவர்களின் பாடசாலைக் காலம் விரைவதாகத் தோன்றியது.

மின்சாரம் இல்லாத இருண்ட நாட்கள் அவை. பெற்றோல்மக்ஸ் விளக்கில் மண்ணெண்ணெய் நிரப்பிக் காற்றடித்து ஒளியேற்றி இரவு நேரம் தூக்கம் மறந்து கற்க அதிபர் நவரட்ணசிங்கம் மாணவர்களைத் தூண்டிய நாள்கள் அவரது நினைவுக்கு வந்தன.

25 →

# இது எங்கள் ...



பாடசாலையில் விடுதி வசதி இல்லாத போதும் பாடசாலை யையே இரவு பகலாகக் கற்றலுக்கும் கற்பித்தலுக் கும் மாத்திரமல்ல ஒழுங்கான முறையில் தங்கி வாழும் கல்விக்கா கவும் பல நிலைகளில் வாய்ப்புக் களை ஏற்படுத்திக் கொடுத்த அதிபர் நவரத்தினசிங்கத்தின் ஆளுமையை எண்ணிப் பேரானந்தமடைந்தார்.

◎◎◎◎◎

பாடசாலையின் நுழைவு வாசலில் வெள்ளித் தகட்டினாலான உயர்ந்த பெயர் வளைவு வடிவமைக்கப்பட்டி ருக்கிறது. 'இது எங்கள் பாடசாலை' என்ற வாசகம் பாடசாலை முகப் பிலே வண்ணம் தீட்டி எழுதப்பட்டுள் ளது. விளையாட்டிடம் அரங்கத் தோடு கூடிய அகன்ற வெளியிலே அழகாக அமைக்கப்பட்டுள்ளது. அன்றைய ஓலைக் கொட்டில்கள் இன்று இல்லவே இல்லை. கட்டடத் தொகுதிகள் பெருகிப் பாடசாலை வளாகத்தை நிரப்பி இருந்தன. பாடசாலையின் புறச்சூழல் எல்லா வசதிகளோடும் வடிவமைக்கப்பட்டாலும் இன்றைய இந்தப் பாடசாலை மாணவரின் கல்வியில் வீழ்ச்சி காணப்படுவதாகவே பணிப்பாளரின் மேற்பார்வை முடிவுகள் சுட்டிக் காட்டின.

அறுநூறு எழுநூறென்று கற்றுப் புலமை பெற்ற பாடசாலையில் இன்று இருநூறு மாணவர்களுக்கும் குறைவானோரே கற்கிறார்கள் என்பதை அறிந்த பணிப்பாளர் சோர்வுற்றார். அதிபரின் அலுவலக வாசலில் காத்துக் கிடந்த அந்தத் தாயாருக்கு "நாளைக்கு வாருங்கள்" என்றுரைத்த அதிபரின் வேண்டு கோள் நினைவுக்குவந்தது.

தனது பிள்ளைகளை நகரப்பாடசா லைகளிலே சேர்த்துப் படிப்பிக்க வேண்டுமென்ற ஆவலோடு விடுகைப் பத்திரத்தைப்பெறவே அவர் வந்திருந்தார். இவ்வாறு பெற்றோர் பலரும் விடுகைப்பத்திரம் பெற வந்து போவதைப் பாடசாலை யின் கற்பித்தல் சூழலில் ஏற்பட்ட வீழ்ச்சியாகவே பணிப்பாளர் கருதினார்.

அந்தப் பாடசாலையின் பழைய மாணவர் எனத் தோன்றிய பணிப் பாளர் ஜெயராசாவின் உணர்விலே பலநூறு கீறல்கள்! சோர்வோடு அதிபரின் அறையிலிருந்து வெளியே வந்தார். பாடசாலை முற்றத்தின் வடமேற்கு மூலையில் நிமிர்ந்து நிற்கும் முன்னாள் அதிபர் நவரட்ண சிங்கம் நினைவாக உருவமைத்த வெண்கலச்சிலை அங்கே கூடிநின்ற கல்வி நிர்வாகிகளைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பது போலத் தெரிந்தது. பணிப்பாளர் ஜெயராசா வெட்கித் தலை குனிந்தார்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 576

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | 6 |
| | ■ | 7 | | | | | |
| 8 | 9 | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | | ■ | |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | |
| 15 | | 16 | | ■ | 17 | | ■ |
| | ■ | | ■ | 18 | | | 19 |
| 20 | | | | | | ■ | |

**அனுப்புபவர் பெயர்:.........................................**
**முழுமையான தபால் விலாசம்: ...............................**
**.........................................................**
**கையொப்பம்:..............................................**

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 574
இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்
(1) வைகாசி (4) கருமாதி (7) கர்த்தர் (9) தரை (10) திருப்பம் (12) பரம்பல் (14) விசம் (15) தண் (16) சுளை (18) தரனி (19) சுதம் (20) புத்திரி (21) பிணம்

### மேலிருந்து கீழ்
(1) வைகறை (2) கார் (3) சித்திரம் (4) கர்ப்பம் (5) மாதம் (6) திரை (8) தரும் (11)பல் (12) பசளை (13) கண்ணியம் (14) விசும்பு (15) தர (17)உபரி (18)தம்பி (19)சதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.576**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (10.07.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.576 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 14.07.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## இடமிருந்து வலம்

1. ஒவ்வொருவருக்கும் என எழுதப்பட்டது.
4. தங்களுடையது
7. மானத்துக்கு கேடு ஏற்படுதல்
8. காற்று மண்டலம்
10. உலோகத்தால் ஆனது
11. உறுதியானது
12. இணக்கச் சொல்
13. தெரு
14. ஆபரணம்
15. வேறுபாடு காட்டுதல்
17. குழம்பு நிலை
18. இது ஒரு வாசனைத் திரவியம்
20. மழை காலம் முடிய இது இங்கு தொடங்கும்

## மேலிருந்து கீழ்

1. சதிபதி
2. பறக்கும் வாகனம்
3. நாள்
4. பொன்
5. ஒரு நட்சத்திரம்
6. யானையின் அங்கம்
9. ஒரு திசை
12. மூலம்
13. மனை
14. சிரிக்கும்
15. வெற்றிலையுடன் சேர்த்துச் சாப்பிடுவது
16. யானையை வழி நடத்துவோர்
17. நிறை
18. சேர்
19. பூமி

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 574 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பிய வர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ப.பிரித்திகா**
தரம் 4 E,
யா/சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், றக்கா வீதி யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**கை.கௌரீஷன்,**
இல.425 நாவலர் வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
**செ.உதயன்,**
4ஆம் வட்டாரம்,முள்ளியவளை,
முல்லைத்தீவு.

**4 ஆம் பரிசு**
**குணராசா விஜிதன்,**
6ஆம் வட்டாரம் குமுளமுனை,
முள்ளியவளை.

**5 ஆம் பரிசு**
**பா.யதுஷா,**
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி

## பாராட்டுப் பெறுவோர்

**த.பரமேஸ்வரன்,**
உபதபாலகம்,கந்தரோடை,
சுன்னாகம்.

**ந.ஜெயகணேசன்,**
இல.216/2 பெட்ரிக்கா வீதி,
கொழும்பு -6.

**கா.பொ.இ.குலசிங்கம்,**
5ஆம் வட்டாரம்,
யா/நயினாதீவு.

**சொற்சிலம்பம் போட்டி 574 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**










## விஜய் சேதுபதியுடன் 4ஆவது முறையாக இணையும் ஐஸ்வர்யா ராஜேஷ்



ரம்மி, பண்ணையாரும் பத்மினியும், தர்மதுரை ஆகிய படங்களைத் தொடர்ந்து மீண்டும் நடிகர் விஜய் சேதுபதியுடன் 4ஆவது முறையாக இணைந்து ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்க உள்ளார்.

கிராமத்துப் பின்னணிக் கதைக்களத்தில் உருவாகும் இந்தத் திரைப்படத்துக்கு 'க/பெ.ரணசிங்கம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கதாநாயகியை மையமாகக் கொண்டு உருவாகும் இந்தப் படத்தில் விஜய் சேதுபதி சிறப்புத் தோற்றத்தில் நடிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

பி.விருமாண்டி இயக்கத்தில் உருவாகவுள்ள இந்தப் படத்துக்கு சுதர்சன் ஸ்ரீனி வாசன் ஒளிப்பதிவு செய்கிறார். பாடல் வரிகளை வைரமுத்து எழுத, ஜிப்ரான் இசையமைக்கிறார்.




## புறந்தள்ளப்படும் நாகரிகங்கள்



வீதியோர மரங்களை வெட்டி வீதிகள் அகலப்படுத்திய பின், நிழலுக்கு ஒதுங்க நிழற்குடை அமைத்தோம்.

நதிகளையும் குளங்களையும் கழிவுநீரைக் கொட்டி நஞ்சாக்கிவிட்டு, பாலை விட அதிக விலைக்குப் போத்தலில் தண்ணீர் விற்றோம்.

விவசாய விளைநிலங்களை வீட்டுமனை களாக்கி விற்றுவிட்டு, அரிசி விலை உயர்வுக்கு கவலைப்பட்டோம்.

திருக்குறளைப் பரீட்சைக்குப் படித்துவிட்டு, வாழ்க்கையில் கடைபிடிக்காமல் தோல்வி கண்டோம்.

காசு வாங்கிக்கொண்டு ஓட்டு போட்டு, பின்பு ரோஷம் இல்லாமல் முடங்கிக் கெட்டோம்.

ஏர் ஓட்டுவதை அவமானமாகக் கருதி, கார் ஓட்டுபவனைப் பெரிதாய் கண்டோம்.


இப்படித்தான் நாம் பண்பாட்டைப் புறந்தள்ளி விட்டு, நாகரிகமடைந்து விட்டதாக நம்புகிறோம்.



## பொய்களின் வகைகள்!

சாதி, மதம், இனம், மொழியில் தான் பிரிவுகள் இருக்கின்றன என்று பார்த்தால் மனிதர்கள் பேசுற பொய்களில் கூடப் பிரிவுகள் இருக்காம்ப்பா!!

- அரசியல்வாதிகள் சொல்வது அப்பட்டமான பொய்.
- அரசு சொல்வது அட்டகாசமான பொய்.
- புருஷன் சொல்வது மட்டமான பொய்.
- பொண்டாட்டி சொல்வது திட்டமான பொய்.
- பசங்க சொல்வது பக்காவான பொய்.
- பொண்ணுங்க சொல்வது கிக்கான பொய்.
- முகாமையாளர் சொல்வது சமாதான பொய்.
- முகாமையாளரிடம் சொல்வது சண்டைமூட்டி விடும் பொய். குழந்தைகள் சொல்வது அழகான பொய்.
- கவிஞர்கள் சொல்வது ரசனையான பொய்,
- சாமியார்கள் சொல்வது புரியாத பொய்.



## சிரிப்பே மருந்து!


'சிரிப்பு இதன் சிறப்பைச் சீர்தூக்கிபார்ப்பதே நமது பொறுப்பு மனம்கறுப்பா வெள்ளையா என்பதைக்காட்டும் கண்ணாடி சிரிப்பு! சிந்திக்கத் தெரிந்த மனிதகுலத்துக்கேசொந்தமான கையிருப்பு!வேறு ஜீவராசிகள் செய்ய முடியாதசெயலாகும் இந்தச் சிரிப்பு!" என்ற நகைச்சுவை மன்னன் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் பாடல், சிரிப்பின் மகத்துவத்தை உணர்த்துகிறது. சுவைபட நகைத்தலே நகைச்சுவை. நல்ல கருத்து+சிரிப்பு= நகைச்சுவை என்றால் வரவேற்பிற்குரியது. எதிராளியின் மனதைப் புண்படுத்தாத வேடிக்கை, விளையாட்டு, தமாஷ், ஹாஸ்யம், கேலி என எல்லாமே நகைச்சுவை வகையைச் சார்ந்தவையே. இன்றைய மாற்று

மருத்துவ முறைகளில் சிரிப்பும் ஒரு சிகிச்சை முறையாக ஏற்கப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் புதிதல்ல, 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்பது நம் முன்னோர்கள் சொல்லி வைத்த அனுபவ உண்மைதானே. 'சிரிப்பும் சந்தோஷமும் நோயாளி குணமடைவதைத் துரிதப்படுத்தும்' என்கின்றனர் அமெரிக்க மருத்துவர்கள். நகைச்சுவையில் எத்தனையோ பயன்கள் உண்டு. எனினும், 'நல்ல நகைச்சுவை சூழ்நிலையின் இறுக்கத்தைப் போக்கிவிடும்' என்பது சிறப்பு.

**சிரிப்பின் பயன்கள்**

வாய் விட்டுச் சிரிப்பதன் மூலம், முகத்தில் பொலிவும், கண்களில் ஒளியும் கூடும். மேலும் கண்களில் சாந்தமும், தெளிவும் உண்டாகும். நுரையீரல் முழுமையாக விரிந்து, பிராண சக்தியை முழுவதும் கிடைக்கச் செய்கிறது. இருதயம் சிறப்பான முறையில் வேலை செய்கிறது. வயிற்றில் ஜீரண சக்தி துரிதமாக நடைபெறுகிறது. சிறுநீரக செயற்பாடும் நன்கு அமைகிறது. நரம்பு மண்டலமே ஒருவிதப் புத்துணர்ச்சியை பெறுகின்றது. தொண்டைப் பிரச்னைகள்,-வாய்வு தொந்தரவுகள், மலச்சிக்கல் போன்றவற்றிலிருந்து விடுபட முடிகிறது. சிரிக்கச் சிரிக்க மூளைக்குத் தேவையான ரத்த ஓட்டம், நன்கு துரிதமாகச் செல்கிறது. மூளைக்குத் தேவையான ஒட்சிசன் முழுமையாய் கிடைக்கிறது. இதனால் மூளை புத்துணர்ச்சி அடைவதுடன், ஞாபக சக்தி அதிகரிக்கிறது


# மீன் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்



மீன்களில் அடங்கியுள்ள புரதம், கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் மக்னீசியம் ஆகிய தாதுச் சத்துக்கள் எலும்பு வளர்ச்சிக்கும், இரும்புச் சத்து குருதியில் சிவப்பணுக்கள் அதிகரிக்கவும் உதவுகிறது.
மீன்களில் நிறைந்துள்ள ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் வாய், உணவுக்குழாய், பெருங்குடல், கர்ப்பப்பை, மார்பகம் மற்றும் புரோஸ்டேட் ஆகிய பகுதிகளில் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பை 30 முதல் 50 சதவீதம் வரையிலும் குறைக்கிறது.
இருதய நோய் மற்றும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்புகளைக் குறைக்கிறது. மேலும் குருதிக் குழாயின் நீட்சித் தன்மை அதிகரிப்பதோடு உடலில் கெட்ட கொழுப்பு உருவாவதைக் குறைத்து நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்க வழி வகைச் செய்கிறது.
பெண்கள் கர்ப்பக்காலத்தில் மீன் உண்ணுவதால் குறைப்பிரசவத்தை தவிர்க்கலாம். தாய்ப்பாலை அதிகரிக்கவும், தாயின் எலும்புகளுக்கு வலு சேர்க்கவும்கூட மீன் உணவு பயன்படுகிறது.
மீன் உண்ணும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா ஏற்படும் வாய்ப்பு குறைகிறது. தொடர்ந்து மீன் உண்பதால், எலும்புத் தேய்வு, சொறி, சிரங்கு மாறும் நோய் எதிர்ப்புத் தன்மை குறைவால் ஏற்படும் நோய்கள் போன்றவற்றைக் குறைக்கிறது.
மருத்துவகுணம் நிறைந்த மத்தி மீனை நீரிழிவு நோய் உள்ளவர்கள், சாப்பிட்டால் நோய் எதிர்ப்பு திறன் அதிகரித்து குருதியில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்தலாம்.
மீன் சாப்பிடுவதன் மூலம் அதிக நாள்கள் உயிர்வாழ முடியும் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. மீனில் உள்ள ஒமேகா -3 பேட்டி அமிலம், கேன்சர், இதய கோளாறுகள் ஏற்படாமல் தடுப்பதுடன் அதிக காலம் உயிர்வாழ உதவுகிறது.
மீன் உட்கொள்பவர்களின் தோல் மற்றும் நகங்கள் உறுதியாகவும், கண் பார்வை தெளிவாக இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. உடல் எடையை குறைக்கக்கூடிய புரதச் சத்து, மீன்களில் அதிக அளவு இருப்பதால் உடலுக்கு மிகுந்த நன்மை அளிக்கிறது. மீனை அடிக்கடி உணவில் சேர்த்து கொள்வதால், எந்த நோய்களும் நம்மை அண்டாது.

# ஆஸ்துமா நோய்களை கட்டுக்குள் வைக்கும் சுவாசகோச முத்திரை!


மூச்சுத்திணறல், இருமல், இரைப்பு, இருமினாலும் சளி வெளிவராமை போன்ற பிரச்சினைகளுக்குச் சுவாசகோச முத்திரை தீர்வு அளிக்கிறது.
பெருவிரலில் அடி ரேகை, நடு ரேகை மற்றும் நுனியை கவனிக்க வேண்டும். பின்னர் சுண்டுவிரலால் கட்டை விரலின் அடி ரேகையையும் மோதிர விரலால் கட்டை விரலின் இரண்டாவது ரேகையைத் தொட்டும், நடுவிரலின் நுனியால் கட்டை விரலின் நுனியைத் தொடவேண்டும். ஆள்காட்டி விரல் மட்டும் முழுமையாக மேல்நோக்கி நீட்டிவைக்க வேண்டும்.



இப்போது உங்கள் கண்களை மூடிக்கொண்டு, மூச்சுக்காற்றை மெதுவாகவும், ஆழமாகவும் உள் இழுக்க சுவாசிக்க வேண்டும். பின்பு மெதுவாக மூச்சை வெளியிட வேண்டும். இதே முறையில் இந்த பயிற்சியை தினமும் காலையிலும், மாலை யிலும் 15 முதல் 20 நிமிடங்கள் வரை செய்ய வேண்டும்.
இந்த முத்திரையைத் தொடர்ந்து செய்வதால் சுவாசம் சம்பந்தமான நோய்கள் குறைபாடுகள், நீங்கி சுவாச இயக்கம் நன்கு நடைபெறும். நுரை ஈரல்கள் தூய்மையாகி வலுப்பெறும். ஆஸ்துமா போன்ற நோய்கள் சில வாரங்களில் கட்டுக்குள் வரும். உடலின் வாதத்தன்மையின் சமநிலையை காக்கும். மனவலிமை மனோதிடம் உண்டாகும்.

**பயன்கள்**

**மழைக்காலங்களில் நெஞ்சில் சளி உருவாவது தடுக்கப்படும்.** மூச்சுத்திணறல், மூச்சுக்குழல் இறுக்க ஆகியவை குறையும்.
ஆஸ்துமா நோயாளிகள் தொடர்ந்து செய்துவர, 3 மாதங்களில் நோயின் தீவிரம் குறையும். மூச்சுவிடுதல் எளிமையாகும். இன்ஹேலர் மருத்து பயன்படுத்துவதாக இருப்பின் அதன் அவசியமும் படிப்படியாகக் குறையும்.
ஆஸ்துமா வரத்தொடங்கி ஆரம்ப நிலையில் இருக்கும் எல்லா குழந்தைகளும் இந்த முத்திரையை தினமும் செய்ய வேண்டும்.
இன்ஹேலர் மருத்து பயன்படுத்தும் நிலை வருவதற்கு முன், இந்த முத்திரையைச் செய்து வர ஆஸ்துமா வராது.
**ஆஸ்துமா நோய் வராமல், வருமுன் காக்க இந்த முத்திரை உதவும்.**



# துரியன் பழத்தின் மருத்துவ குணங்கள்

முக்கனிகளுள் ஒன்றான பலாவுக்கு ஈடு இணையாகக் கூறப்படுகின்ற துரியன் பழம் பலாப்பழத்தைப் போல் இருக்கும். பலாப் பழத்தை விடச் சற்றுச் சிறியதாக இருக்கும். வெளிப்புறத்தில் கூர்மையான முட்கள் இருக்கும். இது பலாப் பழத்தைப் போலவே சுளைகளைக் கொண்டது.
துரியன் பழம் ஆசியாவில் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, போன்ற இடங்களில் விளைகிறது. மலேசியாவிலும், தாய்லாந்திலும் அதிகம் விளைகிறது. மலைப்பாங்கான பகுதிகளில் இவை அதிகம் வளர்கின்றன. துரியன் பழம் அதிக மருத்துவத் தன்மை கொண்ட பழங்களுள் ஒன்று. இதன் மணம் ஒருவித வெறுக்கத்தக்க நாற்றத்தைக் கொண்டதுபோல் இருக்கும். ஆனால் சாப்பிட ஆரம்பித்தால் ஒருவர் முழுப் பழத்தையும் சாப்பிடும் அளவுக்குச் சுவை கொண்டது.
ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை இந்தப்பழம் விளைகிறது. மலேசியா போன்ற நாடுகளில் எந்தப் பருவத்திலும் விளைகிறது. சீனர்கள் சாப்பிடும் முக்கிய பழங்களில் துரியன் பழமும் ஒன்று.

**உடல் வலுவடைய**

சிலருடைய உடல் சத்துக் குறைவாலும், மது, புகை போதை போன்ற தீய பழக்கங்களாலும் உடல் வலுவிழந்து இருக்கும். இதனால் இவர்களின் உடல் நோய்களின் கூடாரமாக மாறிவிடுகின்றது. இவர்கள் வாரம் இரு முறை துரியன் பழம் சாப்பிட்டு வந்தால் உடல் வலுவடையும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

**குருதி சுத்தமடைய**

குருதியில் அதிக கொழுப்பு பொருள்கள் படிவதால் குருதி அடைப்பு ஏற்பட்டு குருதி அசுத்தமாகிறது. இந்தக் கொழுப்புச் சத்தைக் கரைத்து கலோரிகளாக மாற்றி குருதியைச் சுத்தப் படுத்துவதுடன் இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்து காப்பாற்றும்.

**நரம்பு புத்துணர்வடைய**

தற்காலத்தில் பெரும்பாலானோர் நரம்பு தளர்வு நோயால் பாதிக்கப்படுகின்றனர். எரிச்சல், கோபம், மன அழுத்தம், மன உளைச்சல், போதிய உடற்பயிற்சியின்மை போன்றவற்றால் நரம்புகள் எளிதில் பலவீனமடைகின்றன. இந்தக் குறையை போக்க துரியன் பழம் மிகவும் பயன்படும். கிடைக்கும் காலங்களில் துரியன் பழத்தை வாங்கிச் சாப்பிட்டுவந்தால் நரம்புகள் புத்துணர்வடையும்.

**கருப்பை பலப்பட**

கருப்பை பலவீனமாக இருந்தால் கருத்தரிக்காது. அப்படிக் கருத்தரித்தாலும் சில வாரங்களில் கலைந்துவிடும். இத்தகைய பிரச்சினை உடைய பெண்கள் துரியன் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் சிறந்த பலன் கிடைக்கும். கருப்பை பலம் பெறும். மேலும், ஆண்களுக்கு விந்தணுக்கள் குறைவால் குழந்தை யின்மை குறை இருக்கும். துரியன் பழம் அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வல்லது. எனவே துரியன் பழம் சாப்பிட்டு வந்தால் தாது பலப்படும்.

**மலச்சிக்கல் நீங்க**

மலச்சிக்கலை நோயின் தலைவாசல் எனக் கூறலாம். மலச்சிக்கலை நீக்கினாலே நோயின்றி நூறாண்டு வாழலாம். மலச்சிக்கலை நீக்கும் குணம் துரியன் பழத்திற்கு உண்டு. செரிமான சக்தியை தூண்டி நன்கு பசியைக் ஏற்படுத்தும். கண்களின் பார்வை நரம்புகள் பலப்படும். தோலை பாதுகாத்து சருமத்தை மிளிரச் செய்யும். எனவே கிடைக்கும் காலங்களில் இந்தப் பழத்தை அதிகம் சாப்பிட்டுப் பயனடையலாமே.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# பொதுநிலையினர் பணிகளை கோடிட்டுக் காட்டிய மாநாடு

யாழ்ப்பாண மறைமாவட்டப் பொது நிலையினர் கழக மாநாடு அண்மையில் யாழ். மறைமாவட்டத்தில் பொது நிலையினர் கழக இயக்குனரின் ஜே.ஜே.மவுளிஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றமை பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது.

**யாவர் பொதுநிலையினர்?**

திருஅவையில் குருக்கள். துறவிகள் பொதுநிலையினர் என்போர் அங்கம் வகிக்கின்றனர். குருக்கள் துறவிகள் அல்லாதவர்கள் பொது நிலையினர் என அழைக்கப்படுகின்றனர். இவர்களும் திருநிலையினர் என அழைக்கப்படும் குருக்கள் துறவிகளுடன் இணைந்து பணியாற்ற அழைக்கப்படுகின்றனர்.

பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி பற்றிய விதித் தொகுப்பு 1965ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18ஆம் நாள் வெளியானது. சங்க ஏடுகள் யாவற்றுள்ளும் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே இதை நாம் கருதவேண்டும். இந்தப்பொருள் பற்றி ஒருவிதப் புதிய கோட்பாட்டை இந்தத்தொகுப்பு தம்முள் கொண்டுள்ளது என்பதால் அல்ல ஆனால் திருச்சபை அமைப்பில் பொதுநிலையினருக்கு உரிய இடத்தை இது அளிக்கிறது என்பதே முக்கியத்துவத்திற்குக் காரணம். திருத்தூதுப் பணிக்குப் பொதுநிலையினர் அழைக்கப் பெற்றுள்ளனர். இந்த அழைப்பினால் திருச்சபையின் அருள்பணியிலே அவர்கள் தமக்கே உரித்தான அருள்நெறியோடு பங்குகொள்ள முடிகிறது என்பதை இவ்விதித்தொகுப்பு நமக்கு நினைவுறுத்துகிறது. திருச்சபையிலுள்ள ஒவ்வோர் ஆணும் பெண்ணும் குழந்தையும் இந்தத் திருத்தூதுப் பணிக்கு அழைக்கப் பெற்றுள்ளனர். 'நற்செய்தி அறிவித்தல்' அல்லது நற்செய்தியை உலகுக்குப் போதித்தல் என்பது தம் முழு ஆற்றலுடன் உலகியல் அமைப்பைப் புதுப்பிக்க உழைத்தல் ஆகும். இதுவே திருத்தூதுப் பணியின் குறிக்கோள்.

பொதுநிலையினரும் அவர்தம் அருள்பணியாளர்களும் சேர்ந்தே கடவுளின் மக்களாவர். இவ்வாறு இணைந்து இவர்கள் கிறிஸ்துவின் மறையுடலை உருவாக்குகின்றனர். கிறிஸ்துவின் உடலில் உள்ள உயிருள்ள உறுப்பினர்கள் என்ற முறையில் அனைவரும் தம் ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்தித் திருச்சபையை வளர்ச்சியுறச் செய்யவும் தூயத் தன்மையுடன் பொலிவுற்றுத் திகழச் செய்யவும் அழைக்கப்படுகின்றனர்.

இக்கட்டத்தில் கிறிஸ்தவர் என்ற நிலையில் மிக முக்கியமான பொறுப்பு நமக்கு உண்டு. பிற சமயத்தினர் நடுவிலே நாம் வாழ்கின்றோம்; நம் அன்றாட வாழ்வில் எல்லாவித மக்களிடமும் தொடர்பு கொள்கிறோம். நம் பிற சமய நண்பர்களும் அயலவரும் பொதுவாக, நமது நம்பிக்கை மட்டில் பெருமதிப்புக் கொண்டுள்ளனர். துணையும் தூண்டுதலுமாய் நாம் இருக்க இயல்பாகவே எதிர்பார்க்கின்றனர்.

எனவே கிறிஸ்தவக் குடும்பங்கள் தப்பெண்ணம் பிரிவு முதலியவற்றால் தீய மாதிரியாக இருந்தால் அன்பின் உண்மை உணர்விலும், நேர்மை நீதி உணர்விலும், வறியோர் தாழ்த்தப்பட்டோர் மீது கொள்ளும் உண்மை அன்பிலும் கிறிஸ்தவர்கள் மேம்பட்டிராவிட்டால், எத்தகைய திருத்தூதுப் பணியைத்தான் அவனியில் அவர்கள் ஆற்றமுடியும்?

ஜே.ஜே.மவுளிஸ் அடிகளாரின் ஆசிச் செய்தி

இறைமகன் இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் இறையாசீரோடு கூடிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் கழக மாநாட்டு சிறப்பிதழிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.




திரு அவையில் 99 வீதமாக இருக்கும் பொதுநிலையினர் தமது உன்னதமான பொதுநிலை சார்ந்த சீடத்துவப் பணிகள் வழியாக உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் புளிக்காரமாகவும் திகழ்ந்து இறைமகன் இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்க வேண்டும். திருமுழுக்கினூடாக இப்பணிகளுக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் இவ்வழைத்தல் ஆண்டிலே கிறிஸ்துவின் முப்பணிகளைப் பிரமாணிக்கத்தோடு ஆற்ற முன்வர வேண்டும்.

பங்குத் திருஅவையில் பொது நிலை நம்பிக்கையாளர்கள் முடியுமான அளவு இணைந்து பணியாற்றவும் பொதுநிலையினர் விழிப்புணர்வுக் குழுக்களில் இணைந்து பங்கின் முன்னேற்றத்திற்காக உழைக்கவும் எமது அழைப்பின் மாண்பை உணர்ந்து மறைக்கோட்ட மறைமாவட்டக் கழகங்களின் செயற்பாடுகளுக்குக் கரங்கொடுத்து உழைக்கவும் முன்வருவோம்.

நாளாந்த வாழ்விலும் எமது குடும்பங்களிலும் பணி புரியும் இடங்களிலும் பங்கு திரு அவையிலும் நாம் நடமாடும் இடங்களிலும் இறையாட்சியின் மதிப்பீடுகளுக்கு சாட்சிகளாக விளங்குவதால் கிறிஸ்துவின் திருத்தூதுப் பணிகளில் பங்கெடுக்கின்றோம். கடந்த வருடம் முழுவதும் எமது பணிகளுக்குப் பக்கபலமாக இருந்த பங்குமட்ட விழிப்புணர்வுக்குழு மறைக்கோட்ட மறைமாவட்டக் கழகங்கள் மற்றும் பொதுநிலையினர் அமைப்புக்கள் மற்றும் சகல அருட்பணியாளர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.



கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றுக் கொண்டுள்ள நிலை வாழ்வுக்கு நன்றி கூறி எம்மை அழைத்தவரின் குரலுக்கு அன்போடு செவிமடுத்து கிறிஸ்துவின் திருத்தூதர்களாகப் பணி செய்ய உங்கள் ஒவ்வொருவரையும் இறையாசீரோடு வாழ்த்தி நிற்கின்றேன் என இயக்குனரின் ஆசிச் செய்தி நிறைவுறுகிறது.

**பொதுநிலை நம்பிக்கையாளரின் அழைப்பின் மாண்பு**

பொதுநிலையினர்களின் பண்புகள் மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகிறது. அவை முறையே எதிர்மறைப் பண்பு பொதுமைப்பண்பு தனிப்பண்பு ஆகும்.

பொதுநிலையினர் குருகுலத்தாரோ துறவறத்தாரோ இல்லை. ஏனெனில் அவர்கள் திருப்பட்டங்கள் பெறுவதில்லை. பகிரங்க வார்த்தைப்பாடுகள் எடுப்பதில்லை இது அவர்களின் எதிர்மறைப்பண்பாகும்.

குருகுலத்தாரையும் துறவறத்தாரையும் போன்று பொதுநிலையினரும் இறைமக்கள் கூட்டத்தைச் சார்ந்த கிறிஸ்துவின் நம்பிக்கையாளர்கள். அவர்களும் தங்களுக்கே உரிய விதத்தில் கிறிஸ்துவின் போதிக்கும் பணியிலும் புனிதப்படுத்தும் பணியிலும் ஆளும் பணியிலும் பங்கு பெறுகின்றனர். அது அவர்களின் பொதுமைப்பண்பாகும்.

**உலகியல் காரியங்களில் நெறிப்படுத்துவது பொதுநிலையினரின் தனிப்பண்பாகும்**

உலகைச் சார்ந்திருந்து உலகியல் காரியங்களில் ஈடுபட்டு உலகியல் அமைப்பை இறைத்திட்டப்படி நெறிப்படுத்துவது தான் பொதுநிலையினரின் தனிப்பண்பாகும்.

உலகைச் சார்ந்திருக்கும் பண்பு பொது நிலையினருக்கு உரியதும் தனிப்பட்ட வகையில் அவர்களைச் சார்ந்ததாகும் என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. (திருஅவை எண் 31)

உலகியல் அமைப்பு என்னவென்பதையும் சங்கம் விளக்குகின்றது. வாழ்க்கை நலன்கள், குடும்ப நலன்கள் பண்பாடு பொருளாதாரம் கலைகள் தொழில்கள் அரசியல் அமைப்புக்கள் அனைத்து நாட்டுத் தொடர்புகள் ஆகியவையும் இவைபோன்ற பிறவும் இவற்றின் வளர்ச்சியும் முன்னேற்றமுமே உலகியல் அமைப்பை உருவாக்குபவை (பொது நிலையினர் மறைத்தூதுப் பணி எண் 07)

மேற்கூறப்பட்ட துறைகளில் குருகுலத்தாரும் துறவறத்தாரும் நேரடியாக ஈடுபட வாய்ப்புக்கள் மிகவும் அரிதானவை. இதை நன்குணர்ந்துள்ள சங்கம் எந்தெந்த இடங்களில் பொதுநிலையினரால் மட்டுமே திருஅவை நிலத்தின் உப்பாகத்திகழ முடியுமோ அந்தந்த இடங்களிலும் சூழ்நிலைகளிலும் திருஅவையை பிரசன்னமாக்கி செயலாற்றுவதாய் அமைக்கவே அவர்கள் தனிப்பட்ட முறையில் அழைக்கப் பெற்றிருக்கின்றனர் (திருஅவை எண் 33) பலதுறைகள் குருகுலத்தாருக்கும் துறவறத்தாருக்கும் அன்னியமானவை ஆனால் பொதுநிலையினருக்கு அன்னியமான துறை எதுவுமில்லை.

**பொதுநிலையினர் எனும் புளிப்பு மாவு**

எனவே பொது நிலையினர் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு அவற்றை நற்செய்தியின் மதிப்பீடுகளால் ஊடுருவி புளிப்பு மாவுபோல் (மத்தேயு நற்செய்தி 13:33) மறைவாகச் செயற்பட்டு உலகின் ஒளியாக உப்பாக வாழ அழைக்கப்பட்டுள்ளனர். (மத்தேயு நற்செய்தி 5:1316)

கிறிஸ்துவின் பணிக் குருத்துவத்தில் பங்கு பெறும் குருகுலத்தார் திருப்பலியில் அப்ப இரசத்தை மட்டும் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் வசீகரம் செய்கின்றனர். ஆனால் கிறிஸ்துவின் பொதுக் குருத்துவத்த தில் பங்குபெறும் பொதுநிலையினரோ உலகை வசீகரம் செய்து இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றனர். என்று சங்கம் துணிவுடன் அறிக்கையிட்டுள்ளது. (திரு அவை எண் 34)

பொதுநிலையினர் உலகையே இறைவனுக்கு அர்ப்ணிக்கின்றனர். இதைவிட மேலான ஒரு புகழாரத் தைத் திருஅவை பொதுநிலையினருக்குச் சூட்டமுடியாது. பொதுநிலையினரே உங்கள் தனிப்பட்ட அழைத்தலை உணர்ந்து. உயர்ந்து நில்லுங்கள்.

**திருஅவையில் பொதுநிலையினர் ஆற்றக்கூடிய பணிகள்**

திருஅவை வாழ்வில் பொதுநிலையினர் முழுமையாகப் பங்கேற்க திருஅவைச் சட்டம் அவர்களுக்குத் திருஅவையின் எல்லாக் கதவுகளையும் திறந்து விட்டுள்ளது.

புனிதப்படுத்தும் பணியைப் பொறுத்தமட்டில் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒரு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொதுநிலையினர் திருமுழுக்கு அளிக்க நியமிக்கப்படலாம். (திரு அவை 861 பிரிவு 2) நற்கருணை வழங்கலாம் (திருஅவை 910 பிரிவு 2) கடின நோயுற்றவர்களுக்கு நற்கருணையை இறுதி வழி உணவாக எடுத்துச் செல்லலாம் (திரு அவை 911 பிரிவு 2) திருமணக் கொண்டாட்டத்தை நிறைவேற்ற நியமிக்கப்படலாம் (திருஅவை 1112) வாசகர் பணி மற்றும் திருப்பீடப்பணிகளைப் பெறலாம் (திருஅவை 230) நற்கருணையை ஸ்தாபகம் செய்யலாம். (திருஅவை 943) அருள் வேண்டல் குறிகளை வழங்கலாம் (திருஅவை 1168) திருப்புகழ் மாலை செபிக்கலாம் (திருஅவை 1174 பிரிவு 2)

போதிக்கும் பணியை பொறுத்தமட்டில் திருப்பலியில் வழங்கப்படும் மறையுரை நீங்கலாக (திருஅவை 767 பிரிவு 1) பொதுநிலையினர் ஆலயத்திலும் சிற்றாலயத்திலும் போதிக்க அனுமதிக்கப்படலாம் (திருஅவை 766) மற்ற எல்லா இடங்களிலும் அவர்கள் தனியாகவோ குழுவாகவோ போதிக்கும் உரிமையையும் நற்செய்தியை அறிவிக்கும் உரிமையையும் திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் அடிப்படையில் பெறுகின்றனர் (திருஅவை225 பிரிவு 1)

பொதுநிலையினர் இறையியல் கற்பிக்க திருஅவை அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் (திருஅவை 811 பிரிவு 1) பொதுநிலையினர் திருமறையில் பாடங்களைக் கற்றுக் கொடுக்க நியமிக்கப்படலாம் (திருஅவை 229 பிரிவு 3)


ஆளும் பணியைப் பொறுத்தமட்டில் பொது நிலையினரின் மறைமாவட்ட மன்றத்தில் கலந்து கொள்ள அழைக்கப்படலாம் (திருஅவை 463 பிரிவு 1 எண் 5) திருஅவைச் சட்டம் பயின்றவர்கள் திருஅவை நீதிமன்றங்களில் வழக்கறிஞர்களாக (திருஅவை 1428) நீதிபதிகளாக (திருஅவை 1421 பிரிவு 2) நியமிக்கப்படலாம்.

மறைமாவட்ட மேய்ப்புப்பணிக் குழுவிலும் (திருஅவை 512) மறைமாவட்ட நிதிக்குழுவிலும் (திருஅவை 492) பங்குப் பேரவையிலும் (திருஅவை 536) பங்கு நிதிக்குழுவிலும் (திருஅவை 537) பொது நிலையினர் இடம் பெறுகின்றனர். ஆயர் நியமனத்திலும் (திருஅவை 377 பிரிவு 3) ப்ங்குக் குருவின் நியமனத்திலும் (திருஅவை 524) பொதுநிலையினர் கருத்துக் கேட்கப்படலாம். •

1983ஆம் ஆண்டு திருஅவைச் சட்டம் பொதுநிலையினருக்கு இவ்வளவு உரிமைகளை வழங்கியுள்ளது. இருப்பினும் இவ்வுரிமைகள் வெறும் ஏட்டளவில்தான் உள்ளன. இதற்குக் காரணம் திருச்சபையின் ஆட்சியாளர்களும் பொதுநிலையினரும் ஆவர். ஏனெனில் திருச்சபையின் ஆட்சியாளர்கள் பெறுப்பு வாய்ந்த பொதுநிலையினரைப் போதிய அளவில் இன்னும் உருவாக்கவில்லை. பொதுநிலையினரும் தங்கள் உரிமைகளைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

இனிமேலாவது பொதுநிலையினர் திருஅவையில் தங்கள் கடமைகளையும் உரிமைகளையும் உணர்ந்து செயலார்வம் மிக்கவர்களாகத் திகழ முன்வர வேண்டும். பொதுநிலையினர் உலகிலும் திருஅவையிலும் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கு குருகுலத்தார் ஊக்கமளிக்க வேண்டும். பொதுநிலையினரும் திருஅவையின் பணிகளுக்கு அழைக்கப்படும் போது விருப்புடன் முன்வர வேண்டும்.


www.emami.com
emami
emami
FAIR AND TEENS
டீன் ஏஜ் பருவத்தின் மிருதுவான சருமத்திற்காகவே
தயாரிக்கப்பட்ட விசேடமான பெயானர்ச் கிரீம்
04 வாரங்களில் உங்கள் மிருதுவான சருமத்திற்கு பொழிவினை பெற்றுத்தரும்.
பாதிப்பினை ஏற்படுத்தும் சூரிய கதிர்களிலிருந்து சருமத்தினை பாதுகாக்கும்.
சருமத்தின் எண்ணைய்த்தன்மையை கட்டுப்படுத்துவதன் மூலம் முகப்பருக்கள் ஏற்படுவதை குறைக்கும்.
கற்றாளை, சந்தனம் மற்றும் குங்குமம், உட்பட இயற்கை மூலிகைகளின் குணநலன்கள் சருமத்திற்கு மென்மையையும், பிராகாசத்தினையும் பெற்றுத்தரும்.
சருமத்தின் இயற்கையான ஈரலிப்பினை பாதுகாத்து சருமத்திற்கு போஷணையளிக்கும்.
12 - 21 வயது வரையான பெண்களுக்கு மிகவும் பொருத்தமானது.
அனைத்து சரும வகைகளுக்கும் பூச முடியும்.
emami
With Actiogen Corp. USA
FAIRNESS CREAM FOR TEENAGERS
FAIR AND TEENS
25ml - Rs.165/-


EDUKO PATHWAYS
Study in AUSTRALIA
FEBRUARY INTAKE FOR 2020 IS NOW ON
Counselling on courses, university options and visa application
100% successful student visa rate
Pre-departure and Post - arrival assistance
Obtain a full-time post study work permit
Visa & course assistance for PhD candidates
All processing provided free of charge
Intake is now on for all courses; from Foundation to PhD Programmes at top Australian Universities.
Scholarships Available*. Applications are still open for 2019 intake.
MONASH University
DEAKIN UNIVERSITY
LA TROBE
THE UNIVERSITY OF QUEENSLAND
THE UNIVERSITY OF WESTERN AUSTRALIA
RMIT UNIVERSITY
QUT Queensland University of Technology
ECU
Contact us: 774246564 / 763978000 / 766472444
UCL Building, 503, Sri Jayawardenepura Mawatha, Rajagiriya

# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

# வெற்றிடங்கள்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) 2016 இன் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டத்தின் கீழ் (தாபித்தல், நிர்வாகம், மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) நிறுவப்பட்ட ஒரு சுயாதீன ஆணைக்குழுவாகும். நாட்டில் வெவ்வேறு காலங்களில் ஏற்பட்ட மோதல் மற்றும் அரசியல் கொந்தளிப்புகளின் போது காணாமற்போனோரின் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் வழங்கல், காணாமல் போனோரைத் தேடுதல் உட்பட்ட இந்தச் சட்டத்தில் பரந்த அளவான பணிகளை OMP மேற்கொள்கிறது. இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்கு அரசுக்குப் பரிந்துரைகளை முன் வைப்பதும் இதன் பணியாகும்.

**பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
புலனாய்வுப் பிரிவில் திட்டமிடல், தேடுதல் மற்றும் புலனாய்வுகளைக் கண்காணித்தல், விசாரணைகள் மற்றும் காணாமல் போனவர்கள் மற்றும் காணமல் ஆக்கப்பட்டவர்களை தேடும் செயற்பாடுகளுக்கு உதவியளித்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து சட்டம் / வரலாறு / அரசியல் விஞ்ஞானம் / மானிடவியல் / குற்றவியலில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்த ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)

**சம்பள அளவு:** 53,175 – 10 x 1375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
பாதுகாப்பு பிரிவுகளின் கண்காணிப்பு உட்பட சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்புக்கு தொடர்பான நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளை மேம்படுத்தல் உட்பட OMP இன் பணியாளர்/ஊழியர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்காக பாதுகாப்பு மூலோபாயங்களின் மேம்படுத்தல்களுக்கான பொறுப்பு, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக பணிக்குழுவினரின் நடவடிக்கைகளில் பிரிவுத் தலைவருக்கு உதவியளித்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து மனித உரிமைகள்/ சட்டம்/ சமூக விஞ்ஞானம்/ உளவியல்/ ஆலோசனை தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)

**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட தரவுப் பகுப்பாய்வாளர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்துதல் மற்றும் ஏனைய உபாயமுறைகள் புள்ளிவிபர செயற்றிறமையில் சிறந்த விளைபயனைப் பெறத்தக்கதாக மற்றும் OMP தரவுகள் முகாமைத்துவ அலகின் தொடர்புடைய தரம் பற்றிய தரவுகள் சேகரிப்பு முறைமைகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்.

**தகைமைகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து தகவல் தொழில் நுட்பம்/ கணனி விஞ்ஞானம் / கணிதம் / புள்ளிவிபரவியல் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்பட்ட ICT துறையில் தேசிய தொழில் பயிற்சித் தகைமைகள் தரம் 7 க்குக் குறையாத திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தலுடன் அரசாங்க சேவை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/நிறுவனம் அல்லது புகழ் பெற்ற நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)

**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட சமூக உளவியல் உத்தியோகத்தர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
OMP நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள்/ சமூகங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வோர்களின் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக உளவியல் ரீதியான ஆதரவளித்தல் மற்றும் சமூக சேவைகள் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்காணிப்பு உபாயமுறைகளில் உதவியளித்தல்

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து தகவல் உளவியல் / ஆலோசனை மற்றும் உளவியல் / சமூக விஞ்ஞானம் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)

**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) தொடர்புடைய ஆராய்ச்சி வேலைகளை ஆரம்பித்தல் மற்றும் நடாத்துதல் உபாயமுறைகளை அபிவிருத்தி செய்தல் உட்பட்டதாக 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு ஆராய்ச்சி அலகை வழிநடாத்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக விஞ்ஞானம் / சட்டம் / குற்றவியல் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்பட்டாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)

**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## உள்ளக கணக்காய்வாளர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) நிதி தொடர்புடைய ஆவணங்களை காலாந்தரமாக சரிபார்த்தல். கண்டு பிடிப்புகள் பற்றி தலைவருக்கு காலாண்டு அறிக்கை சமர்ப்பித்தலுடன் ஒழுங்கு முறைகளுக்கு இணங்க இருப்பதை உறுதி செய்தல்.

**தகைமைகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீடு / நிதி / வணிகம் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றில் (CIMA/ACCA/ICA) இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் அல்லது CMA யில் முழுத் தகைமை பெற்றிருத்தலுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல்.

அல்லது

3. கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருடகால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)

**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## புலன் விசாரணை உத்தியோகத்தர் — JM 1-1

**தொழிற் சுருக்கம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) புலன் விசாரணைகள் தொடர்புடைய விசாரணைகள் மற்றும் காணாமல் போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடுதல் பற்றிய தொடர்புடைய அலகின் வேலைகளிற்கு உதவியளித்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் / வரலாறு / அரசியல் விஞ்ஞானம் / மானிடவியல் / குற்றவியல் இளமாணிப் பட்டமொன்று.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளப் புள்ளி:** ரூபா 38,185/- (2019)

**சம்பள அளவு:** 42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர் — JM 1-1

**தொழிற் சுருக்கம்:**
மொழிபெயர்ப்பாளர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல். OMP யின் அனைத்து மொழிபெயர்ப்புகளுக்கும் பொறுப்பாக இருத்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பு கற்கைகள் / மொழியியல் / மொழிகள் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) தொடர்புடைய துறையில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல்.

மற்றும்

சத்தியபிரமாணம் பெற்ற மொழி பெயர்ப்பாளராக இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

**சம்பளப் புள்ளி:** ரூபா 38,185/- (2019)

**சம்பள அளவு:** 42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## ஆலோசனை வழங்குபவர் / சமூக சேவை உத்தியோகத்தர் — JM 1-1

**தொழிற் சுருக்கம்:**
உளவியல் - சமூக ஆதரவளித்தல், உளவியல் சமூக ஆதரவு தேவைப்படும் மக்களை கண்டறிதல், காணாமல் போன ஆட்களின் உறவினர்களுக்கு தனிப்பட்ட முறையில் அல்லது குழுவினராக ஆலோசனை வழங்கல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உளவியல் / ஆலோசனை வழங்கல் மற்றும் உளவியல் / சமூக விஞ்ஞானம் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்று

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள புள்ளி:** ரூபா 38,185/- (2019)

**சம்பள அளவு:** 42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## தரவு பதிவு இயக்குநர் — MA 1-1

**தொழிற் சுருக்கம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) தரவு அடிப்படை பராமரித்தல், பதிவுக்காக தரவுகள் தொகுத்தல் மற்றும் தயாரித்தல் என்பனவற்றுக்குப் பொறுப்பாக இருத்தல்.

**தகைமைகள்**

அ) க.பொ.த. (சா/தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் நான்கு பாடங்களில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
   i. சிங்களம் / தமிழ்
   ii. ஆங்கில மொழி
   iii. கணிதம்.

ஆ) க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் (பொது வினாத்தாள் தவிர்ந்ததாக) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

இ) கணினி பயிற்சி அல்லது தரவுகள் பதிவு உறுதிப்படுத்தல் கூடுதல் தகுதியாக அமையும்.

**வயது:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள புள்ளி:** ரூபா 25,018/- (2019)

**சம்பள அளவு:** 27,910 – 10 x 300 – 7 x 350 – 4 x 495 – 20 x 660 – 48,540/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## பிராந்திய ஒருங்கிணைப்பாளர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
பிராந்திய அலுவலகங்களுக்கு தலைமைத்துவம் வகித்து மற்றும் வழிகாட்டல்களை வழங்கி சீராக திறம்பட செயற்படுவதை கண்காணித்தல், மேற்பார்வையிடல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டம்/ மனித உரிமைகள்/ நிர்வாகம்/ மனித வள முகாமைத்துவம்/ பொது முகாமைத்துவத்தில் இளமாணி பட்டம் ஒன்றுடன் பதவிக்கு தொடர்பான துறையில் தகைமைக்கு பின்னரான ஓர் ஆண்டு அனுபவம்

**வயது:** 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்குக் மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

**சம்பள புள்ளி:** ரூபா 47,668/- (2019)

**சம்பள அளவு:** ரூபா 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 - 95,575/- (01.01.2020 இல் இருந்து இந்த அளவு அமுலில் இருக்கும்)

## மேலுள்ள அனைத்து வெற்றிடங்களுக்கும் பொருந்துவன.

- கணினிக் கல்வி கூடுதல் தகுதியாக அமையும்.
- விண்ணப்ப இறுதித் திகதி நேரத்தில் தேவையான தகைமைகள் விண்ணப்பதாரரினால் எட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
- தொழில் பிரிவின் கீழ் மேல் உள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- தேவையான தகைமைகளைப் பெற்றிருக்கும் காணாமல்போனவர்களின் நேரடி குடும்ப உறவினர்கள் குறித்த ஆவணங்களுடன் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் நிரந்தர நியமனமாகும்.
- தற்போது அரச துறை நிறுவனங்களில் பணியாற்றும் எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் தொடர்புடைய சான்றிதழ்களுடன் 2019 ஜூலை மாதம் 22ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **தலைவர், சிராவஸ்தி மந்திரய, இலக்கம் 32, சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பித்த பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

**தலைவர்,**
**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,**
**“சிராவஸ்தி மந்திரய”,**
**இலக்கம் 32,**
**சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,**
**கொழும்பு 07**

# ஓராண்டு விழி நீர் அஞ்சலி



மலர்வு
02 . 09 . 1934

உதிர்வு
30 . 06 . 2018

## அமரர் அருளம்மா வைற்றஸ்

**உம் நினைவில் நாம் என்றும்!**

எம் நினைவினிலே என்றும் நீங்கள் உம்முடனே உறவுடன் நாங்கள்
தென்புடனே எம் வாழ்வுதனை பண்புடனே பாரினில் தந்தீர்
எப்படியோ நீங்கள் இன்னும் எம்மோடு வாழ்கின்றீர்கள்
இப்படியே உங்கள் நினைவால் எம் இதயம் தேய்கிறதே
அப்படியே என்றாலும் ஆற்றுவதற்கு யார் வருவார்?
நிலை வாழ்வளிக்கும் வல்ல தேவனே!
அன்போடும் பண்போடும் வாழ்ந்து
எங்களையும் வாழ வைத்த அன்புத் தெய்வமே! அம்மா!!
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை மன்றாடுகின்றோம்.

**போயிட்டி,**
**இளவாலை.**

பிரிவால் துயருறும்
**மகன் (ஜெபா-சுவிஸ்)**
**மருமகள், பேரப்பிள்ளைகள்.**

(CS 21313) (13.17)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
20 . 11 . 1934

உதிர்வு
01 . 06 . 2019

கடந்த 01.06.2019 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் இளையதம்பி சிவசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அழைப்பதுடன் எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும். கண்ணீர் அஞ்சலி பிரசுரம் அளித்தோருக்கும் தொலைதூரத்தில் இருந்தும் அன்னாரைத் தேடி வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கியோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**ஆலங்குழாய் வீதி, சண்டிலிப்பாய்.** **குடும்பத்தினர்.**

(CS 10213)(14.17)


# ✚ YARL HOSPITAL

**315, Palaly Road, Thirunelvely, Jaffna. Tel : 021 222 3533**

## கண் லேசர் சிகிச்சைகளும் சத்திர சிகிச்சைகளும்




**Cataract Surgery**
கண்வில்லையில் கண்புரை படர்வதை நீக்குவதற்கான (கற்றராக்) சத்திரகிச்சை.

**TRALECULECTOMY**
கண் அழுத்தத்தை குறைப்பதற்கான சத்திர சிகிச்சை.

**DCT, DCR** } கண்ணீர்ப்பை, கண்ணீர்கான் அடைப்பதனால் தொடர்ச்சியாக கண்ணீர் வெளியே சிந்துவதை நிறுத்துவதற்கான சத்திரசிகிச்சை.




**KERATOPLASTY**
விழிவெண்படல மாற்று சிகிச்சை
(கண்மாற்று சத்திரசிகிச்சை)



**SQUINT CORRECTION**
வாக்கு கண்ணை திருத்துவதற்கான சத்திரசிகிச்சை.

**R.D SURGERY**
பிரிந்த அல்லது கிழிந்த விழித்திரையை ஒட்டுவதற்கான சத்திர சிகிச்சை.

**PHOTOCOAGULATION**
நீரிழிவு நோயால் தாக்கமடைந்த விழித்திரையின் நரம்புப் பகுதியை மற்றும் குருதி கசிவை நிறுத்துவதற்கான லேசர் சிகிச்சை.




**P.L.** } கண் அழுத்தத்தைக் குறைப்பதற்கான LASER சிகிச்சை.




தினசரி சிகிச்சை நடைபெறும்

**VENOUS THROMBOSIS**
இரத்தக்குழாய் அடைப்பால் ஏற்படும் நீர்க் கசிவை நிறுத்துவதற்கான லேசர் சிகிச்சை.




இங்கு X-Ray வசதிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினசரி கண்சிகிச்சை நிபுணர்களால் கண்சிகிச்சை நடைபெறும்
சத்திரசிகிச்சை நிலையத்தை *Dr.* குகதாசன் *Dr.* மலரவன் ஆகியோர் திறந்துவைத்தனர்.

## பணியாளர்கள் தேவை

பரந்தனில் அமைந்துள்ள பிரபல திருமண மண்டபத்திற்கு கீழ் உள்ள பணியாளர்கள் உடன் தேவை.

1. **பிரதான சமையலாளர் (Chef)**
2. **பரிமாறுபவர் (waiter)**
3. **மண்டப பராமரிப்பாளர் (பெண்கள் மட்டும், பரந்தனை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)**

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிடம் முற்றிலும் இலவசம்.

**தொடர்பு : 021 228 0555/ 077 231 5521**

## Holy Cross School of Health Science Certificate in Nursing

**பயிற்சி நெறிக்காலம் :- 9 மாதங்கள்**
**விண்ணப்ப முடிவு திகதி :- 20.07.2019**

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடைந்தவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையினை (Bio - Data) திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான தாதியர் பாடசாலை, இல,767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

**பணிப்பாளர்**
**021 222 2423/ 077 115 9391**

## English Medium Science Classes

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள தரம் 6 - 11 வரையான **(English Medium, Tamil Medium)** மாணவர்களுக்குத் தனியாகவோ குழுவாகவோ விஞ்ஞானம் கற்பிக்கப்படும்.

**S.Kirushnakanthan**
**077 434 8667**



ஏனைய சேமிப்பு கணக்கு

HNB Savings+

## உங்கள் சேமிப்புகளுக்கு அதிகமதிகமான நன்மைகள் தரும் சேமிப்புக் கணக்கு!

**7.5% வரை**
வ.வி.வீ. 7.76%
அதிகூடிய வட்டி வீதங்கள்*

இலவச டெபிற் காா்ட், இலவச இணையத்தள சேவை
இலவச மொபைல் வங்கிச் சேவைவசதிகள்

250க்கு மேற்பட்ட கிளைகள் மற்றும் 700க்கு மேற்பட்ட ATM அல்லது சுயசேவை இயந்திரங்கள் மூலம் வரையறையற்ற பண மீளப்பெறுகை வசதி

சிறந்த வட்டி வீதங்களில் வைப்பிற்கு எதிரான கடன் வசதி

*உங்கள் கணக்கு மீதி ரூ. 1 மில்லியனானதும் 7.5% வரையான வட்டியைப் பெறுவீர்கள்.

HNB | Savings+

011 2 462 462



www.emami.com

emami

## emami GOLD
### டர்மரிக் ஸ்கின் கிரீம்
**24 கரட் தங்கத்துடன்**

**கண்களை மயக்கும் பொலிவான, சிகப்பழகான சருமத்திற்கு**

**தங்கத்துகள்கள்**
சருமச்சுருக்கத்தினை குறைத்து தங்கநிறப் பொலிவினை பெற்றுத்தருகின்றது.

**மஞ்சள்**
சருமத்தினை சுத்தம் செய்து கரும்புள்ளிகள் மற்றும் தழும்புகளை நீக்குகின்றது.

**சந்தனம்**
முகப்பருக்கள் ஏற்படுவதை தடுக்கின்றது.

**குங்குமம்**
மிருதுவான சருமத்தினை பெற்றுத்தருகின்றது.

**அதிமதுரம்**
சருமத்தின் பொலிவு மற்றும் பிரகாசத்தினை அதிகரிக்கின்றது.




**தங்கதிறப் பொலிவும் பிரகாசமான தோற்றமும்**

30ml - Rs.320/-

## கல்லெடுப்பு, சபிண்டீகரண அழைப்பு



கடந்த 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**சிவஸ்ரீ கணபதிப்பிள்ளை ஐயா**
**சோமசுந்தரக் குருக்கள்**

அவர்களின் பாஷாண உத்வாசனம் (கல் எடுப்பு) நாளை (01.07.2019) திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெற்றுத் தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் சபிண்டீகரணம் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**கரைச்சிக் குடியிருப்பு, முல்லைத்தீவு.** **குடும்பத்தினர்.**

## யாழ் நகரில் காரியாலயத்திற்கான கட்டடம் வாடகைக்கு தேவை

**மூலோபாய நகர அபிவிருத்தித்திட்டம்**
**மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு**

யாழ் நகரப் பகுதியில் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள திட்ட விரிவாக்கல் அமுல்படுத்தும் பிரிவு ( PIU) பயன்பாட்டிற்கு கட்டடம்/ வீடு (2500 - 3000 சதுர அடி விஸ்தீரணம்) வாடகைக்கு பெற்றுக்கொள்ள விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**குறித்த கட்டடம் / வீடு பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்**

01. குறைந்தது 05 அறைகளுடன் போதிய விசாலமான இடத்துடன் கூட்டங்கள் நடத்தக் கூடிய இடவசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
02. வாகனத் தரிப்பிட வசதிகள் (06 வாகனங்கள்)
03. மின்சாரம், தண்ணீர் வசதி மற்றும் தொடர்பாடல் வசதி.
04. கழிப்பறையும் ஏனைய வசதிகளும்.
05. குளிரூட்டிகள் அல்லது மின்சார விசிறிகள்.
06. பிரதான வீதிக்கு அண்மித்திருத்தல் .

தயவு செய்து தங்கள் விலை மனுவை "திட்டப் பணிப்பாளர் மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டம், 04 ஆவது மாடி, செத்சிறிபாய (கட்டம் 01) பத்தரமுல்ல " எனும் முகவரிக்கு 10.07.2019 அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கட்டட வாடகைக்கான விலைமனு எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**திட்டப்பணிப்பாளர்**
**மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டம்**
**4ஆவது மாடி செத்சிறிபாய (கட்டம் 1)**
**பத்தரமுல்ல**
**தொலைபேசி : 011 288 7320 / 2**

## வேலைவாய்ப்பு

நிதி முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு வேலை ஆட்கள் தேவை.
**தகைமை:** O/L அனுபவம் உள்ளவர்கள்/ அற்றவர்கள் தேவை.
**076 112 4145**

## காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டி கடற்கரை வீதியில் 43 பரப்பு வெறும் காணி பாதையுடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
(CS24233)(11.17)
**077 546 5660, 077 546 2482**

## தேவை

அல்லிப்பளையில் தென்னந்தோட்டத்தை தங்கிநின்று பராமரிக்க ஆட்கள் தேவை. சம்பளம் 30000/= வழங்கப்படும்
**தொடர்பு - 075 978 9223**

## காணி விற்பனை

சாவகச்சேரி Town இலிருந்து 300 m தொலைவில் உள்ள நிலப்பரப்பு 5 குளி 8 உடைய காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு-**
**071 205 0206, 077 281 5064**

## மணமகள் தேவை

யாழ் இந்து உயர் கௌரவ குடும்பத்தை சேர்ந்த அரச பதவி வகிக்கும் 38 வயதுடைய 2ல் செவ்வாய் றோகினி நட்சத்திரம் கிரக பாவம் 24 உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
**076 837 4490**

## வீடு வாடகைக்கு

வவுனியா வேப்பம்குளம் 6 ஆம் ஒழுங்கையில் 3 அறை, சமையலறை அட்டாச் பாத்றூம், வாகனத் தரிப்பிடம், கிணறுசுற்றுமதிலுடன்கூடியவீடுவாடகைக்கு உண்டு.
**077 475 1655**

## வீடு வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குண்டு. அத்துடன் Room உம் வாடகைக்குண்டு.
**077 724 2427, 077 741 2713**

## விற்பனைக்கு

பான்சி கடை புடவைக்கடைக்குரிய மரத்திலான அலுமினியத்திலான அலுமாரிகள், கண்ணாடி சோக் கேஸ் வகைகள் உடனடி விற்பனைக்கு. யாழ்நகரில் K.K.S றோட்டில் விற்பனைக்கு உண்டு. **077 399 1549**

## வீடு வாடகைக்கு

யாழ்.நகர்ப்பிரதேசத்திற்கு அண்மையாக அத்தியடி புதிய வீதியில் வீடாகவோ, அலுவலகமாகவோ பாவிக்கக்கூடிய 1300 சதுரஅடி விஸ்தீரணமுள்ள வீடு 4பரப்பு காணியுடன் (Car Parking Facilities including) வாடகைக்கு உள்ளது.
(CS 26367)(4.17)
**தொடர்பு: 076 824 6113**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியை
**திருமதி கலைவாணி சற்குணநாதன்** அவர்களின்
அன்புச்சகோதரி
**ஜெகசோதி தங்கராசா** அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,**
**யா/புற்றளை மகா வித்தியாலயம்.**

## 20 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
03 . 03 . 1983

மறைவு
30 . 06 . 1999



**செல்வி ஜீத் சிவசத்தியபாலன்**



கண்ணிமைத்து விழிக்கவில்லை
இருபது ஆண்டுகள் சென்றுவிட்டதம்மா
ஒருநொடி பொழுதும் அழியவில்லை
உன் அன்பான உள்ளம் எம்மை விட்டு.........

**சூராவத்தை, சுன்னாகம்.** **குடும்பத்தினர்.**

## பணிநிலை வெற்றிடம்

எமது நிறுவனத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தேர்வாளர்களின் அனுபவம், ஆற்றலுக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

- **பைண்டிங் (திருமண அழைப்பிதழ்)**
- **காகிதாதி ஒட்டுதல் (Envelope )**

(அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புவோர்)

**சுயவிபரக்கோவையுடன் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (02-07-2019) 9.30 தொடக்கம் 12.00 மணிக்குள் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.**

**PRINT Master**
கே.கே.எஸ். வீதி, குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில்
T.P. : 021-205 3322 Mobile : 077-6622981

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி**
**நந்தினி நாகேஸ்வரன்**
(S.L.T.S -1, Science Trained)
(உப அதிபர், யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)

**சேவைக்காலம்**
யா/ சண்டிலிப்பாய் இந்துமகா வித்தியாலயம் (20.01.1989 - 20.05.1996)
மு/புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம் (21.05.1996 - 27.04.1997)
வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி (28.04.1997 - 27.09.1998)
யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி (28.09.1998 - 29.06.2019)

இன்றுடன் (30.06.2019) ஓய்வுபெற்றுச்செல்லும் எமது பாடசாலையின் உப அதிபர் அவர்களை வாழ்த்தி ஓய்வுகாலம் சிறப்பாக அமையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

## சிங்ககிரி கதிர்காமம் பஸ் சேவை

கட்டணம் 950/=

தினமும் பிற்பகல் 3.50 யாழ்ப்பாணம்
தினமும் இரவு 11.00 மணி கதிர்காமம்



தொடர்புகளுக்கு:
யாழ்ப்பாணம்
வரணி ஆசனப் பதிவகம்
தொடர்பு : 021 222 2868
077 604 8921

கதிர்காமம் : 077 529 9015/ 077 978 7824
071 551 4557

ஒன்று விட்டு ஒரு நாள் யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 5.35 மணிக்கும் கதிர்காமத்திலிருந்து காலை 5.00 மணிக்கும் சேவை உண்டு.

(CS 26328)(14.17)

தொடர்புகளுக்கு: யாழ் - 077 604 8921
கதிர்காமம் - 071 551 4557

---

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 22.10.1958

உதிர்வு 01.06.2019



முன்னைநாள் யா/ ஸ்ரான்லி கல்லூரி கணித ஆசிரியர் N.S. சண்முகநாதன் அவர்களின் அன்புப் பாரியார்

**திருமதி இராஜினி சண்முகநாதன்**

(இளைப்பாறிய ஆசிரியை - யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியபோசனமும் நாளை (01.07.2019) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் உருத்திரா மாவத்தை. வெள்ளவத்தையில் அமைந்துள்ள கொழும்பு 6 தமிழ்ச்சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

எங்கள் குடும்பக் குத்துவிளக்கின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து பல வழிகளிலும் உதவிய நண்பர்கள். உறவினர்கள். நோய்வாய்ப்பட்டவேளை சிகிச்சை அளித்த மருத்துவர்கள். ஊழியர்கள். இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய மாணவச் செல்வங்கள். பெற்றோர்கள். ஆசிரியர்கள். மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்கள். தொலைபேசியூடாகவும். மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

98 - 2/2, மனிங் பிளேஸ், கொழும்பு - 06

குடும்பத்தினர். 077 614 2961

---

## விழுதின் நிழ்ச்சித் திட்டங்களுக்கான அலுவலர்களுக்குரிய விண்ணப்பங்கள் கோரல்

விழுது நிறுவனத்தினால் அமுற்படுத்தப்படவுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் பற்றிய விடயங்களுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டமொன்றுக்கு சிரேஷ்ட பெண் சமூக அணிதிரட்டுனர்கள் யாழ்ப்பாணத்தில் வேண்டப்படுவதனால் அப்பதவிக்குப் பின்வரும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சிரேஷ்ட சமூக அணிதிரட்டுனர்கள் (பெண்):**

விழுதினால் அமுற்படுத்தப்படும் குறித்த திட்டத்துக்குப் பொறுப்பானவர்களாக இருப்பார்கள். சிரேஷ்ட திட்ட அலுவலர். சமூக அணிதிரட்டுனர்கள். அலுவலக நிர்வாக மற்றும் ஆவணப்படுத்தல் அலுவலருடன் இணைந்து பணியாற்றக் கூடியவர்களாகவும். தமது வழிகாட்டல்களினையும். ஆலோசனைகளையும் வழங்குபவர்களாகவும். உரிய நேரங்களில் சக அலுவலர்களுக்கான பயிற்சிகள். இலக்குக் குழுவினருக்கான பயிற்சிகள் வழங்குபவர்களாகவும். மற்றும் பரிந்துரைச் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர்களாகவும் தேவைக் கேற்ப மக்களுக்கான தகவல்களை வழங்கி.அவர்களை அரச மற்றும் இதரசேவை வழங்குனர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள வழிகாட்டுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.சட்டவழிகாட்டல்கள் சார்ந்து செயற்பாடுகள் உள்ளதனால் சட்டத்தரணிகளுடன் உடனுக்குடன் பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டப்படுவார்கள்.

**அடிப்படைத் தகுதிகளும்,எதிர்பார்க்கப்படும்பொறுப்புக்களும்.**

- சமூகவிஞ்ஞானம் துறைசார் பாடங்களில் அல்லது அதனுடன் தொடர்புடைய கற்கைநெறிகளில் பட்டம் பெற்றிருத்தல்.
- நலிவுற்ற மக்களுடன் இணைந்து களங்களில் பணியாற்றக்கூடிய ஆர்வமும்.சிறந்த் பொதுசனஉறவும் பேணுபவராக இருத்தல் வேண்டும்.
- திட்ட ஒருங்கிணைப்பு. அமுற்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான அனுபவம் வரவேற்கத்தக்கது.
- இலங்கையின் வடக்கு கிழக்கு மாவட்டங்களிற் பணிதொடர்பான பயிற்சிகளுக்குச் சமுகமளிப்பதற்கும் பிரயாணம் செய்வதற்கும் விருப்பம்.
- போருக்குப் பின்னரான சமூகமட்ட ஆய்வுகளுடனான தொடர்பு. சமூக.பொருளாதார.பண்பாட்டு உரிமைகள் தொடர்பாக திட்டங்களில் பணியாற்றிய அனுபவம்.
- வாழ்வாதாரச் செயற்பாடுகளுடன் சந்தை முகாமைத்துவம் தொடர்பில் பணியாற்றிய அனுபவம்.சிறந்த பொதுசன உறவு. ஆவணப்படுத்துகை ஆற்றல். ஊடக அனுபவம்.
- தொடர்புடையோருடனான சிறந்த தொடர்புகளைப் பேணிவரல்.
- தகவல் சேகரிப்பு. தரவுப்பகுப்பாய்வு. கணிப்பீடுகளை மேற்கொள்ளல். அடிப்படைக் கணினி அறிவு (Word, Excel, Power point, Internet and Email)

அடிப்படைவேதனம் ரூபா 35.000.00 இலிருந்து வழங்கப்படும். விண்ணப்பங்களை உங்களது சுயவிபரக் கோவையுடன் .விழுது. இல. 191. பௌத்தலோகமாவத்தை .கொழும்பு -04 எனும் முகவரிக்கு எதிர்வரும் 2019 ஜூலை மாதம் ஏழாம் (07)திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது info@viluthu.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

---

## வீடு வாடகைக்குண்டு

கோண்டாவில் சந்திக்கு அருகில் 4 அறைகளுடன் கூடிய பெரிய வீடும், கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் பெரிய வீடும் வாடகைக்குண்டு.

Viber- 44 7838 66 3885

---

## நன்றி நவிலல்



31.05.2019 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புக்குரிய

**அமரர் யோகேஸ்வரி இராஜரட்ணம்**

அவர்களின் துயரச் செய்தி கேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும். தொலைபேசி. மின்அஞ்சல் மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்த எமது உறவினர்கள். நண்பர்கள் மற்றும் மருத்துவ சேவை வழங்கிய மருத்துவர்கள். மருத்துவ உதவியாளர்கள் Certis Lanka Home Nursing and swift care (Pvt)Ltd, Florence Nightingale Health Care (Pvt)Ltd என்பன தொடர்ந்து பராமரிப்பு செய்தமைக்கும். மலர்வளையம் வைத்தும். இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.09, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

---

## பதவிகள் வெற்றிடம்

விழுது நிறுவனத்தின் கள மற்றும் ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் மற்றும் திட்ட உத்தியோகத்தருக்கான பதவிகள் யாழ் மாவட்டத்திற்கான விழுதுக் கிளையில் வெற்றிடமாக உள்ளதனால் பின்வரும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பதவி கள பணியினை மையப்படுத்தினாலும் ஆவணப்படுத்தலிலும் கூடிய கவனத்தினைக் கொண்டதாகும். குறிப்பாக நிறுவனத்தின் திட்டச் செயற்பாடுகளின் தரவுகளினைப் பேணுவதாகவும். அவற்றினை உடனுக்குடன் அப்டேற் பண்ணுவதும் பணியின் தேவைக்குரிய விடயமாக அமையும். விழுதின் ஆளணியினருடன் இணைந்து செயற்படுபவராகவும். விழுதின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்குக்கேற்பவும் பணிபுரிபவராகவும் இருத்தல் வேண்டும்.

**அடிப்படைத் தகுதிகளும் எதிர்பார்க்கப்படும் பொறுப்புக்களும்**

- சமூகவிஞ்ஞானம் துறைசார் பாடங்களில் அல்லது அதனுடன் தொடர்புடைய கற்கைநெறிகளில் டிப்ளோமா அல்லது இளமாணிப் பட்டப்படிப்பு.
- குறைந்தது இரு வருடங்களாவது சமூகப் பணியில் இணைந்திருந்த அனுபவம்.
- நலிவுற்றோரைச் சமூகவலுவூட்டல். பால்நிலைப்குப்பாய்வு. சந்தை முகாமைத்துவம். ஆய்வு முறையியல் மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளில் சிறந்த அறிவும் அனுபவமும் கொண்டிருத்தல்.
- ஆவணப்படுத்துகை ஆற்றல். கற்கைச் சம்பவங்களை உடனுக்குடன் நிதிவழங்குனர்களுக்கு வழங்குவதில் உதவுதல்.
- தகவல்சேகரிப்பு. தரப்பகுப்பாய்வுக் கணிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- பயிற்சிகளை நடாத்தும் ஆற்றல்.

**பின்வரும் திறமைகள் மேலதிகத் தகைமைகளாகக் கொள்ளப்படும்.**

- ஆங்கில அறிவு
- அடிப்படைக் கணினி அறிவு ( MS WORD, Excel, Power Point, Internet & Email)
- சாரதி அனுமதிப்பத்திரம் (Motorbike)
- யாழ்.மாவட்டம் பற்றிய பரிச்சயம்.

அடிப்படை வேதனம் ரூ. 35.000 இலிருந்து அனுபவத்திற்கேற்ப வழங்கப்படும். தகுதி மற்றும் திறன் அனுபவத்திற்கேற்ப வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்களை உங்கள் சுய விபரக் கோவையுடன் விழுது. இல. 191. பௌத்தாலோக்க மாவத்தை. கொழும்பு- 04 எனும் முகவரிக்கு எதிர்வரும் ஜூலை 07 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது info@viluthu.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

---

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகை ரூபா 23.000. No.10, First Lane, Off Campus Lane, Thirunelveli, Jaffna

077 109 4086 - துகன்

## வீடு வாடகைக்கு

நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு AC. சமையலறை வசதியுடன் குறுகியகால வாடகைக்குண்டு.

071 513 0100 (AKN 747)(11.17)

## பொது வேலைவாய்ப்பு

கொழும்பில் **Welding** வேலைக்கும் **Aluminium** வேலைக்கும் ஆள்கள் தேவை. இருப்பிடம் வழங்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம். (IN 12616)(11.17)

077 898 7390, 077 999 6743

## காணி விற்பனை

இளவாலை **Police Station** முன் காணி விற்பனைக்கு.

077 275 8933 (IN 12617)(11.17)

## வீடு வாடகைக்குண்டு

நாவலர் வீதியில் சகலவசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.

077 276 5005

## தேவை

யாழ்ப்பாணம் உசன் பகுதியில் உள்ள தென்னந்தோட்டத்திற்கு பராமரிப்பாளர் தேவை. வேலையில் மிகுந்த அர்ப்பணிப்பும் ஆர்வமும். O/L வரை படித்தோரும் வயது 30 - 55 விரும்பத்தக்கது.

தொடர்பு-077 762 6241

## காணி விற்பனைக்கு

மறவன்புலோவில் 101 பரப்பு வயல் நிலம் விற்பனைக்கு உண்டு.

077 768 2734

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. (குடும்பத்திற்கோ அல்லது பணிபுரியும் பெண்களுக்கோ வழங்கப்படும்)

076 641 6827, 077 6476827

## தேவை

யாழ்.நகருக்கு அண்மையில் இயங்கும் மருந்தகம் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர் தேவை. கணினி அறிவு விரும்பத்தக்கது.

076 073 6308

## வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், மானிப்பாய். சித்தன்கேணி, ஆனைக்கோட்டை. கொக்குவில் ஆகிய இடங்களில் கோழி இறைச்சிக் கடை வாடகைக்கு தேவை.

077 271 8149

## மணமகன் தேவை

கனடாவில் வசிக்கும் Hindu கௌரவ குடும்பம் 30 வயது Bachelors Degree முடித்து Financial Administrative Assistant ஆக பணியாற்றும் மணமகளுக்கு Canada, Sri Lanka நாடுகளில் வரனை எதிர்பார்க்கின்றோம்.

011 236 3663, 011 722 1674

## வீடு வாடகைக்குண்டு

393/17, கோயில் வீதி நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள வீட்டின் மேல் மாடிவீடு.3 பெரிய அறைகள். 2 **Bathroom, Kitchen, Hall** என்பவற்றுடன் வாடகைக்குண்டு.

**முற்பணம் - 200000/-**
**நிர்ணயிக்கப்பட்ட வாடகை - 25,000/-**


021 222 6461

## நீங்கள் பருகும் நீர் பாதுகாப்பானதா ?!!!

நீங்களும், உங்கள் அன்புக்குரியவர்களும் பருகும் நீர் சுத்தமானது, பாதுகாப்பானது என்று உறுதியாக கூறுவீர்களா?
தெளிவான நீரிலும் கண்ணுக்குத்தெரியாத மாசுக்களும், கிருமிகளும் உள்ளன என்பதை அறிவீர்களா?
உங்கள் வீடு மற்றும் தொழில் புரியும் இடங்களில் "EVRO" RO water filter ஐ பொருத்தி நீரிலுள்ள கல்சியம், மக்னீசியம், மாசுக்கள் மற்றும் நோய்க்கிருமிகளிடமிருந்து விடுபட்டு சுத்தமான, பாதுகாப்பான நீரை எந்தவித சந்தேகமுமின்றி மகிழ்வுடன் பருகுங்கள்.



விசேட விலைக்கழிவு / ரூ. 32,000 இருந்து
இலகுதவணை முறை / இலவச நீர் பரிசோதனை



நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியும்
மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுமான

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.581, K.K.S Road, Jaffna. (மனோகரா சந்திக்கு அருகாமையில்)
HOTLINE: 075 331 3310
Tel: 021 222 6888

## மரண அறிவித்தல்கள்

## யோசவ் நீக்கிலஸ் திஸ்ஸவீரசிங்கி கஷியன் றிச்சேட் திஸ்ஸவீரசிங்கி



தோற்றம் 12.08.1948 மறைவு 29.06.2019

கொழும்பு பேலிய கொடவைப் பிறப்பிட மாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கஷியன் றிச்சேட் திஸ்ஸவீரசிங்கி நேற்று (29.06.2019) சனிக்கிழமை இறைபத மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசவ் நீக்கிலஸ் திஸ்ஸவீரசிங்கி - அகத்தா பாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வர்களான அந்திரேஸ்பிள்ளை - லூர்த்தம்மா தம்பதியரின் மருமகனும், மேரி திரேசா (டெய்சி)யின் அன்புக்கணவரும், யோசவ் கிறேஷியன் திஸ்ஸவீரசிங்கி, மேரி நிறோஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரனி திஸ்ஸவீரசிங்கி, ஜோண்றொனால்ட் திஸ்ஸவீரசிங்கி, கிங்சிலி திஸ்ஸவீரசிங்கி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வென்ஸ்லாஸ்டேவிட், பெலிசித்தாஸ் புனிதம், டெனிசியா புஸ்பம் (ஆஸ்திரேலியா), அந்தோனிப்பிள்ளை செல்வம் (டென்மார்க்), ஸ்ரனிஸ்ளாஸ் (யோகம் - டென்மார்க்), மேரி இமெல்டா பவளம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.07.2019) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் பண்டத்தரிப்பு புனித யாகப்பர் சேமக்காலைக்கு நல்லடக்கத் துக்காக எடுததுச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**சில்லாலை தெற்கு,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

**071 218 2710, 075 047 4421**

## மரண அறிவித்தல்கள்

## அப்பாத்துரை தங்கவேலு (பொன்னுத்துரை)



தோற்றம் 15.06.1943 மறைவு 27.06.2019

சுதுமலை தெற்கு, ஐங்கரன் வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை தங்கவேலு (பொன்னுத்துரை) 27.06.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும்,சுகிர்தா, கவிதா, விஜிதா, காலஞ்சென்றவர்களான ஶ்ரீகாந்தன், ரவிகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவகோணேஸ்வரன், சுரேஸ்குமார், சுதேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும், ஆருஜன், நிரோஜன், டினோஜன், நிருஜன், சுஜனிகா, டினுஷிகா, டிஷானுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், தங்கராசா, தங்கநாயகம் மற்றும் தங்கலிங்கம், தங்கராணி, தம்பிராசா, தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

(ம.26358)(13.17)

**தகவல்**
**குடும்பத்தினர்**

## கதிரவேலு வைரவப்பிள்ளை



கீரிமலை கூவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கு அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கெண்ட கதிரவேலு வைரவப்பிள்ளை 28.06.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தெய்வி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு -சின்னத்தங்கைச்சி தம்பதிகளின் மருமகனும், சந்திரகுமாரியின் அன்புக் கணவரும், அர்ச்சனா (பிரான்ஸ்), கீர்த்தனா, சிந்துஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், றதீபனின் மாமனும், ஆரியனின் அன்புப் பேரனும், நாகம்மா, கந்தசாமி, செல்லம்மா (சுவிஸ்), முருகையா (லண்டன்), ஶ்ரீகுமார், சிவசோதி (ஜேர்மனி), காலஞ்சென்ற மகாதேவன் ஆகியோரின் சகோதரரும், சரஸ்வதி, பரஞ்சோதி, மகேஸ்வரன் (பிரான்ஸ்), சூரியகுமார், உதயகுமாரி (பிரான்ஸ்), சாந்தி, காலஞ்சென்ற பூபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், துஷ்யா, றம்யா ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மூன்றுகோயில் வீதி,**
**உரும்பிராய் மேற்கு.**

(CS/26344)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கந்தசாமி கனகம்மா



பிறப்பு 09.09.1944 இறப்பு 28.06.2019

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கனகம்மா 28.06.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராஜகுலேந்திரன் (பவா), இராஜேந்திரகுமார் (ராஜன், முன்னாள் இ.போ.ச.காரைநகர்) மற்றும் ராஜினி (சுவிஸ்), ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தியாகராஜா, ரஜனி, சத்தியரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியங்கா, பிரசின், வினுராஜன், நிறோஜன், திவ்ஜா, கம்சாயினி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் மத்தி,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்



Top up Degree
- Fast Track Degree Programme
2019/2020 (One Year)

- BA in English
- B.sc in Psychology
- B.sc in Nursing
- B.sc in Engineering
- BA in Tamil
- BA in Education
- BA in Fine Arts
- B.sc in Computer Science
- BBA in Management

தகைமைகள்
01. க.பொ.த (சா/த), (உ/த) தகைமைகள்
02. NVQ, HND அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

குறிப்பு :
- Diploma in Research Methodology, Diploma in SPSS, e-views விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
- அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினை பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்

UGC Approved

தொடர்புகட்கு -
முகாமைத்துவ நிர்வாக சபை
தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
021 450 8489, 077 602 1794
Email - degreeinfo08@ gmail.com

## விற்பனைக்கு
Bajaj 4 Stroke NP ABT XXXX இலக்கமுடைய முச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு.
(1700 Km ஓடிய நிலை)
076 047 0457

## கடை கட்டடம் காணி விற்பனைக்கு
யாழ்.நகரில் மின்சாரநிலைய வீதியில் 4 மாடி புதிய கடை கட்டடமும் கல்வியங்காடு விளையாட்டு அரங்கம் வீதியில் 2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. நேரடியாகப் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 335 9750
(CS/25576)(11,17)



## நாச்சிக்குடாவில் சிக்கியது இராட்சத அளவுடைய மீன்

கிளிநொச்சி, ஜூன் 30
நாச்சிக்குடா கடற்பரப்பில் நேற்று மீன் பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் இராட்சத அளவுடைய மீனொன்று சிக்கியது.
ஒரு வகை சுறா மீனே இது என்று குறிப்பிட்ட மீனவர்கள் சிலர் அதன் நிறை சுமார் ஆயிரம் கிலோ என்றும் தெரிவித்தனர். பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் குறித்த மீனைக் க்ண்டு சென்றனர். அரிய வகை மீனைப் பிடித்தமைக்காக பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டனர். (ம)

## வேலையாள் தேவை
யாழ்.நகரில் இயங்கும் அச்சகத்திற்கு ஒப்செற் (Kord) மெசின் பழகியவர்கள் பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது.
077 722 2259, 070 322 2525

## உடல் எடை குறைய வேண்டுமா?
◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## சின்னச் சின்ன பாலர் நாங்கள்!

சின்னச் சின்னப் பாலர் நாங்கள்
சிங்காரமாய் சேர்ந்திடுவோம்.
வண்ண வண்ணப் பூவெடுத்து
வந்து நாங்கள் சேர்ந்திடுவோம்.
மல்லிகையின் மல
ரெடுத்து
மாலை நாங்கள் கட்
டிடுவோம்.
நல்ல றோசா மலர்
எடுத்து
நடுவிலே நாம்
சேர்த்திடுவோம்.

புள்ளி மானைப்
போல நாங்கள்
புதுமையாகச் சென்
றிடுவோம்.
துள்ளி விளையாடி
நாங்கள்
துரிதமாய் சென்றிடு
வோம்.

காவடிகள் கொண்டு
நாங்கள்
கோவிலுக்குச் சென்
றிடுவோம்
செவடியைத் தொழு
திடுவோம்.
சேர்ந்து வீதி சுற்றிடு
வோம்.

பால் கொண்டு சென்
றிடுவோம் .
பக்தியோடு ஊற்றிடு
வோம்
வேல் கொண்ட முரு
கனிடம்
வேண்டும் வரம்
பெற்றிடுவோம்.

அமைதியாக அங்கு
நின்று
அன்புடனே வணங்
கிடுவோம்.
எமது நல்ல செய
லைக் கண்டு
இறைவனருளைத்
தந்திடுவார்.

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி
### திருமதி வசந்தாதேவி தனபாலசிங்கம்
(முன்னாள் பிரதம லிகிதர் – சாவகச்சேரி நகரசபை)

பிறப்பு 26.12.1947
இறப்பு 26.06.2003

திதி:- திரயோதசி (30.06.2019)



ஆண்டுகள் பதினாறு சென்றாலும்
எம் உள்ளத்திலே என்றென்றும்
வீற்றிருக்கும் எமது தெய்வமே உங்கள்
அன்பான அரவணைப்பும்
அறிவுரைகளும் இல்லாமல்
தவிக்கின்றோம் –
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமகன்மார், மருமகள், பேரப்பிள்ளைகள்
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்



### கந்தையா செல்வரத்தினம்
(ஓய்வுநிலை பொறியியலாளர்)

கொக்குவில்கிழக்கை பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா செல்வரத்தினம் கடந்த (28.06.2019) வெள்ளிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, மற்றும் பரமேஸ்வரி, கமலாதேவி (ஓய்வுநிலை உட்துறை கணக்காய்வாளர், நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம்), ஜெயறாஸ் (ஓய்வுநிலை உதவி வெளிக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கலைச்செல்வி (ஆசிரியர் யா/இந்துமகளிர்கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரசாந்தியின் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2019) பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் பி.ப 2.00 மணிக்கு தகனஞ்செய்யப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி அருகாமை,
கொக்குவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.
0212212365, 0772915970

## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 05 . 1942



உதிர்வு 29 . 06 . 2019

### திருமதி சீத்தாதேவி தியாகராஜா

யாழ்ப்பாணம் கச்சேரியடியைப்பிறப்பிடமாகவும் 116 கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சீத்தாதேவி தியாகராஜா நேற்று (29.06.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேஷ்வரி, அருணாச்சலம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா தியாகராஜாவின் (உதவி ஆணையாளர் மதுவரித்திணைக்களம்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப . 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை ,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0765438081

## வாழ்த்துகின்றோம்
### சமாதான நீதவான் நியமனம்



பாண்டியன்தாழ்வு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **A.J.J.சுரேந்திரராஜ்** அவர்கள் யாழ்.மாகாண மேல் நீதிமன்று நீதிபதி **கௌரவ அன்னலிங்கம் பிறேமசங்கர்** முன்னிலையில் சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கடந்த மூன்று வருடங்களாக யா/ இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் தற்போது உபதலைவராகவும். பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய அருட்பணி சபை செயலாளராகவும். பாண்டியன் தாழ்வு சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்க செயலாளராகவும். சிவலிங்கம் சிறுவர் கௌரவிப்பு குழு நிர்வாக சபை உறுப்பினராகவும். சமூக நல பணியாள ராகவும் செயற்பட்டு வருகின்ற இவரைப் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

**வாழ்த்துவோர் :- ஜெனிவன் சார்பாக நண்பர்கள்.**

---

**நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு**

**ஜேர்மன் சப்பேட் அல்சேசன் நாய்க்குட்டி**

விற்பனைக்குண்டு (45 நாள்)

**076 825 6629, 077 196 9917**

---

**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் பிரபல நகை வியாபார நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.

**076 658 0661**

---

**மணமகள் தேவை**

22.09.1985 பிறந்த 8இல் செவ்வாய் கிரகபாவம் 45 லண்டன் PR தொழில் சுப்பர் மார்கட், விவாகரத்து ஆன மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: **077 181 5868**

---

## Your Life Safety with Our Helping Service
## உங்கள் வாழ்க்கை முன்னேற்றத்துக்கான வழிகாட்டல் சேவை

எமது நிறுவனத்தின் வவுனியாக் கிளைக்குக் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள்**

- முகாமையாளர்
  - தகைமை :- க.பொ.த.சா.தரம், உயர்தரம் சித்தி
- அலுவலக உத்தியோகத்தர்கள்
  - தகைமை :-க.பொ.த.சாதாரண தரம்
- கணக்காளர்
  - வயது - 18 - 35 வரை
- வெளிக்கள உத்தியோகத்தர்
- கணினி இயக்குநர்

சம்பளம் மாதாந்தம் ரூபா 25,000 தொடக்கம் ரூபா 30,000 வரை மேலதிகக் கொடுப்பனவுகளும் உண்டு.
எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

2019.07.05 ஆம் திகதிக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

**070 419 9407, 070 325 8303**

இல.21, வைத்தியசாலை முன்பாக குடியிருப்பு, வவுனியா.

---



**ashok** STEEL ™

**நீடித்த வலிமை**

# அசோக் TMT

**அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்**

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு,
பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும்,
ஸசந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த
அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க
15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.108,000 + VAT

SLS 375

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

---



see more news in
NEWUTHAYAN.COM

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30
தாழ்வுபாடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மன்னார் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முத்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து எஸ் எச். சி. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். விக்ரறிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஜூன் 30
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 31ஆவது தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட போட்டித் தொடரில் பெண்களுக்கான அரையிறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. இதில் கொழும்பு மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணி மோதவுள்ளது. (23)




# கிண்ணத்தை சுவீகரித்தது நெல்லியடி மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூன் 30
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது ஆண்களுக்கான எல்லே போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. 40 பந்துகளைக் கொண்டதாக இறுதி ஆட்டம் இடம் பெற்றது.
இதில்முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 3 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக காஸ்ரோ, கொலிங்டன், றொமின்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டத்தைப் பெற்றனர்.
4 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 10 பந்துகளில் 2இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பாக பிரதிக்சன் அம்சன் சாகீர் மற்றும் சாருசன் ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தை பெற்றனர். (23-108)



## யாழ். மாவட்ட அணி கிண்ணம் வென்றது

வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்ட பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது.
இதில் யாழ். மாவட்ட அணி 33:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. (422)

## போட்டி முடிவுகள்

மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரில் வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர்கள் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் சென். செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. ஆட்டநாயகனாக திக்கம் இளைஞர்கள் விளையாட்டுக்கழக அணியின் அகிலதீபன் தெரிவு செய்யப்பட்டார். இந்தப் போட்டியின் சுப்பர்கோல் அடித்த வீரனாக டெனி தெரிவானார். (23)

---



மற்றுமொரு போட்டியில் கொடிக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. ஆட்டநாயகனாக சக்திவேல் அணியின் சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டார். போட்டியின் சுப்பர்கோல் வீரனாக சக்திவேல் அணியின் பார்த்தீபன் தெரிவானார். (23)

# முன்னிலையில் கொக்குவில் இந்து



யாழ்ப்பாணம், ஜூன் 30
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கத்தினால் நடத்தப்படும் 15 வயதுப்பிரிவினருக்கான பிரிவு 3 இக்கான கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னிலை பெற்றது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது.
தனது முதலாவது இன்னிங்ஸிக்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 44.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.
அணி சார்பில் நர்த்தனன் 26 ஓட்டங்களையும், சுபராங்கன் 16 ஓட்டங்களையும், பிரிந்தன் 16 ஓட்டங்களையும், சதீஸ் 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் யதுஷன், ஜெனிசன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், கீதப்பிரியன் 2 இலக்குகளையும் கபிசன், அர்சன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
தனது முதலாவது இன்னிங்ஸிக்காகத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 48.3 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.
அணி சார்பில் லக்ஸ்மன் 50 ஓட்டங்களையும், தனுஸ் 40 ஓட்டங்களையும், அபிராம் 30 ஓட்டங்களையும், சுபிசன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் நர்த்தனன் 4 இலக்குகளையும், பிரிந்தன் 3 இலக்குகளையும், கோகுலப் பிரியன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது இரண்டாவது இன்னிங்ஸிக்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 21 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றது.
பிரிந்தன் 12 ஓட்டங்களையும், மதுஷன் 8 ஓட்டங்ககளையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனிங்சன், 3இலக்குகளையும், லக்ஸ்மன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)



எல்லே போட்டியில்;

# மூன்றாமிடத்தைப் பிடித்தது ஸ்கந்தவரோதயா கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூன் 30
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது ஆண்களுக்கான எல்லே போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 2 ஓட்டங்களால் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றது.
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை எதிர்த்து வரணி மத்திய கல்லூரி அணி மோதியது.
40 பந்துகளைக் கொண்டதாக ஆட்டம் இடம்பெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 40 பந்துகளில் 11 ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வரணி மத்திய கல்லூரி அணி 9 ஓட்டங்களை மட்டுமே பெற்று 2 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது. இதன் மூலம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 2 ஓட்டங்களால் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை பெற்றது. (23)

## இன்று காவி நிற ஜெர்சியுடன் களமிறங்கும் இந்திய அணி




நடப்பு உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் விளையாடும் அணிகள் ஒரே நிறத்தைக் கொண்ட ஜெர்சியை உடைய அணிகள் ஒரே போட்டியில் விளையாடும் போது ஜெர்சியை மாற்ற வேண்டும் என பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கட்டுப்பாடு விதித்தது. இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் தங்களுடைய ஜெர்சியை மாற்ற வேண்டியதில்லை எனவும் அறிவித்தது. அந்த வகையில் இலங்கை அணி மஞ்சள் நிறத்தினாலான ஜெர்சியை மாற்றியுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் போட்டியில் இந்திய அணி இங்கிலாந்து அணியை எதிர் கொள்கின்றது. இதில் இந்திய அணி தான் அறிமுகப்படுத்திய காவி நிறத்திலான ஜெர்சியை அணியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்திய அணி முதன் முதலாக நீல நிறத்திலிருந்து காவி நிறத்துக்கு மாறுகின்றது.

# மிரட்டியது ஆப்கான்; பாகிஸ்தான் உயிர்ப்புடன்




பாகிஸ்தான் வீரர் வாசிம்மின் பொறுப்பான ஆட்டத்தால் அந்த அணி ஆப்கான் அணியுடன் போராடி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 9 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்துக்கு முன்னேறி அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துள்ளது.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்றில் ஆப்கான் பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் பாகிஸ்தான் அணி 3 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கான் அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. அணி நிதானமான ஆட்டத்தை ஆரம்பித்திருந்தது. எனினும் முதலாவது இலக்கு இழக்கப்பட்டதும் அடுத்து களமிறங்கிய ஹசமதுல்லா சகிடி வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார். அணியின் மத்திய தர வரிசை வீரர்களான அஷ்ஹார் ஆப்கான், சட்ரான் ஆகியோர் அணிக்கு பொறுமையுடன் களத்தில் நின்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். ஏனைய வீரர்களும் தங்களது பங்களிப்பை ஓரளவு செய்தனர்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சு கடினமாக காணப்பட்டாலும் அதற்கு முகம் கொடுத்து ஓட்ட எண்ணிக்கையை ஆப்கான் அணி துடுப்பாட்ட வீரர்கள் உயர்த்தினார்கள். எனினும் அமீரின் பந்து வீச்சு ஆப்கான் துடுப்




பாட்ட வீரர்கள் முன் எடுபடவில்லை. ஷா அப்ரிடி 4 இலக்குகளைச் சாய்த்து ஆப்கான் அணியின் ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்தினார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியைக் கொடுத்தனர் ஆப்கான் பந்து வீச்சாளர்கள். அணி எந்தவொரு ஓட்டங்களையும் பெறாது தனது முதலாவது இலக்கை இழந்தது. பாபர் அசாம் இணைந்து அணிக்கு நல்லதொரு இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார். எனினும் பாகிஸ்தானின் இலக்குகள் ஒரு சராசரியில் இழக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இறுதி வரையும் போட்டி விறுவிறுப்பாக்க் காணப்பட்டது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 6 ஓட்டங்கள் பாகிஸ்தான் அணிக்கு தேவைப்பட்டது. 3 ஆவது பந்தில் ஆப்கான் அணி ரன் அவுட் ஆட்டமிழப்பு ஒன்றை தவறவிட்டிருந்தது. அந்த ஆட்டமிழப்பு இடம்பெற்று இருந்தால் பாகிஸ்தான் அணி மண் கௌவியிருக்கும். பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர் வாசிம் இறுதிவரை ஆட்டமிழக்காமல் நின்று அணியின் வெற்றிக்கு பங்காற்றினார். அணி 49.4 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றியை அடைந்தது. ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணி வீரர் வாசிம் தெரிவானார்.

கோபா கால்பந்துத் தொடர்;

## ஆர்ஜென்ரீனா அணி அரையிறுதிக்கு தகுதி

கோபா அமெரிக்கா கால் பந்து காலிறுதி ஆட்டத்தில் நேற்று இடம்பெற்ற ஆர்ஜென்ரீனா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெனிசூவெலாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேற்றம்.




கோபா அமெரிக்க கால் பந்து தொடர் பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் 12 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. இந்தப் போட்டியில் காலிறுதிக்கு 8 அணிகள் தகுதி பெற்றன. இதில் முதலாவது காலிறுதியாட்டத்தில் பிரேசில் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் வெனிசூவெலா-ஆர்ஜென்ரீனா அணிகள் பலப் பரீட்சை நடத்தின. முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்து 10ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணி வீரர் மார்ரின்ஸ் ஒரு கோலைப் போட்டார். முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் ஆர்ஜென்ரீனா அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தது வெனிசூவெலா வீரர்கள் எப்படியாவது ஒரு கோலைப் போட்டு விட வேண்டும் என்ற முனைப்புடன் பந்துகளை நகர்த்தினார். அவர்கள் 6 தடவைகள் ஆர்ஜென்ரீனாவின் கோல் கம்பங்களை நோக்கி பந்துகளை அடித்தும் அதனை கோலாக்க முடியவில்லை. ஆனால் அதிகமான நேரம் வெனிசூவெல வீரர்களின் கட்டுப்பாட்டிலேயே பந்து இருந்தது. எனினும் அவர்களால் இறுதி வரை எந்தவொரு கோல்களும் அடிக்க முடியாமல் போனது. ஆட்டத்தின் 74ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா வீரர் செல்சோ ஒரு கோலைப் போட இறுதியில் ஆர்ஜென்ரீனா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.




### இந்திய அணியின் புதிய 'ஜெர்சிக்கு' விமர்சனங்கள்

நடப்பு உலகக் கிண்ணத்தில் இன்று இடம்பெறும் போட்டியில் இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிராக ஆடுகின்றது. இதில் இந்திய அணி முதன் முதலாக காவி நிறம் கலந்த நீல நிற ஜெர்சியுடன் களமிறங்குகின்றது. இதற்கு பல்வேறு தரப்பினர்களிடம் இருந்து விமர்சனங்கள் வந்துள்ளன. குறிப்பாக இந்திய ரசிகர்கள் பலரும் இந்த நிற ஜெர்சி குறித்து விமர்சித்தனர். அதாவது, இந்திய பெற்றோல் நிலையத்தில் நிற்பவர்களின் சீருடை போல் உள்ளது என்றும், பீட்சா விற்பவர்களின் சீருடை போல்உள்ளது என்றும் விமர்சித்துள்ளனர். ஆனால் இது குறித்து அணித் தலைவர் கோக்லி இந்த நிற ஜெர்சி தனக்கு மிகவும் பிடித்துள்ளது எனத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## குறும்படத்தில் நடிக்கும் தீவுகளின் வீரர் பிராவோ

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான பிராவோ நடிக்கும் குறும்படம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான பிராவோ, கடந்தாண்டு பன்னாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். இருப்பினும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரி-20 தொடர்களில் விளையாடி வருகிறார்.

அந்த வகையில் ஐ.பி.எல். தொடரில் டோனி தலைமையிலான சென்னை அணிக்காக விளையாடியுள்ளார். இவர் கிரிக்கெட் மட்டுமல்லாது பாடல் பாடுவதிலும் கவனம் செலுத்தி வருகிறார். குறிப்பாக இவர் பாடிய சம்பியன் பாடல் உலக அளவில் ரசிகர்களை கவர்ந்தது.

இதேபோல் இவர் தமிழில் வெளியான சித்திரம் பேசுதடி படத்தின் 2ம் பாகத்தில் "ஏன்டா" என்ற பாடலை பாடியுள்ளார்.

இந்த நிலையில், அவர் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான குறும்படத்தில் நடிக்க உள்ளார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு நேற்று வெளியானது. இந்தக் குறும்படத்தின் படப்பிடிப்பு கோவையிலும், மேற்கிந்தியத்தீவுகள் ரினிடட் அண்டு டோபாக்கோவிலும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புளோரன்ஸ்நைற்றிங்கேள் தாதியர் பயிற்சி பாடசாலை

தனியார் வைத்தியசாலையில் தாதியாகத் தொழில்புரிய ஆசைப்படுகின்றீர்களா?

- ஒருவருட பயிற்சிப் பாடநெறி
- பாடமுடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- சிரேஷ்ட தாதியர்கள் மூலம் இலகுவான பாடப்பயிற்சிகள்
- பயிற்சியின் பின் நிரந்தர வேலை வாய்ப்புக்களை நாங்களே பெற்றுத் தருவோம்.

மேலதிக அறிவுறுத்தல் → தனியார் வைத்திய சாலையில் சான்றிதழ் இன்றி வேலை செய்வோருக்கு குறுகிய கால பாட பயிற்சி உடன் சான்றிதழ் வழங்கப்படும்.

**தகைமைகள்**

- கல்வி O/L, A/L
- வயது 18 - 35
- உயரம் :- 125CM மேற்பட்டவர்கள்
- நிறை :- 38kg - 80kg

தொடர்புகளுக்கு:- 077 718 6438

முகவரி:-
K.K.S.றோட், மருதனார்மடம்
(ஆஞ்சநேயர் கோயில் முன்பாக)
021 492 8916
குஞ்சர் கடையடி, நெல்லியடி
(சுபாஸ் பேக்கரி மேல்தளம்)
021 433 8919

## Techno World
## தொழில்நுட்பப் பிரிவு
### A/L 2021 ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

குறிப்பு: 2020 மாணவர்களுக்கான தனிப்பாட அனுமதி வழங்கப்படுகின்றன.

30.06.2019
ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30

077 017 5346
077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

## INFORMATION TECHNOLOGY PARK

Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Digital Infrastructure & Information Technology

MPCS Building
127,K.K.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**JUNE BATCH**

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in information Technology
- Dip.in Computer Programming

**Online Course** 06 Month

- Dip.in PC Application & Office Management

**Languages** 06 Month

- VB.net
- PHP
- C/C++
- C#
- Java

**Workshops** 10 hours

- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 12.07.2019
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 14.07.2019

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
- Executive Officer -

## வீடு வாடகைக்குண்டு

வண்ணார்பண்ணையிலுள்ள B.A தம்பிலேனில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு அரச, வங்கி ஊழியருக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

831/34, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1781

## வேலையாள்கள் தேவை

கொழும்பு யாழ்ப்பாணம் A/C Busல் உதவியாளராக பணிபுரிய ஆட்கள் தேவை.
ஆண்கள் மட்டும்

தொடர்புகளுக்கு - 076 016 7777

## Receptionist தேவை

பிரபல **Guest House** ஒன்றிற்கு ஆங்கில அறிவு உள்ள வரவேற்பாளர் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 700 3617, 021 222 0227

## வீடு வாடகைக்கு

கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள 2அறை, கோல், சமையலறையுடன் அமைந்த புத்தம் புதிய ஆடம்பர A/C உடன் கூடிய வீடு மாத வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 955 9442
076 177 3446

## வேலைக்கு ஆள்கள் தேவை

மேசன் மற்றும் கூலி ஆள்கள் உடனடித் தேவை. தங்குமிட வசதிஉண்டு. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். மேலதிக நேரக் கொடுப்பனவும் உண்டு.

தொடர்பு: 077 536 8275

## வீடு வாடகைக்கு

10 பரப்புக் காணியுடன் வீடு ஆடியபாதம் வீதியில் மருத்துவபீட நுழைவாயிலுக்கு முன்னால் வாடகைக்குண்டு.
(நிறுவனங்கள் தொழில் ஸ்தாபனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 606 9188
077 308 6837/077 545 8193

## காணி விற்பனைக்கு

கரந்தன், நீர்வேலி மேற்குப் பகுதியில் நாகபூசணி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள 2பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 394 4883
077 959 6774

## விற்பனைக்கு

தரமான சீமெந்துக்கற்கள், தூண்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-076 760 3066

## நியூபாட்டா மொத்த விற்பனை

மொத்த விலை
சிறிது 72/=
பெரிது 85/=
தொகையாக பெற்றுக் கொள்பவர்களுக்கு

வடமாகாண முகவர் :
077 879 4148
077 005 8236

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு கிளை உதவியாளர் (ஆண்) தேவை.

**தகைமைகள்**

- A/L சித்தி
- நகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை
- வயது எல்லை - 18 - 30

076 690 8993,
076 690 8961



கோபா கால்பந்துத் தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்றில் சிலி - கொலம்பியா அணிகள் மோதிய போட்டியில் சிலி அணியின் ரசிகர்கள் வண்ணங்களால் தோற்றமளித்த காட்சி.

## Spoken Engilsh
### (03 மாதம்)

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோர், ஏனையோர்
**Personal Classes, Group Classes**

077 640 8622

## பிரபல்ய மருந்தகமான CITY MEDICALS யாழ்ப்பாணத்திற்கு

பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத்தேவை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**குறிப்பு:** சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 076 149 7327 OR 021 222 3880 (9.00 am - 6.00pm)

## வேலை வாய்ப்பு

தனியார் நிறுவனத்துக்கு சுத்திகரிப்பு மற்றும் தோட்ட வேலைக்கு ஆண் - வயது 18 - 35 வரை

பிரெஞ்சு மொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்
ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்:

021 222 8093

## சிறுநீரகம் தேவை

O, A இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(49 வயது)

077 928 5016/077 937 3978

## සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▶ 257
சீட்டிழுப்பு திகதி ▶ 29.06.2019 சிவப்பு

ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 13 31 60
விதி எண்: 05

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10, 865, 460/=

03.07.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3202 திகதி: 2019.06.29 சனிக்கிழமை
ශනිදා වාසනාව SATURDAY FORTUNE
பச்சை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 05 12 30 59 A
போனஸ் இலக்கம்: 63
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 49,162,080/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB-space-LOT-space-SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அவசர துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 776

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 654
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.06.29

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,217,620/-

வெற்றி இலக்கங்கள்: 15 19 46 61
ஆங்கில எழுத்து: N

அபிவிருத்தி லொத்தர் சபை

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30 .06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.